www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

K. JUDE
දිනමුරසු වාරමලර්

பக்கம் 20 ரூபா 11/00
ஆக.16-22,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 270

## உக்கிரச் சமருக்குப் பச்சைக் கொடி



## ஒத்திவைப்பும் உள் நோக்கமும்

## மனம் மாறினாரா ஜனாதிபதி



## சிம்ரானின் சிநேகிதர்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## அவசரம்! அவசியம்!!

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

மூன்றாம் தரப்பு
மத்தியஸ்த கோரிக்கையை
ஜனாதிபதி நிராகரித்துள்ளார்!

நிராகரிக்காவிட்டால்தான்
அது ஆச்சரியம்!

புலிகள் ஈழக்கோரிக்கையை
கைவிட்டால்
மூன்றாம் தரப்பு
மத்தியஸ்த கோரிக்கையை
பரிசீலிக்கலாம் என்கிறார்!

ஜனாதிபதியின் நிபந்தனைகளை
புலிகளும்-அவர்களது
நிபந்தனைகளை ஜனாதிபதியும்
ஏற்றுக்கொள்ளக்கூடிய
சூழல் இருக்குமானால்
பின்னர் எதற்கு
மூன்றாம் தரப்பு?!

எத் தரப்புகளுக்கு
இடையேயும்
இணக்கம் காணமுடியாத
சூழல் இருப்பதால்தான்
மூன்றாம் தரப்பு
மத்தியஸ்தம் கோரும்
அவசியம் நேர்ந்திருக்கிறது!

இந்தியாவிடம் தற்போது
மத்தியஸ்தம் கேட்டிருப்பது
விடுதலைப் புலிகளல்ல!

அரசை ஆதரிக்கும்
தமிழ்க் கட்சிகள்தான்
அரசியல் தீர்வுக்கு
மத்தியஸ்தம் கேட்டுள்ளன!

தன்னை நாடிவந்த
தமிழ்க் கட்சிகளின்
நம்பிக்கைகளைக் கூட
அரசாங்கம் தகர்த்துவிட்டது
என்பதன் வெளிப்பாடே
இக்கோரிக்கை!

நாடி வந்தவர்களையே
வாட வைத்துவிட்டு.
ஈழக்கோரிக்கையைக் கைவிட்டு
"நாடி வாருங்கள்!" என்று
புலிகளை அழைப்பது
எப்படிப் பொருத்தமாகும்?

தமிழ்க் கட்சிகளின்
கருத்துக்களை செவிமடுக்க.
அவற்றை ஆராய
அரசுக்கு இதுவரை
தடையாக இருந்தது எது?

மூன்றாம் தரப்பு
மத்தியஸ்தம் கேட்குமளவுக்கு
இக் கட்சிகளை
அரசு நம்பிக்கை இழக்கச்
செய்யக் காரணமாக
இருந்தது என்ன?

ஈழக்கோரிக்கையா?
ஆயுதப் போராட்டமா?

இரண்டையும்தான்
அக் கட்சிகள் கைவிட்டு
பல்லாண்டுகளாகிவிட்டனவே!

சந்திரிக்கா அரசு பதவிக்கு
வந்து நான்கு ஆண்டுகள்!

இந்த நான்கு ஆண்டுகளில்
குறைந்தபட்சம்
இந்த தமிழ்க் கட்சிகள்
ஏற்கக்கூடிய தீர்வையாகிலும்
ஒப்பேற்ற முடியாமல்
போனது ஏன்?

அரசியல் தீர்வு
விடயத்தில் மட்டுமல்ல,
அன்றாட அவலங்கள்
விடயத்தில்கூட
தமிழ்க் கட்சிகளின்
கோரிக்கைகள் பல
குப்பைக் கூடைகளில்தான்!

எனவே, மூன்றாம் தரப்பு
மத்தியஸ்தம் என்பது
அவசரம்! அவசியம்!

அதனை இலங்கை அரசு
தானாக ஏற்காது!
ஏற்கவைக்குமளவுக்கு
அக் கோரிக்கைக்காக
தமிழ்க் கட்சிகள்
அரசியல் ரீதியாக
போராட முன்வரவேண்டும்!

குறிப்பிட்ட ஒரு நாட்டை
நோக்கியதாக அல்லாமல்,
பொதுப்படையானதாக
முன்வைப்பதே விவேகம்!

இல்லையெனில்,
குறிப்பிட்ட நாடு மறுத்தால்
அக்கோரிக்கையே
அடிபட்டுப்போகும்!

வெறுமனே கோரிக்கை
விடுத்துவிட்டு இனிமேலும்
அரசின் இழுத்தடிப்பு
நாடகங்களில் பங்குகொண்டால்
தமது கோரிக்கைக்கு
தமிழ்க் கட்சிகள்
தாமே குழிபறிப்பதாகிவிடும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்


# ஆன்மீகம்

## நிம்மதியளிப்பது இறை நம்பிக்கை

இறைவனை நம்பும் மனம் மற்றதில் அதிகம் நாட்டம் கொள்வதில்லை. நாட்டம் எதிலாவது இருந்தாலும், இறைவன் அதனைத் தனக்குத் தருவான் என்று நம்புவதால் அதிகம் அலைவதில்லை. இவ்வாறு உணர்ச்சிவசப்படுவது குறைந்து வருவதால் நிம்மதியாக இருக்கின்றது. "இறைவனைப் பணிந்து பணிபுரிவதே உலக சுகத்திலிருந்து முக்திவரை அடையவைப்பது!" என்ற கொள்கையை சரணாகதித்துவமாகப் போதித்த ஸ்ரீ இராமாநுஜர் ஓர் அத்வைதியிடம் வாதப் போர் புரியும்படி நேர்ந்தது. யஞ்ஞமூர்த்தி என்ற அந்த அத்வைதி சாதாரணமானவரில்லை. நிறையப்படித்தவர். சிறந்த அறிவாளி. பதினெட்டுநாட்கள் வாதம் நடந்தது. ஸ்ரீ இராமாநுஜரால் யஞ்ஞமூர்த்தியை வெல்ல இயலவில்லை. மனம் மிக வாடிய நிலையில், "இறைவனைப் பற்றிய எனது கொள்கை உண்மையெனில் அது வெல்லட்டும்! அது இறைவனது பொறுப்பு". என விட்டுவிட்டு நிம்மதியாக உறங்கிவிட்டு மறுநாள் நிர்மலமான மனத்துடன் வரவே ஸ்ரீ இராமாநுஜரின் ஒளி வீசிய அமைதியான தோற்றம்கண்டு யஞ்ஞமூர்த்தியே தமது தோல்வியை ஒப்புக்கொண்டு அவருக்குச் சீடராகிவிட்டார். யஞ்ஞமூர்த்தியின் கனவில் இறைவனே தோன்றி ஸ்ரீ இராமாநுஜரைப் பற்றிக் கூறினான் என்பர்.

எப்படியோ இறைவனை நம்பிய அவரை இறைவன் கைவிடவில்லையல்லவா? இப்படி எப்படிப்பட்ட இக்கட்டான நிலையிலும் இறை நம்பிக்கை அளிப்பது 'நிம்மதி'.

தொகுப்பு: அ.அரசரெத்தினம், சேனையூர்-06.



## ஜும்ஆ நாளினுடைய சிறப்புக்கள்

இறைவன் நமக்கு அருளியுள்ள நாட்களிலெல்லாம் மிகவும் சிறப்புக்குரிய நாளாக வெள்ளிக்கிழமையை அவர் ஆக்கியுள்ளார். இந்நாளினுடைய சிறப்பை அறிந்திடாத பலர் அந்நாளில் தமக்குக் கிடைக்கக்கூடிய மேலான நன்மைகளை அடைந்திடத் தவறிவிடுகின்றனர்.

வெள்ளியன்று புரியும் அமல்களுக்குக் கிடைத்திடும் நற்கூலிகளோ மிகவும் மகத்தானவை.

"வெள்ளி இரவிலோ பகலிலோ என்மீது ஸலவாத்துச் சொல்வோர்களின் நூறு தேவைகளை அல்லாஹ் நிறைவேற்றி வைப்பதுடன் அவற்றை என்னிடம் அனுப்பி வைக்குமாறு ஒரு வானவரையும் (மலக்கு) ஏற்படுத்துவான். அவர் எனக்கு அவற்றை அனுப்பிக் கொண்டே இருப்பார். அவருக்காக நான் இறைவனிடம் இறைஞ்சவும் மன்னிப்புக் கேட்கவும் செய்வேன்." (நபிமொழி)

"ஒருவர் வெள்ளியன்று ஜும்ஆவுடைய நேரத்தில் அதிகப்படியான ஸலவாத்துக்களை ஓதிவருவாராயின் மறுமையில் அவருடன் பேரொளி ஒன்று வரும். அது மஹ்ஷர் வெளியிலுள்ள அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுக்கப் பெறினும் அது போதுமானதாயிருக்கும். மேலும், அவருக்கு சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் மொழிவதோடு, மறுமையில் சாட்சி கூறுபவராகவும், மன்றாடுபவராகவும் ஆக்கிவிடுவேன்." (நபிமொழி)

தொகுப்பு: வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல.267

### பரிசுக்குரிய கவிதை



### நெடுந்தூரப் பயணம்

வெடிபட்ட மானைப்போல!
மருண்டு நீ ஓடிவந்து;
தெளிந்த நீர் தாகம் தீர்க்க
எதிர்வரும் அடர்ந்த காடு-
பயமின்றிக் கடக்கலாமோ?
கக்கூத்தில் குழந்தை வேறு;
இன்று நீர் தங்கி ஆறி;
நாளையே தொடரலாமே!

திருமதி நேசமணி சிவபாதம்-
பிரெட்றிகா வீதி, கொழும்பு.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

**போகும் இடம்!**

நாவரண்டு
தாகம் எடுத்தாலும்...
நாம் புரண்ட...
மண் மறந்து,
துணை இழந்து
போகின்றோம்...
போகும் இடம்
தெரியாமல்...!

கயல் வண்ணன்-வவுனியா.

**எண்ணம்!**

உயிரின் எச்சத்தை
கைகளில் ஏந்தி
உயிர் வாழ
முயற்சி!

சுபா வரன்-கண்டி.

**வற்றியதேனோ...?**

அம்மா!
நீ அருந்தும் நீரமுதம்
வற்றவில்லை இன்னும்;
நான் பருகும் பாலமுதம்
வற்றியதும் ஏனோ?

அ. சந்தியாகோ- கண்டி.

**எது ஆகாரம்?**

தாயின் பசிக்கு
நீர் ஆகாரம்!
சேயின் பசிக்கு
எது ஆகாரம்?

ஆர். பாலகிருஷ்ணன்-
கெண்டகொல்ல,
மாத்தளை.

**ஒரு நேர உணவு!**

தேயிலைக்கு உரமாகும்
உடம்பிற்குத் தெம்பு!

விஜீ பத்மநாதன்-நீர்கொழும்பு.

**அகதித் தாய்**

இடுப்பில் குழவி
ஏழுநாள் பட்டினி!
நடுப் பகல்
நாவரண்ட தாகம்;
தடுக்கிறது தன்மானம்!
தாய்(அகதி) என் செய்வாள்?
வடுக்கள் பலகண்டாலும்
வயிறு நிறைய
குடிப்பதற்கு இருப்பது
குளத்து நீரன்றி வேறல்ல!

நா. ஜெயபாலன்-பிபிலை.

**சுமை**

பத்துமாதம் சுமந்ததை
பத்திரமாய்ப் பாதுகாத்து
உதிரத்தைப் பாலாக்கி
ஊட்ட நினைத்தேன்!
பச்சைத் தண்ணீரில்
பலனுண்டோ?

'அபிமான்'- மட்./புதுக்குடியிருப்பு.

**எம் மண்ணில்....**

அகதி என்பதால்
கண்களில் கண்ணீர்!
நிவாரண வெட்டால்
உண்டிக்குத் தண்ணீர்!
அமைதியை நேசித்தால்
இங்கு சிந்தாது செந்நீர்!

பா. ஸ்ரீகுமார்-சங்கானை.

**அறிவித்தல்!**

இனிமேல் இதற்கும்,
ஜி.எஸ்.ரி. இருக்கும்!

ப. ஜோதி- கண்டி வீதி, வவுனியா.

**யார் சுமப்பார்?**

இடர் வரினும் பிடிதளரா
மடிதவளும் உனைச் சுமப்பேன்!
போர் இடியில் உறவிழந்த-என்
மனத் துயரை யார் சுமப்பார்!?

தெ. லோஜனா, கொழும்பு-15.

**கேள்விக் குறி**

கேள்விக் குறியாய்
வளைந்துவிட்டேன்!
வாழ்க்கையும்
கேள்விக்குறியே!

'அபிரஹ்'- புதுக்குடியிருப்பு

## கவிதைப் போட்டி இல.270



**கொடுமை**

தட்டைக் கையிலேந்தி சந்தோஷமாய்-அன்று
தாராளமாய் உண்டு பசியாறினோம்.
பிட்டு அப்பமென்று வகைவகையாய் உணவு
வயிறார உண்டு களைதனை நீக்கினோம்!
குட்டை குளமென்றும் பீலி என்றும் நாடி
கும்பி நிரப்பும் ஒரு நிலை வந்ததே....!
வெட்டை வெயிலென்றும் பாராமலே-சுற்றும்
வெறுமை நிலையொன்று எமைச் சூழ்ந்ததே!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

**நிலைமையிது**

ஓயாத போரிங்கு...
உருக் கூடித் துரத்துவதால்
தாய்பிள்ளை நாம் கூட
தவித்தோடும் நிலையிங்கு!
பாதைக்கும் தடையுண்டு.
நீருக்கும் தடை வேறு.
கிடைக்கின்ற போது நான்
குடிக்கின்றேன் வயிறார!

தர்ஷிக்கா கனகசிங்கம் 'கடாட்சம்'-
மட்டக்களப்பு.

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி 22.08.1998

முகவரி:
கவிதைப் போட்டி இல.270
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

## 'அன்னபூரணி'

வல்வெட்டித்துறை முதல் அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்களது கதையை எழுதிய ராஜகோபாலுக்கும், கதையைத் தந்த இனிய முரசுக்கும் பாராட்டுக்கள்.

கி. ரவி, கொழும்பு-09

குடும்ப முரசே!

'அன்னபூரணி' கப்பல் கதை எம் இனப் பெருமையை பறைசாற்றியது. விறுவிறுப்புக் குன்றாமல் படைத்த ஈ.கே.ராஜகோபால் அவர்களுக்கு என் குடும்பம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி. ஆர். கலிஸ்ரா, மன்னார்.



**வரலாற்றின் மைல்கல்**

கப்பல் கதை மட்டுமல்ல, எம் தமிழர் வரலாற்றின் மைல்கல் எனலாம். 'டைட்டானிக்' பற்றியே பேசும் எம்மவர்கள் 'அன்னபூரணி' போன்ற எம் வரலாற்றுச் சின்னங்களையும் நினைவு கொள்ளவேண்டும்! நினைவூட்டிய திரு. ராஜகோபாலுக்கும், இடமளித்த முரசுக்கும் நன்றி! நன்றி!

கா. விநாசித்தம்பி,
யாழ்ப்பாணம்.

திரை கடலோடிய தமிழர்கள் கதைகள் ஏராளம். அதில் ஒரு சிறந்த கதையை- பசுமையான நினைவை மலரும் நினைவாக்கினார் ராஜகோபால். விரைவில் முடிந்துவிட்டதே என்றுதான் சிறு குறை.

இ. சதாசிவம், கொழும்பு-06.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## வாஜ்பேயி விஜயம்



அன்பு முரசே!

உன்னைப் புகழ்வதற்காக எழுதவில்லை. உண்மையாகவே கூறுகிறேன்! உனது கணிப்புக்களும், கருத்துக்களும் நிச்சயமானவை. 'முரசம்' மிகத் தெளிவாகவும், சுருக்கமாகவும் நேர்மையோடு உண்மை உரைக்கிறது. இந்தியப் பிரதமர் வாஜ்பேயியின் விஜயத்தை முன்னிட்டு எழுதப்பட்ட 'முரசம்' கச்சிதம்! 'எதிர்பார்த்து ஏமாறவேண்டாம்!' என்று முன்கூட்டியே விழிப்பூட்டி, வாஜ்பேயிக்குள்ள இராஜதந்திர சிக்கல்கள், இந்திய நலன் போன்றவற்றைச் சுட்டிக்காட்டியது முரசம். அதேபோலவே அவரது விஜயமும் அமைந்து முடிந்தது. மனம் திறந்து பாராட்டுகிறேன். நான் மட்டுமல்ல, என் நண்பர்களும்!

எம். ஞானேந்திரன், கல்லாறு.

## ஞாபக சக்தியைச் சோதிக்கிறார்கள்

இனிய முரசே!

இந்திய அரசை பகைக்கக் கூடாது என்ற கண்ணோட்டம் ஏற்கத்தக்கது. அதற்காக இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் ஒருதலைப்பட்சமான திணிப்பை நியாயம் என நிரூபிக்க முற்படுவதும், ஜே.ஆரின் ஆட்டங்களுக்கு விட்டுக்கொடுத்து கிழக்கைப் பிரிக்கும் சூழ்ச்சியை கண்டும் காணாமல் இருந்த ராஜீவை நியாயவாதி என்று சொல்ல முனைவதும், உதைத்த காலை முத்தமிடும் செயலுக்கு ஒப்பானதாகும்!

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை வேறு வழியின்றி முதற்கட்டமாக ஏற்கிறோம் என்றே சகல தமிழ்க் கட்சிகளும் கூறின. எந்தவொரு கட்சியும் அந்த ஒப்பந்தம் பிரச்சனைக்குத் தீர்வு எனக் கூறவில்லை. இப்போது அதனை நல்ல தீர்வு என்பதுபோல கூற முற்பட்டு, மக்களின் ஞாபக சக்தியைச் சோதித்துப் பார்க்கிறார்களா?

கே. விக்னராஜ், திருக்கோணமலை.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. [illegible]தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் [illegible]ட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

## பராக்... பராக்...!

'பராக்...! பராக்...! பாரதப் பிரதமர் வருகிறார்!' என்று பலர் புளகாங்கித்தனர். தமிழ்க் கட்சிகளும் கும்பிட்டுக் கூத்துமாடி காவடி தூக்கு போட்டி போட்டன. கடைசியில் 'முரசு' சொன்ன விதமாகவே வாஜ்பேயி கருத்துக் கூறாமலேயே சென்றுவிட்டார். தமிழ்க் கட்சிகளைக்கூட சந்திக்க மறுத்ததும், விருந்தில் மட்டும் சந்தித்ததும் நெத்தியடி. விழுந்தாலும் மீசையில் மண்படாத குறையாக தமிழ்க் கட்சிகள் ஏதேதோ கூறுகின்றன.

இ. கார்த்திகேசு, கொழும்பு-06.

## எஜமானும் அடிமைகளும்

இந்தியாவை நண்பனாகக் கருதுவது சரியே. ஆனால் தமிழ்க் கட்சிகள் எஜமானாகக் கருதுகின்றன. எஜமானர்கள் அடிமைகளை மதிப்பது கிடையாது. இந்தியப் பிரதமரின் விஜயத்தின் போது தமிழ்க் கட்சிகளுக்கு நடந்த அவமதிப்பும் தக்க சான்று! தங்கள் தரத்தை தாங்களே கெடுத்துக் கொள்கின்றன தமிழ்க் கட்சிகள்.

கு. மனோகரன், யாழ்ப்பாணம்.

## பத்திரிகையாளர் கைதுகள்

முரசுக்கு!

தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கைது விடயத்தின் மறுபக்கத்தை எக்ஸ்ரேயாக்கிய நாரதருக்குப் பாராட்டு! காரணமற்ற கைதுகளை நியாயப்படுத்தும்வரை மனித உரிமை அமைப்புக்கள் மௌனம் சாதிப்பதும் மனித உரிமை மீறல்களுக்கு ஒருவிதமான ஒத்துழைப்பேயாகும். "நாடறிந்த பத்திரிகையாளர்களைக் கைது செய்துள்ளீர்கள். ஆதாரத்தைக் காட்டுங்கள்?" என்று உடன் கோரியிருந்தால் உண்மை-பொய் தெரிந்திருக்கும். பத்திரிகையாளர் சங்கங்கள்கூட மௌனித்தது ஏன்?

சி. யாசீன், மட்டுநகர்.



படிப்பகம்

www.padippakam.com

# மலையகத்தில் புலிவேட்டைக்குத் திட்டம்!

## தேடுதலுக்கு தோதான பிரசாரங்கள்!

(அரசியல் நிருபர்)

மலையகத்தில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அரச புலனாய்வு அமைப்புக்கள் கருதுகின்றனவாம். அதனால் மலையகத்தில் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி முளையிலேயே கிள்ளியெறிய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பரவலாக மலையகத்தில் நடைபெறப் போகும் கைதுகளை நியாயப்படுத்தவும், மலையக தமிழ் அரசியல்வாதிகளை வாய் திறக்காமல் செய்யவும், புலிகளின் கொலைப் பட்டியலில் தொண்டமானின் பெயரும் இருப்பதாக பெரிதாகப் பிரசாரம் செய்யப் பட்டு வருகிறதாம்.

புலிகள் தொண்டமானைக் கொலை செய்யத் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிந்தால், அவருக்கு ஆதரவான மலையக மக்களிடமிருந்து புலிகள் பற்றிய தகவல்கள் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கக்கூடும்.

தனது பெயர் புலிகளின் கொலைப்பட்டியலில் இருக்கிறது என்ற தகவலை வைத்து தனக்கு அனுதாபம் தேட முனைகிறார் தொண்டமான்.

"சிங்கள மக்களிடமும்- குறிப்பாக சிங்கள அரசியல்வாதிகளிடமும் புலிகளுக்கு ஆதரவானவர் என்று தன்மேல் விழுந்த முத்திரையை அகற்றவும் இச் செய்தியைப் பயன்படுத்த நினைக்கிறார் கை தேர்ந்த அரசியல் வாதியான தொண்டமான் என்று மலையக தொழிற் சங்க வட்டாரங்கள் கூறியுள்ளன.

அமைச்சர் தொண்டமான் புலிகளுக்கு ஆதரவாக நீண்டகாலமாகப் பேசி வந்தாலும் கூட, புலிகள் அவரை நம்பியதில்லை.

புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு தொண்டமான் எழுதிய கடிதத்துக்கு பிரபாகரன் நேரடியாகப் பதில் எழுதாமல், மாத்தையாவே பதில் எழுதியிருந்தார்.

### சதி நடக்கலாம்?

தொண்டமானை புலிகள் நம்பாதிருந்தாலும் அவரைத் தீர்த்துக் கட்டுமளவுக்கு அவர்மீது புலிகள் வெறுப்புக் கொள்ளக் கூடிய சம்பவங்கள் எதுவும் நடக்கவில்லை. அவசியமும் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழர்களை- மலையகத் தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள்- என்று பிரிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக புலிகளுக்கு எதிரான சக்திகள்கூட தொண்டமானை தீர்த்துக் கட்டலாம். அதனால் தொண்டா இனிமேல் கவனமாக இருக்கவேண்டும் என்று அரசியல் ஆய்வாளர்கள் சிலர் கூறியுள்ளனர்.

மலையகத்தில் புலிகளின் ஊடுருவல் என்பது தவறான கருத்து. மலையக இளைஞர்கள் தாமாக புலிகளில் சேர்ந்து உறுப்பினர்களாகியுள்ளனர். அது ஊடுருவல் ஆகாது. அதனை ஒப்புக்கொள்ளாமல் ஊடுருவல் என்று கூறி நழுவுகிறார் தொண்டமான் என்றும் அவதானிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மலையகத் தமிழ் இளைஞர்கள் பெருவாரியாக கைது செய்யப்படுதல், இ.தொ.கா. போன்றவற்றின் தலைமைகளால் ஏமாற்றப் பட்டமை போன்றவையே மலையக இளைஞர்களும் புலிகளாக மாறுவதற்குக் காரணமாகும்.

புலிகளைத் தேடுதல் என்ற பெயரில் பாரிய வேட்டை நடத்தப்படுமானால், மேலும் இளைஞர்களை புலிகளை நோக்கி செல்லத் தூண்டுவதாகவே இருக்கும் என்று மலையக அமைப்பொன்றின் பிரமுகர் தெரிவித்தார்.

## ஹட்டன் குண்டு வெடிப்பு

### புலிகள் நடத்திய தாக்குதல்

மலையகத் தோட்டத் தொழிற்துறையை குறிவைத்து மலையகப் பகுதிகளில் புலிகளின் தாக்குதல்கள் தொடரும் என்று முன்னரே கூறியிருந்தது தெரிந்ததே.

தமது தாக்குதல் எல்லைகள் நாடெங்கும் விரிவாகி வருவதாக புலிகள் கூறியுள்ளதுடன், மலையகக் குண்டு வெடிப்புக்கள் தோட்டத் தொழிற்துறையை ஆட்டம் காணச் செய்யும் எனவும் தெரிவித்திருந்தனர். ஆயினும் மலையகக் குண்டு வெடிப்புக்கள் எதற்கும் இதுவரை புலிகள் நேரடியாக உரிமை கோரவில்லை.

ஹட்டனில் சரக்கு ரயில் ஒன்றை குண்டுவைத்து ரயில் பாதையில் குண்டுத்தாக்குதல் நடத்தப் பட்டது. இதில் சரக்கு ரயில் தடம்புரண்டது. இத்தாக்குதல் தோட்டத் தொழிற்துறைக்கான போக்குவரத்தை அச்சுறுத்தும் விதமாக நடத்தப்பட்டதாகும். இதனை புலிகளே செய்துள்ளனர் என்று தெரிகிறது.

முன்னர் ஹற்றனில் தேயிலைத் தொழிற்சாலையிலும் குண்டுவெடித்தது குறிப்பிடத்தக்கது. அதிலிருந்து அருகில் உள்ள ரயில் பாதையிலேயே குண்டுத்தாக்குதல் நடந்துள்ளது.

ஹட்டன் குண்டுவெடிப்பு தொடர்பாக சிலர் கைது செய்யப்பட்டதாக கூறப்படும் போதும் சம்பந்தப்பட்டவர்கள் தப்பிச் சென்று விட்டதாக ஊகிக்கமுடிகிறது.

வயர் வைத்திருந்த மலையக தொழிற் சங்க தலைவர் ஒருவரையும்-அந்த வயர் குண்டுவெடிப்புக்கான வயர் என்று சந்தேகித்து பொலிசார் கைது செய்தனர். அது ஒலிபெருக்கி சாதனத்துக்குரிய வயர் என்று கூறப்படுகிறது.

## தென் ஆபிரிக்காவில் புலிகள்!

### இலங்கைத் தூதுக்குழு தயக்கம்

அணிசாரா நாடுகளின் உச்சி மாநாடு தென் ஆபிரிக்காவின் நகரான டேர்பனில் நடைபெறவிருக்கிறது. ஆகஸ்ட் 29 முதல் செப்டம்பர் 3ம் திகதி வரை நடைபெறவிருக்கும் இவ்வுச்சி மாநாட்டில் கலந்துகொள்ள இலங்கையிலிருந்து செல்லவிருக்கும் தூதுக் குழுவுக்கு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமை தாங்குவார் எனத் தெரிகிறது.

டேர்பன் நகரில் நடைபெறவிருக்கும் மாநாட்டைக் குழப்புவதற்கு எல்.ரி.ரி.ஈயினர் பிரயத்தனம் செய்யக்கூடும் என்பதனால் மிக்க அவதானமாக இருக்குமாறு இலங்கை தென்னாபிரிக்க அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

டேர்பன் நகரில் மட்டும் இந்திய மற்றும் இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் சுமார் 6 இலட்சம்பேர்வரை இருப்பதாக அந்நாடு தெரிவித்திருக்கிறது. இதுதவிர ஜோஹன்னஸ் பேர்க் நகரில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் வசிக்கின்றனராம். இவர்களில் பெரும்பாலானோர் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்துக்கு ஆதரவாளர்கள் என்று அறியப்படுகிறது.

புதுடில்லியில் உள்ள தென் ஆபிரிக்காவின் தூதுவர் ஜே.எம்.மற்றில் (இலங்கைக்கும் இவரே தூதுவர்) கடந்த மே மாதம் இங்கு வந்திருந்தார். டேர்பன் நகரில் எல்.ரி.ரி.ஈ. அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்கு புலிகள் கோரி விடுத்த வேண்டுகோளை நெல்சன் மண்டேலா அரசாங்கம் நிராகரித்துவிட்டதாக தூதுவர் மற்றில் கூறியிருந்தார்.

## குடியேற்றம் தொடர்கிறதா?

திருமலை கப்பல் துறை பகுதியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்துக்கு தடை விதிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின. ஆனால் தற்போதும் அப்பகுதியில் குடியேற்ற வாசிகள் காணப்படுகின்றனர்.

இப் பகுதியில் இராணுவத்தினர் புல்டோசர்கள் மூலம் செப்பனிட்ட பகுதிகளை அண்டியதாகவே குடியேற்றவாசிகள் காணப்படுகின்றனர்.

கப்பல்துறைப் பகுதி குடியேற்றம் தொடர்பாக ஜனாதிபதியிடம் புகார்கள் சென்றதால் ஏற்பட்ட கோபத்தினாலேயே, லிங்கநகரில் தமிழர் குடியிருப்புக்கள் எரிக்கப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

கப்பல் துறைமுக குடியேற்ற விவகாரம் தொடர்பாக அறிந்த அமைச்சர் மங்கள சமரவீர, திருமலை அரச அதிபரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கண்டித்ததாகவும் தெரியவருகிறது.

## முஸ்லிம்கள் படுகொலை

### நினைவு தினம் அனுஷ்டிப்பு

(ஏறாவூர் நிருபர்)

1990ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் காத்தான்குடியில் புலிகளால் கொல்லப்பட்ட முஸ்லிம் மக்களின் நினைவாக 03.8.98 அன்று காத்தான்குடியில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. 1990ஆம் அன்றைய தினம் 103 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

1990 ஆகஸ்ட் மாதம் 11ம் திகதி இரவு ஏறாவூரிலும் முஸ்லிம் மக்கள் 123 பேர் புலிகளால் கொல்லப்பட்டனர். அதனை முன்னிட்டு ஏறாவூரிலும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

## தமிழர் வீடுகள் தீக்கிரை!

### விரட்டியடிக்க மிரட்டல்

திருமலை லிங்கநகரில் வாழும் தமிழ்க் குடும்பங்களை அச்சுறுத்தி குடியகற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"இந்தப் பகுதியில் இராணுவ முகாம் இருப்பதால், அங்குள்ள தமிழ்க் குடும்பங்கள் வெளியேறவேண்டும்!" என்று திருமலை இராணுவத்தினர் பல ஆண்டுகளாகக் கோரி வருகின்றனர்.

தமிழ்க் குடும்பங்கள் வசிக்கும் காணி இராணுவ முகாமுக்குரியது என்றும் தெரிவித்துவருகின்றனர். ஆனால் சில வாரங்களுக்கு முன்னர்தான் அக் காணிகளை சட்டரீதியாக தமக்கு ஒதுக்கித் தருமாறு திருமலை மாவட்ட பிரதேச செயலாளருக்கு இராணுவத்தினர் கடிதம் எழுதியுள்ளனர்.

லிங்கநகர் மக்களை தொல்லைப்படுத்தி வெளியேற்றும் நோக்கில், சில மாதங்களுக்கு முன்னர் லிங்கநகருக்கு செல்லும் பாதையில் கம்பிவேலி போடப்பட்டது. சோதனை அரணும் நிறுவப்பட்டு, லிங்கநகருக்குச் செல்வோர் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் 09.08.98 அன்று பகல் 11.30 அயளவில் லிங்கநகரில் உள்ள மூன்று ஓலை வீடுகள் சிவில் உடையில் சென்றவர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டன.

அருகிலிருந்த தகரம் மற்றும் ஷீற் கூரை போட்டவீடுகளுக்குச் சென்று ஒவ்வொரு தகரத்தை கழற்றிவிடுமாறு மிரட்டினார்களாம்.

இராணுவத்தினரே இதில் சம்பந்தப்பட்டதாக ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.யிடம் லிங்கநகர் மக்கள் முறையிட்டனர். ஆனால் தமக்கு எதுவும் தெரியாது எனக் கைவிரித்துள்ளனர் இராணுவத்தினர்.

"ஒரு இறாத்தல் பாண் கொண்டு செல்வதாயினும் கடுமையாக எங்களைச் சோதனையிடும் இராணுவ சோதனை அரணை தாண்டி வெளியார் உள்ளே வந்தது எப்படி? தமக்குத் தெரியாது என்று எவ்வாறு கூறத் துணிந்தனர்?" என்று கேள்வி எழுப்புகின்றனர் லிங்கநகர் மக்கள்.

## ஓட்டோவில் சென்று நடத்திய தாக்குதல்!

### தமிழ்-முஸ்லிம் சாரதிகள் சிறையில் தடுத்து வைப்பு!

வாழைச்சேனை, கல்முனை ஆகிய இடங்களில் பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு அப்பகுதியிலுள்ள தமிழ்-முஸ்லிம் பொது மக்களின் ஓட்டோ வண்டிகளையே புலிகள் பயன்படுத்தியிருந்தனர்.

ஜூலை 11ம் திகதி வாழைச்சேனையில் பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அப்பகுதியிலுள்ள முஸ்லிம் பொதுமகன் ஒருவரின் ஓட்டோவையும் ஜூலை 30ம் திகதி கல்முனை 2ம் குறிச்சியில் பொலிஸார் மீது மேற்கொண்ட தாக்குதலுக்கு அப்பகுதியிலுள்ள தமிழ்ப் பொதுமகன் ஒருவரின் ஓட்டோவையுமே புலிகள் பயன்படுத்தியிருந்தனர். இந்த இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளார்கள்.

"நோயாளிகள் இருப்பதாகக் கூறியும், ஆயுதங்களுடன் பலத்காரமாகவும் ஓட்டோவில் ஏறிச் சென்று தாக்குதல் நடத்தப்படுகிறது. தாக்குதல் நடத்தப்போகும் விடயம் முற்றிலும் இரகசியமாகவே திட்டமிடப்படுகிறது. தமது ஓட்டோ தாக்குதலுக்குத்தான் பயன்படுத்தப்படப்போகிறது என்பதை யாரறிவார்?

படையினர், பொலிஸார் எல்லாம் ஆயுதங்களுடன் ஓட்டோவில் ஏறிச் செல்கிறார்கள்தானே? அன்றாடம் பிழைப்பு நடத்தும் எங்கள் உறவினர்களான அப்பாவிகளைப் பயன்படுத்துவதும், அவர்களைச் சிறைமிலடைத்து வைப்பதும் அநியாயம்!" என்று உறவினர்கள் புலம்புகிறார்கள்.

## நூல் வாங்கிய புலி-உதவிப் பணிப்பாளர் சிறையில்!

இந்து சமய கலாசார திணைக்கள உதவிப்பணிப்பாளர் தெய்வநாயகம்பிள்ளையும், வீரகேசரி நிருபர் ஸ்ரீகஜனும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தெய்வநாயகம்பிள்ளையை சமீபத்தில் அவரது மனைவி பார்வையிட அனுமதிக்கப்பட்டது. மிகவும் சோர்ந்தும் மெலிந்தும் காணப்பட்டாராம்.

கைதான பெண்புலியின் நாட்குறிப்பில் அவரது பெயரும், தொலைபேசி எண்ணும் இருந்ததாம். அதனால்தான் அவரும் கைதானதாகக் கூறப்படுகிறது.

கைதாகியுள்ள பெண்புலி, இந்து சமய கலாசார திணைக்களத்திற்கு ஒருமுறை சென்று அவரைச் சந்தித்து, சமய நூல்களை பெற்றுச் சென்றாராம். அதுதவிர வேறு எவ்வித தொடர்பும் அவருக்குக் கிடையாது என்று உறவினர்கள் கூறுகின்றனர்.

தெய்வநாயகம்பிள்ளை விடயத்தில் இந்து அமைப்புக்கள் போதிய கவனம் செலுத்தவில்லை என்றும் குறைகூறப்படுகிறது.

50 வயதான தெய்வநாயகம் பிள்ளையின் விடுதலையை எதிர்பார்த்து மனைவியும், இரு பெண்பிள்ளைகளும் காத்திருக்கின்றனர்.

## 'புலிகளை எதிர்ப்போம்!'

### யாழில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாண நகரில் இரவோடு இரவாக புலிகளுக்கு எதிரான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. புலிகளை எதிர்க்குமாறு கோரும் இச் சுவரொட்டிகள் 'மாத்தையா குழுவினர்' என்ற பெயரில் ஒட்டப்பட்டுள்ளன.

"அராஜகம், சர்வாதிகாரம் என்பவற்றை கொண்ட புலிகளை எதிர்த்து தர்ம யுத்தம் ஆரம்பமாகிவிட்டது!" என்று அந்த சுவரொட்டிகளில் எழுதப்பட்டுள்ளன.

யாழ் நகரில் உள்ள தமிழ்க் கட்சி ஒன்றே 'மாத்தையா குழு' என்ற பெயரில் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

இரவோடு இரவாக சுவரொட்டிகள் ஒட்டுவதாயின், படையினரின் அனுமதி இன்றி ஒட்டமுடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ் குடாநாட்டில் புலிகளின் ஊடுருவல் அதிகமாகிவிட்டதை அடுத்து தமிழ்க் கட்சிகளது உதவி நாடப்பட்டுள்ளதாம். அதன் பிரகாரமே தமிழ்க் கட்சி ஒன்று மேற்படி சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

மாத்தையா குழுவினர் சிலர் படையினருக்கு உதவியாக செயற்படுவது உண்மையே. ஆனால் மேற்படி சுவரொட்டிக்கும் அவர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று தெரிகிறது.

## உளவாளிகள் மீது தாக்குதல்-இருவர் பலி!

### சைக்கிளில் வந்தனர்-மோட்டார் சைக்கிளில் தப்பினர்!

மட்டக்களப்பு-ஏறாவூர் ஸ்ரீ பத்திரகாளியம்பாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மக்கள் கூட்டத்தினரிடையே, படையினருடன் இணைந்து செயற்படுவோரும் காணப்பட்டனர். கோயிலுக்கு முன்னாலுள்ள பாடசாலைக்குப் பக்கத்து ஒழுங்கையில் பதுங்கியிருந்த புலிகள் அந்தப் பக்கத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவர் மீது சூடு விழுந்ததில் அவர் சாய்ந்தார். பின்னால் அமர்ந்திருந்தவர் ஓட எத்தனித்த போது அவர் மீது கைக்குண்டு வீசப்பட்டது. அந்த இடத்திலே காந்தி-பகீரதன் (வரதன்-25 வயது) என்பவர் கொல்லப்பட்டார். காயமடைந்த ராகுவத்த கங்கானம்கே-தர்மதாஸ (24) என்பவர் ஆஸ்பத்திரியில் மரணமானார். தாக்குதல் நடத்திய புலிகள் மோட்டார் சைக்கிளையும் எடுத்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

கொல்லப்பட்ட இருவரும் முன்னர் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப் என்பவற்றில் இருந்து விலகி தற்போது கொழும்பில் படையினருடன் இணைந்து தகவல் வழங்கி வந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

சம்பவத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னர்தான் இவர்கள் கொழும்பில் இருந்து வந்திருந்தார்களாம். தர்மதாஸ என்பவரின் இரு சகோதரர்களும் கூட முன்னர் புலிகளால்தான் கொல்லப்பட்டார்களாம். ஒருவர் ஈ.என்.டி.எல்.எஃப் இயக்கத்திலும், மற்றையவர் மக்கள் தொண்டர் படையிலும் இருந்தபோதே கொல்லப்பட்டார்கள் என்று கூறப்படுகிறது.

மேற்படி சம்பவம் 06.08.98 அன்று மாலை 6.35 அளவில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் எஸ்.இராமகிருஷ்ணன் (51) எனும் பொதுமகன் ஒருவர் காயமடைந்தார். இதேவேளை கடந்த 02.08.98 அன்று சித்தாண்டியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது காயமடைந்த யாசகரான என்.சீனித்தம்பி (82) என்பவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் மரணமானார்.

## சம்பளப் பணம் மாயம்!

### 20 இலட்சம் என அறிவிப்பு

கொழும்புத் துறைமுக ஊழியர்களின் சம்பளமும், முற்பணமுமாக மத்திய வங்கியிலிருந்து பெறப்பட்ட சுமார் 20 இலட்ச ரூபா மாயமாய் மறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

வங்கியிலிருந்து பணம் பெற்று வரும் போது துறைமுக அதிகார சபை நிதிப்பிரிவின் பிரதான தலைவரும் மற்றொருவரும் சேர்ந்தே இந்த மோசடியைச் செய்திருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து துறைமுக அதிகார சபையின் பிரதான நிதிப் பொறுப்பாளர் தலைமறைவாகியிருக்கிறார்.

தலைமறைவாகியுள்ளவருக்கு நெருங்கிய தொடர்புள்ளவர் எனக் கருதப்படும் துறைமுக நிதிப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் தற்போது புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு 4ம் மாடியின் விசாரணைப் பிரிவில் புலன் விசாரணை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

துறைமுக ஊழியர்களின் நன்மை கருதி இம்மாதம் 04ம் திகதி வழங்கப்படவிருந்த முற்பணமும், 21ம் திகதி வழங்கப்படவிருந்த சம்பளமும் மேற்படி பணமோசடியைத் தொடர்ந்து வேறு தினங்களில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 04ம் திகதி சம்பள முற்பணம் வழங்கப்படவேண்டியிருந்ததால் அதற்கு முந்திய தினங்களிலேயே பணம் வங்கியிலிருந்து பெறப்பட்டிருக்க வேண்டும் என்று நம்பப்படுவதாக துறைமுக அதிகாரியொருவர் 'முரசு'க்குத் தெரிவித்தார். புலன் விசாரணைகள் தொடர்கின்றன.

## கைதானதும் காட்டிக்கொடுத்ததும்!

அக்கரைப்பற்று சாகாமம் வீதியில் உள்ள படக்கொட்டிலடியில் வைத்து ராஜு (15) எனும் ஒரு புலி இயக்க தகவல் தரும் ஆதரவாளர் கைது செய்யப்பட்டார். பிடிபட்ட மாத்திரத்தில் அவர் தனது சகபாடியான காந்தன் (16) எனும் நபரையும் படையினரிடம் காட்டிக் கொடுத்தார். அவரும் புலி இயக்க ஆதரவாளர் என்றே கருதப்படுகிறது. பின்னர் இவர்கள் இருவருமாகச் சேர்ந்து இன்னுமோர் இடத்தில் ஆயுதங்கள் இருப்பதாகக் கூறி அந்த வீட்டிலிருந்த தாயிடமும் மகளிடமும் "நாங்கள் தந்த கைக்குண்டு எங்கே?" என்று கேட்டனராம். ஆத்திரமுற்ற தாயும் மகளும் தாறுமாறாக கடிந்து பேசியுள்ளனர். இதனால் அவர்கள் தாக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டனர். விசாரணையின் பின்னர் தாயும் மகளும் தற்சமயம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைதான புலி ஆதரவாளர்கள் இருவரும் இப்பொழுது சீருடையினருடன் சேர்ந்து திரிகின்றனராம்.

புலி இயக்கத்தினர் சிலர் வந்து நகரில் உள்ள கடைகளில் பொருட்கள் கொள்வனவு செய்கிறார்கள் என்று படையினருக்குக் கிட்டிய தகவலையடுத்து நடத்தப்பட்ட தேடுதலிலேயே மேற்படி ஆதரவாளர் இருவரும் சிக்கினர். ஆனால் பொருட்கள் கொள்வனவில் ஈடுபட்ட புலி உறுப்பினர்கள் கச்சிதமாகத் தப்பி விட்டனர். மேற்படி சம்பவம் ஆகஸ்ட் 01ம் திகதி இடம்பெற்றது.

## யாழ் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணத்தை குறிப்பிடும்போது அரச தகவல் தொடர்பு சாதனங்களில் 'யாப்பா பட்டுன' என்றே கூறப்பட்டுவருகிறது.

இதனை அவ்வப்போது சுட்டிக்காட்டினாலும் திட்டமிட்ட பெயர் மாற்றம் செய்ய முனைகிறார்களோ என்று சந்தேகம் ஏற்படுகிறது.

10.08.98 அன்று அரச கட்டுப்பாட்டில் உள்ள சுயாதீன தொலைக்காட்சியின் இரவு ஆங்கிலச் செய்தி அறிக்கையில் யாழ்ப்பாணம் என்பதை 'யாப்பா பட்டுன' என்றே குறிப்பிட்டனர். ஆங்கிலத்தில் ஜஃப்னா என்றே யாழ்ப்பாணம் அழைக்கப்படுகிறது.

## மாணிக்கவாசகர் விடுதலை

### ஆதாரமற்ற கைது

புலிகளுடன் தொடர்பு என்று கூறி கைது செய்யப்பட்ட பத்திரிகையாளர்களில் ஒருவரான மாணிக்கவாசகர் 10.08.98 அன்று விடுதலை செய்யப்பட்டார்.

கைதான புலியின் நாட்குறிப்பில் வீரகேசரி மாணிக்கவாசர் என்று எழுதப்பட்டிருந்த ஒரே காரணத்துக்காகவே அவர் கைதானாராம். இதனைத்தான் முன்னரே எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருந்தோம்.

புலிகளை பத்திரிகையாளர்கள் தொழில் ரீதியாகச் சந்திக்கலாம், தொடர்பு கொள்ளலாம் என்று அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருந்தார்.

அவ்வாறு இருக்கும்போது, புலிகளின் நாட்குறிப்பில் பெயர் இருந்ததற்காக மாணிக்கவாசகரை கைது செய்துள்ளனர். அது மட்டுமல்லாமல், வீரகேசரியில் அச்சுத் துறையில் பணியாற்றிய மாணிக்கவாசகர் என்பவரையும் சில வாரங்களுக்கு முன்னர் கைது செய்துள்ளனர்.

நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாணிக்கவாசகர் யார்? என்பதைக்கூட தீர விசாரிக்காமலேயே நிருபர் மாணிக்கவாசகரை கைது செய்தனர். கிட்டத்தட்ட ஒரு மாதகாலம் தடுத்து வைத்திருந்தனர் என்பது தெளிவாகிவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# நிருபர் சாரதியால் தாக்கப்பட்டார்

## செய்தியாளர் சங்கம் கண்டனம்!

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த 62-0580 இலக்க போக்குவரத்துச் சபை பஸ்ஸில் மேலும் பயணிகள் செல்வதற்குப் போதிய இடமிருந்தும் உரிய தரிப்பிடத்தில் நிற்காது பஸ் வேறு இடத்தில் தரித்து விட்டுச் சென்றது. இதனால் பஸ்சுக்காக நெடு நேரமாக பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்த பயணிகள் ஏமாற்றமடைந்தனர். அதில் பத்திரிகை நிருபரும் ஒருவர்.

குறித்த நேரத்தில் வைபவம் ஒன்றுக்காகச் செல்ல வேண்டிய நிருபர், பின்னால் வந்த ஒரு மோட்டார் சைக்கிளில் சென்று குறிப்பிட்ட அந்த பஸ்சில் ஊறணி பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து ஏறிக் கொண்டார். போதியளவு பயணிகள் செல்லக் கூடியதாக இருந்தும் பஸ்ஸை ஏன் தரிப்பிடத்தில் நிறுத்தவில்லை? இதனால் நீண்ட நேரமாக பயணத்திற்காகக் காத்திருந்த பயணிகள் ஏமாற்றமடைந்துவிட்டனர் என்று நமது நிருபர் குறிப்பிட்ட பஸ் சாரதியிடம் கூறியுள்ளார்.

"இதைக் கேட்க நீ யார்? பஸ்ஸைத் தரிப்பிடத்தில் நிறுத்துவதும் வேறிடத்தில் நிறுத்துவதும், பயணிகளை ஏற்றுவதும், ஏற்றாமல் விடுவதும் எங்கள் இஷ்டம்!" என்று கூறி நமது நிருபரைத் தாக்கியுள்ளார் அந்த பஸ் சாரதி.

இது விடயமாக போக்குவரத்து அமைச்சர் உட்பட சம்பந்தப்பட்ட சகலருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் குறித்துப் பத்திரிகையாளர் சங்கம் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. மேற்படி சம்பவம் ஆகஸ்ட் 03ம் திகதி காலை 11.30க்கு இடம் பெற்றது.

நடத்தை தவறும் ஊழியர்களால் போக்குவரத்துச் சேவைக்குப் பங்கம் விளைவதாக டிப்போ அதிகாரியொருவர் கவலை தெரிவித்தார்.

# குழுவாலும் முடியவில்லை!

கைதானவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை ஆராய உயர்மட்டக் குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்திருந்தார்.

தமிழ் மக்கள் கைதாவது பற்றி ஆராயவே இக் குழு நியமிக்கப்பட்டதாக சில பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி இருந்தன. ஆனால், சகல இன மக்களுக்கும் பொதுவாகவே இக் குழு அமைக்கப் பட்டுள்ளது. கடந்த 3.08.98 அன்று இக் குழுவினர் கூடி ஆராய்ந்தனர்.

இக் குழுவுக்கு வந்துள்ள முறைப்பாடுகளில் பெரும்பாலானவை சிங்கள மக்களிடம் இருந்தே வந்துள்ளதாம்.

தமிழ்ப் பத்திரிகையாளர் ஸ்ரீகஜன், மாணிக்கவாசகர் ஆகியோர் கைது தொடர்பாக இக் குழுவுக்கு புகார் செய்யப்பட்ட போதும், இக் குழுவால் தீர்வு பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

"ஆதிக்கத்திற்கு வழிவகுக்கும்"

# பிரதேச சபைத் தலைவர் எதிர்ப்பு

(திருமலை நிருபர்)

தம்பலகாமத்தின் ஒருபகுதியையும் முள்ளிப்பொத்தானை என்ற கிராமத்தையும் கந்தளாய் நிர்வாக அலகுக்குள் கொண்டு வர எடுக்கப்பட்டு வரும் முயற்சியை தம்பலகாமம் பிரதேச சபைத் தலைவர் திரு. ஹாரூன் தாரிப் அலி வன்மையாகக் கண்டித்துள்ளார். இந்த ஏற்பாட்டால் முள்ளிப்பொத்தானையிலுள்ள முஸ்லிம்களும் தம்பலகாமப் பகுதியிலுள்ள தமிழர்களும் பெரும்பான்மையின ஆதிக்கத்துக்குட்பட வேண்டிய அபாய நிலையில் இருக்கிறார்கள்.

இது தொடர்பாக முரசு தம்பலகாமம் பிரதேச சபைத் தலைவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது "இந்த நடவடிக்கைகளால் எங்கள் நிலப்பரப்பில் வைத்தே நாங்கள் இரண்டாந்தர நிலைக்குத் தள்ளப் படவுள்ளோம். தமிழ்-முஸ்லிம் மக்களின் பலத்தைச் சிதைத்து பெரும்பான்மையின மேலாதிக்கத்தை நிறுவுவதே இதன் குறிக்கோள். இதை நாங்கள் அனுமதிப்பது தற்கொலைக்குச் சமமானது" என்று தெரிவித்தார்.

முள்ளிப்பொத்தானைக் கிராமம் தம்பலகாமத்திலிருந்து நான்கு மைல் தூரத்திலுள்ளது. கந்தளாயிலிருந்து ஒன்பது மைல் தூரத்திலுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் அமைச்சு தூங்குகிறதா?

## கேட்கின்றனர் இலக்கியவாதிகள்

(கண்டி நிருபர்)

மத்திய இலங்கையில் இயங்கும் சகல துறையிலுமான முஸ்லிம் எழுத்தாளர்களையும் இலக்கிய ஆர்வலர்களையும் ஒன்றிணைத்து ஆக்கபூர்வமான தமிழ் இலக்கிய சமூக பணிகளை முன்னெடுத்துச் செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மத்திய மாகாண சபையின் இந்து கலாசார அமைச்சு தமிழ் எழுத்தாளர்களையும் இலக்கியவாதிகளையும் கலைஞர்களையும் கடந்த காலப்பகுதியில் கௌரவித்துப் போற்றியும் ஆக்கபூர்வமான உதவிகளையும் வழங்கி ஊக்குவித்ததையும் தெரிவிக்கும் முஸ்லிம் எழுத்தாளர்களும் கலைஞர்களும் பாராட்டியுள்ளனர்.

மத்திய மாகாண சபையில் முஸ்லிம் அமைச்சு ஒன்று இருந்தும்கூட முஸ்லிம் இலக்கியவாதிகள் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டதையும், இதன் காரணமாக முஸ்லிம்களின் தமிழ் இலக்கியத் தொண்டு கடந்த எட்டாண்டு காலப்பகுதியில் மழுங்கடிக்கப்பட்டதையும் கவலையோடு தெரிவிக்கின்றனர்.

இத்தகைய சூழ்நிலையையொட்டி கடந்த பல்லாண்டு காலமாக இயங்கி வந்த கண்டி இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம் மறுசீர் செய்யப்பட இருப்பதால் மத்திய இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் எழுத்தாளர்கள் மற்றும் எழுத்து வன்மையுடையோர் அமைப்பாளர், முஸ்லிம் எழுத்தாளர் ஒன்றியம், 48/3 யட்டிநுவர வீதி ஒழுங்கை, கண்டி என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# கற்க வகுப்பறை தேவை!

(திருமலை நிருபர்)

திருகோணமலை ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலய மாணவர்கள் போதிய வகுப்பறைகளின்றித் தங்கள் கல்வியைத் தொடர வேண்டிய பரிதாப நிலையில் இருக்கின்றனர்.

இப்பாடசாலை அறுநூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களையும் இருபத்தைந்து வகுப்புப் பிரிவுகளையும் கொண்டது. இதற்குக் கட்டடங்கள் போதாமையால் சர்வதேச நிறுவனம் ஒன்று நிரந்தரக் கட்டடமொன்றைத் தனது நிதியில் அமைத்துத்தர முன்வந்தது.

இதன் பிரகாரம் கட்டடம் அமைக்கும் பொறுப்பை சர்வோதயம் ஏற்று கேள்விப் பத்திரங்களைக் கோரி கொந்தராத்துக்காரர் ஒருவரிடம் நிர்மாண வேலைகளை 1997 ஆகஸ்டில் ஒப்படைத்தது.

ஆனால் இன்றுவரை இக்கட்டடம் பாதியிலேயே கிடக்கின்றது கட்டடம் இன்று முடியும் நாளை முடியும் எனப் பாடசாலை நிர்வாகமும் மாணவர்கள், பெற்றோர் ஆகியோரும் எதிர்பார்த்து ஏமாந்து போயிருக்கிறார்கள்.

பொறுப்பேற்ற கொந்தராத்துக்காரரோ பொறுப்பை ஒப்படைத்த சர்வோதய நிறுவனத்தினரோ இக்கட்டட விடயத்தில் கரிசனை எதுவும் எடுத்ததாகத் தெரியவில்லை என்று ஆலங்கேணி மக்கள் தெரிவிக்கிறார்கள். பொறுப்பான சர்வோதயம் பொறுப்பற்று இருக்கலாமா?

# அரணில் தடுக்க ஆளில்லை!

கல்முனையில் 30.07.98 அன்று ஒட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்திய புலிகள் பிரதான வீதியால் சென்று கொண்டிருந்தனர். அப்போது அவ்வழியாக ஐந்து பொலிசார் சைக்கிள்களில் சென்றனர். அவர்களைக் கண்டதும் ஒட்டோவில் இருந்த புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதில் பொலிஸ்காரர் மூவர் காயமடைந்தனர். ஏனையோர் தப்பினர்.

பின்னர் ஒட்டோவை கைவிட்ட புலிகள் தனியார் மருந்துக் கடை ஒன்றுக்குச் சொந்தமான வேனை கடத்திச் சென்றனர். இரண்டு சோதனை அரண்களைத் தாண்டி அந்த வேனில் புலிகள் சென்றனர். ஏனோ அவர்களைத் தடுக்க சோதனை அரணில் இருந்தவர்கள் முற்படவில்லை.

வேனுக்குள் இருந்த மருந்துகளை பெரிய நீலாவணை அருகே ஓர் இடத்தில் மறைத்து வைத்துவிட்டு வேனை பாண்டிருப்பு கடற்கரை அருகே விட்டுச் சென்றனர்.

மருந்துகள் மறைக்கப்பட்ட இடம் பற்றிய தகவல் அறிந்த விசேஷ அதிரடிப் படையினர் அவற்றைக் கைப்பற்றினார்கள்.

# அங்கவீனர்களுக்கு உதவிக்கரம்!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் போர் அழிவுகளினால் அங்கவீனர்களான தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஜெய்ப்பூர் செயற்கைக் கை, கால்களை பொருத்தும் பணியை உள்ளூர் மற்றும் சர்வதேசத் தொண்டர் நிறுவனங்கள் செய்து வருகின்றன.

"சோபை இழந்த தமது வாழ்வை விடை காணமுடியாத அவலங்களுடன் கழித்துக் கொண்டிருக்கும் இத்தகையோருக்கான உதவிகளை வழங்குவது மனித நேயமுள்ளவர்களின் பொறுப்பாகும்!" என்று கிழக்குப் புனர்வாழ்வுக் கழகத் திட்ட அலுவலர் எஸ். கமலநாதன் தெரிவித்தார்.

கண்டி ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் வழங்கப்பட்ட இந்த செயற்கைக் கை, கால்களை தமிழ்-முஸ்லிம் பொது மக்கள் 30 பேர் பெற்றுக்கொண்டனர்.

கிழக்குப் புனர்வாழ்வுக் கழகம், சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் என்பன மேற்படி உதவி வழங்கலுக்கு அனுசரணை வழங்கியிருந்தன.

விளம்பரப் பகுதி


GLOBAL CARE CLINIC

✧ CONSULTATION ✧ O.P.D. 9.00A.M TO 8.00P.M

✧ MEDI QUICK LABORATORY SERVICE

EXERCISES

(LADIES ONLY)

ஊளைச் சதையை நீக்க நவீன இயந்திர வசதிகளுடன் அமைந்த பயிற்சிக் கூடம்

NO-14, 57th Lane, Off Rudra Mawatha,
Wellawatha, Colombo-06. Tele:- 074-510631

சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தா "சக்திசரவணா"வுடன் தொடர்புகொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 25ந் திகதி வரை
SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE,
WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067.


25ந் திகதி முதல் 30ந் திகதி வரை
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

நன்மை பயப்பவை மட்டுமே செய்துதரப்படும். வியாழன் விடுமுறை





மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது. பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது. பிரிந்தவரை அழைத்து எடுப்பது. திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது. பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரைபடுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD
NINTAVUR-21
SRI LANKA.



ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 250/=,150/=
தங்க பஸ்பம் கலந்தது 1125/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 1025=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398



மனோதத்துவ வைத்தியம்

வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! உங்கள் அடிமனதில் ஆழப்பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை முலம்மாற்றி வெற்றிப் பாதையில் வீறுநடை போட பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள். இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை போன்ற தன்னம்பிக்கை இழக்கக் காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை முலம் நீக்கி புத்துயிர் பெற்று நீங்களே உங்களை வெல்லுங்கள்.

SEXUAL DISORDERS

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்கு விஷேட ஏற்பாடுகள்

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை தீர்க்க வழியின்றி தவிக்கத் தேவையில்லை. வெட்கத்தை விட்டு முழுவிபரங்களையும் கடிதமூலம் விளக்கி எழுதவும். எமது கேள்விகளுக்கு பதில் தெரிந்தபின் பதிவு நாடாமூலம் தாழ்வு மனப்பான்மை நீங்க மனோதத்துவ சிகிச்சையும், உடல் குறைபாடுகளுக்கு மருந்தும் அளித்து பூரண சுகமடையலாம். பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஆச்சரியப்படும் வகையில் சுகமாகியுள்ளனர். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்)

மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்

மனநிலை பதிப்புக்கள், மனநோய்கள், 'ஹிஸ்டீரியா'- ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. பலர் நீரிழிவு நோயில் இருந்து முற்றாகக் குணம் அடைந்துள்ளனர். விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

கவனத்துக்கு: கொழும்பில் 5 நாட்கள் மட்டும்.

கொழும்பில் ஆகஸ்ட் 23 முதல் 30 வரை

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
BEAUTY LODGE, 67A, WOLFENDHAL STREET, COLOMBO-13
T.P. 338165, 338166 (5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது)
கொழும்பு நாட்களில் மட்டும் செல்லெடல் No-072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

வவுனியாவில் ஆகஸ்ட் 15,16

வவுனியாவில் (2ஆம் குறுக்குத் தெரு) ஞான வைரவர் கோவில் ஒழுங்கை Vanni Inn இல் சந்திக்கலாம். T.P.024-22074 இல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

கல்முனையில் செப்டம்பர் 5முதல்6 வரை

T.M.M. பாமஸி T.P. - 065- 28329

மற்றைய நாட்களில்
DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.33. Tissa Weerasingam sq.,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகத்தில்
27
01
1962



விண்ணகத்தில்
10
08
1997

**சின்னசாமி முத்துக்குமார்(முத்து)**

(பங்காளர்:- ராகினி மோட்டர்ஸ்)

அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் எம் குடும்பத்தின் தலைவனாய் இருந்து
உங்கள் வாழ்வை எங்களுக்காக தந்து உயிரோடு கலந்தவரே
எம் உயர்வுக்காக உழைத்து எம்மை காத்து வளர்த்து
நல் வாழ்வு வாழ வழிகாட்டிய அன்பு தெய்வமே
நீங்கள் ஓடி மறைந்ததுவே ஓராண்டு-என்றும்
எம் மனதில் வீற்றிருப்பீர் பல்லாண்டு!

உங்கள் பிரிவால் துயருறும்
தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்: நளினி (மனைவி)
F 2/4, கம்கருபுர தொடர்மாடி, கொழும்பு-14


HOME CARE SERVICES REPAIRS

ரி.வி., வீடியோ, குளிர்சாதனப் பெட்டி, உயர்தர ஹை-ஃபை வானொலி, ரி.வி. அன்ரெனா மற்றும் வீட்டுத் தளபாடக் கருவிகள் பழுதுபார்க்க நம்பிக்கையான இடம்: தளபாடங்களை வீட்டிலிருந்து எடுத்துச் சென்று திருத்தியபின் திரும்பக் கொண்டு சேர்ப்பதற்கான கட்டணம் இல்லை.

ஹோம் கெயார் சேர்விசஸ் ரிப்பெயார்ஸ்
94-B, சிறி சரணங்கர வீதி, தெஹிவலை
தொலை பேசி:-074-202191



பழுதுபார்த்தல்

T.V, Video, Hi-Fi Radio, Telephone, Emergency Light

போன்ற எல்லாவிதமான எலக்ரோனிக் உபகரணங்களை திருத்திப் பெற்றுக் கொள்ள தலைநகரில் நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்.

Thiviya Electronic
121, 3/3R, First Cross Street, Colombo-11.
T.P.- 334322



அஸ்மா வைத்தியம்

தொய்வு. இழுப்பு. இளைப்பு. மாய்ச்சல. மூச்சுத்தட்டல. இருமல. சளி. தும்மல. மூக்கடைப்பு, தலைவலி, பீனிசம் போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய அஸ்மா சிகிச்சை நிபுணர் Dr. சுறாஜ் சோமசுந்தரம் அவர்களை இல.25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசையில் (மவுண்ட லேவினியா) (கொழும்பு) தினமும் மாலையில் 4 மணி முதல் 7 மணி வரையும் சந்திக்கலாம். தூரஇடத்தில் உள்ளவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு தொலைபேசி இலக்கம 074-201582 மூலம பதிவு செய்தால் காலை நேரங்களிலும் பாா வையிடப்படுவர். சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் புதிய நோயாளர்கள் தொலைபேசி மூலம் பதிவு செய்து பார்வையிடப்படும் நாளையும், நேரத்தையும் பெற்று வரவும்.

www.padippakam.com

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# இன்று குறி நாளை கூலி!

எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் முரசு 264ல் பின்வருமாறு கூறியிருந்தோம்.

"மாகாணசபைத் தேர்தல் நடக்குமா, நடக்காதா? என்றெல்லாம் தினசரிகள் கேள்வி எழுப்பி வருகின்றன. நடக்க வேண்டிய திகதியில் நடத்த அரசு தயாராக இல்லை என்று திட்டவட்டமாக தெரிகிறது!"

இப்போது தெரிந்துவிட்டது. கால வரையறை இன்றி ஒத்திவைத்துவிட்டனர். ஏன் ஒத்திவைத்துள்ளனர் என்பதை ஒளிவு மறைவின்றி அரசே சொல்லிவிட்டது. "யுத்தத்தில் வெற்றி காண்பதற்காகவே ஒத்திவைத்துள்ளோம்."

## ஒத்திவைப்பின் உள்நோக்கம்

ஆனால் சௌமியமூர்த்தி தொண்டமானுக்கு, இந்த மறத்தமிழருக்கு மட்டும் அரசு சொன்னது காதில் விழவில்லை. போரில் வெற்றிகொள்ளவே அரசு தேர்தலை ஒத்திவைத்துள்ளது என்று கூறாமல், சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். அதுமட்டுமன்றி தேர்தல் ஒத்திவைப்பை பூசி மெழுகியும் இருக்கிறார்.

'பிரபாகரன் சுத்தமான தமிழ் வீரன், புலிகள் அங்கு போராடுவதால்தான் மலையகத்திலும் நாம் தலைநிமிர்ந்து வாழ முடிகிறது.' என்றெல்லாம் பேட்டி கொடுத்தவர் தொண்டமான்.

புலிகளை மட்டுமன்றி, தமிழ் பேசும் தரப்பையும் பலவீனமாக்கும் இறுதி யுத்தத்துக்காக மாகாணசபைத் தேர்தலை அரசு ஒத்திவைத்துள்ளதற்கு இப்போது நியாயம் கற்பிப்பவரும் தொண்டமான்தான்.

வடக்கு-கிழக்கில் மட்டுமன்றி நாடெங்கும் தமிழ் பேசும் மக்களை ஒடுக்குவதற்கு சர்வ அதிகாரம் வழங்கும் அவசர கால சட்டத்தையும் தொண்டமான் ஆதரித்து வாக்களித்தே வருகிறார். அவசரகால சட்டம் என்பது மலையகத் தமிழ் மக்களுடன் சம்பந்தப்படாத ஒரு விவகாரம் போல ஏமாற்றப்பார்க்கிறார்கள்.

இதுபோலவே தென்னிலங்கையில் மாகாணசபை தேர்தல் ஒத்திவைப்பை பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஐ.தே. கட்சிக்கும் இடையிலான பிரச்சனைபோல தமிழ்க் கட்சிகள் காண்பிக்கின்றன.

இந்த ஒத்திவைப்புக்கு எதிராக ஒரு தமிழ்க் கட்சிகூட எதிர்த்து குரல் எழுப்பவில்லை.

உண்மையில் தமிழ்க் கட்சித் தலைமைகளின் வீரம் வற்றியதோடு மூளையும் மரத்துப்போய்விட்டதா? அல்லது தூங்குவதுபோல நடிக்கின்றனரா?

தென்னிலங்கையில் வெற்றிவாய்ப்பு தமக்கில்லை என பொதுஜன முன்னணி கருதியதுதான் தேர்தல் ஒத்திவைப்புக்கு காரணம் என்பதில் ஐயமில்லை.

இந்த தேர்தல் ஒத்திவைப்பில் மட்டுமல்ல, இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதலாக இனப்பிரச்சனை தீவிரமாக காரணமாக இருந்த தனிச்சிங்களச் சட்டம் முதல் புதிய அரசியலமைப்பு சட்டங்கள்வரை பலவற்றுக்கும் அவ்வப்போது ஆட்சியில் இருந்த கட்சிகளது சுயநலங்களும் காரணமாக இருந்தன.

முன்னாள் பிரதமர் அமரர் பண்டாரநாயக்கா 24 மணிநேரத்தில் தனிச்சிங்களச் சட்டத்தை கொண்டுவருவேன் என்ற வாக்குறுதிகளை வழங்கி ஆட்சியைப் பிடித்தார்.

தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டதற்கு பேரினவாத சிந்தனை காரணமாக இருந்தாலும், அதனை தமக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையிலான அரசியல் போட்டியில் தமக்கு சாதகமாக மாற்றிக் கொண்டார் பண்டாரநாயக்கா.

தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட காரணம் ஐ.தே.கட்சியை தேர்தலில் வெல்ல ஒரு கோஷம் தேவை என்பதால் தான் என்று கூறிய தமிழ் அரசியல்வாதிகள் அன்றும் இருந்தனர். அவர்கள் தமிழ்த் தலைமைகளால் துரோகிகள் என்று இனம் காட்டப்பட்டனர்.

தனிச்சிங்களச் சட்டம் என்றாலும் மொழியோடு மட்டும் நின்றுகொண்டது. இன்றைய யுத்தம் மொழியை மட்டுமன்றி தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய நிலம், பலம், அரசியல் கோரிக்கைகள், உரிமைகள், உடமைகள் அனைத்தையும் குறிவைத்து அழிக்கும் விதமாக உருவெடுத்துள்ளது.

இந்த யுத்த வெற்றியை பொதுஜன முன்னணி தனது சொந்த அரசியல் நலன்களுக்கு பயன்படுத்த நினைக்கிறது. இந்த யுத்தம் பேரினவாதத்தின் விருப்பங்களை பூர்த்தி செய்யக் கூடியது என்பதால்தான் யுத்தத்தில் வென்றால் தேர்தலில் வெல்லலாம் என்று பொ.ஜ. முன்னணி கணக்குப் போட்டிருக்கிறது.

பேரினவாதத்தின் மேலாதிக்க நோக்கங்களை யுத்த வெற்றிமூலம் நிறைவேற்றிக் கொடுத்து, அதற்கு கூலியாக தேர்தலில் வெற்றியைப் பெற்றுக் கொள்ளுவதே பொது ஜன முன்னணியின் இன்றைய அரசியல் தந்திரோபாயம்.



இதில் ஒன்றும் இரகசியமல்ல. யாழ்ப்பாண குடாநாட்டை வெற்றிகொண்ட சூரியக்கதிரின் சூட்டோடு மாகாணசபைத் தேர்தலை நடத்த ஒற்றைக்காலில் நின்றதும் இதே அரசாங்கம் தான்.

சப்பிரகமுவ மாகாணசபை, வடமேற்கு மாகாணசபை ஆகியவற்றை அவற்றின் பதவிக் காலம் முடியுமுன்பாகவே ஜனாதிபதி கலைத்தார். பின்னர் எதிர்க்கட்சி நீதிமன்றம் சென்றதால் கலைப்பு செல்லாது எனத் தீர்ப்பு வந்தது.

அப்போது கொழும்பில் புலிகளின் தாக்குதல்களும் தீவிரமாக இருந்தன. அப்படியிருந்தும் சூரியக்கதிர் வெற்றிச் சூடு தணியமுன்னரே மாகாணசபைத் தேர்தலை நடத்தி வாக்குகளை அள்ளும் நோக்கில், அடாத முறையில் சபைகளை கலைத்து படாதபாடுபட்டதும் இதே அரசுதான்.

சூரியக்கதிரில் 'யாப்பா பட்டுன' வீழ்ந்தது என்று பெருமிதம் பொங்க, பட்டாசுகள் வெடித்து மகிழ்ந்த பேரினவாதம் தன் மகிழ்ச்சிக்கு காரணமானவர்கள் கேட்கும் கூலியை கொடுக்க அன்று தயாராக இருந்தது.

தென்னிலங்கை உள்ளூராட்சித் தேர்தலில் 'எடிபல இராணுவ நடவடிக்கை'யை நடத்திக் காட்டி அதற்கான கூலியாக வெற்றியைக் கேட்டது பொ.ஜ.முன்னணி.

ஜயசிக்குறுய் நடவடிக்கையின் நீண்டகால தேக்கம் பேரினவாத சக்திகளிடம் முன்பிருந்த உற்சாகத்தை தணித்திருக்கிறது. அதுதவிர நாட்டில் ஏராளமான பொருளாதார அழுத்தங்கள் சாதாரண சிங்களக் குடிமகனை மூச்சுத் திணறவைக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் பாணியிலேயே அவர்கள் 17 வருடத்தில் செய்ததை, அதில் பாதி வருடங்களுக்குள் செய்து முடிக்க திடசங்கற்பம் பூண்டதுபோல இன்றைய ஆட்சியின் போக்கு மாறியுள்ளது.

ஜனாதிபதி ஆட்சிமுறையை உலக மகா கெட்ட ஆட்சிமுறை என்பதுபோல கூறியவர்கள் அதனை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, அதற்குரிய அதிகாரங்களையும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

எதனையெல்லாம் கண்டித்தனரோ அதனையெல்லாம் இன்று கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளனர். நாடு முழுக்க அவசரகால சட்டமும் கொண்டுவரப்பட்டு, ஜனநாயக உரிமைகளின் வரம்புகளும் மேலும் குறுக்கப்பட்டுள்ளன.

அனைத்தையும் நியாயப்படுத்த இருக்கக் கூடிய ஒரே வார்த்தை, "யுத்தத்தில் வெற்றி பெற்றாக வேண்டும்."

'உண்டி சுருங்கினாலும் பரவாயில்லை தமிழ் பேசும் தரப்பின் பலத்தை வேரோடு கிண்டிச் சாய்க்கும்வரை பொறுமையாக இருங்கள்' என்று பௌத்த மதகுருமார் ஊடாக சிங்கள மக்களுக்கு செய்தி கூறப்படுகிறது.

தேர்தல்களை ஒத்திவைக்குமாறு பௌத்த மதகுருமாரை தூண்டிவிட்டதில் இருந்தே யுத்தத்தின் பேரினவாத குணமும், நிறமும் வெளிப்படையாகியது.

அப்போதே தமிழ்க் கட்சிகள் விழித்திருக்க வேண்டும். தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிரான தென்னிலங்கை அரசியல் சக்திகளுடன் கைகோர்த்து நின்று தங்கள் எதிர்ப்பைக் காட்டியிருக்க வேண்டும்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தொண்டமான், சந்திரசேகரன் ஆகியோரும் மௌனமாக இருந்தனர். வடக்கு-கிழக்கு தமிழ்க் கட்சிகளும் இது ஏதோ தமக்கு சம்பந்தப்படாத பிரச்சனைபோல இருந்தனர். பூனை கண்களை மூடிக்கொண்டு உலகம் இருண்டு விட்டதாக நினைக்குமாம். தமிழ்க் கட்சிகளும் அந்த பூனைகள் போலத்தான் இருக்கின்றன.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற பேரினவாதத்தின் பிடி வாதம் இலங்கை முழுவதும் உள்ள தமிழ் பேசும் மக்களையும் இரண்டாம் தரப்பிரஜைகளாக்கும் இலக்குக் கொண்டதே.

அதுபோல தென்னிலங்கையில் இன்று நிகழும் அரசியல் நடவடிக்கைகளில் முக்கியமானவை தமிழ் பேசும் தரப்பை பலவீனமாக்கும் திட்டத்தோடு சம்பந்தப்பட்டவையே.

எனவே, மலையக கட்சிகள், வடக்கு-கிழக்கு கட்சிகள் என்ற வரம்புகளுக்கு அப்பால் பொதுவாக தமிழ்க் கட்சிகள் அனைத்தும் அரசின் யுத்த ஆர்ப்பரிப்புக்கு எதிராக ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். ஆனால், அது நடைபெறக் கூடியதாக தெரியவில்லை.

"புலிகளுக்கு எதிரான யுத்தம், புலிகளின் பிரச்சனை வேறு, தமிழர்களின் பிரச்சனை வேறு" என்ற பதங்கள் எல்லாம் பயன்படுத்தப்படுவது உள்நோக்கத்தை மூடிமறைக்கவே.

பிட்டுக்கு மண் சுமந்த சிவபெருமான்மீது விழுந்த அடி மனித குலம் முழுவதற்கும் முதுகில் விழுந்ததாக இந்து புராணக்கதையொன்று கூறுகிறது.

பேரினவாதத்தை பொறுத்தவரை புலிகள் மீதான வெற்றி என்பது முழுத் தமிழ் பேசும் மக்கள்மீதான வெற்றிதான். புலிகளுக்கு விழும் அடி தமிழ் பேசும் தரப்பின்மீது விழுந்து அவர்களை குனிந்து நிற்க வைக்கும் என்பதே பேரினவாதத்தின் நம்பிக்கை.

இதுதான் உண்மை நிலை. இது புலிகளுக்கு ஆதரவான கருத்தல்ல. புலிகளுடன் உடன்பாடில்லாத ஆனால் நிலவரங்களை கண்மூடித்தனமான புலிவிரோத கண்ணோட்டத்தில் நோக்காதவர்களுக்கும் இந்த உண்மை புரிந்தே இருக்கிறது.

மிக ஆபத்தான, அவலம் நிறைந்த காட்சிகள் தோன்றப்போகின்றன. யுத்தத்தில் வெல்லாவிட்டால் எதிர்காலமே இல்லை என்றளவுக்கு சூழலை உருவாக்கி, அந்த சூழலுக்குள் தன்னைத்தானே சிக்கவைத்துள்ளது அரசாங்கம்.

இனி சமாதானம் பற்றிய கதைகள் எல்லாம் நிகழப்போகும் அவலங்களில் இருந்து உலகை திசை திருப்புவதற்கு மட்டுமே.

கிடுக்குப்பிடி யுத்தம் ஒன்றுக்கு ஆள்,அம்பு, சேனையுடன் அரசு தயாராகிக் கொண்டிருக்கும்போது, 'புலிகளுடன் பேசலாம் என்று ஜனாதிபதி கூறியிருக்கிறாரே' என்று அபிப்பிராயம் கேட்க, அதற்கும் அப்பாவிகளாக பதில் சொல்லிக் கொண்டிருக்கின்றன தமிழ்க் கட்சிகள்.

இன்றைய நிலையில் புலிகளுடன் அரசு பேசும் என்று நினைப்பதைப்போல அழகான, மிக உயர்ந்த கற்பனை வேறில்லை. ஆனால் பாரிய உக்கிர யுத்தத்துக்கு பச்சைக் கொடி காட்டிவிட்டு, 'தடை இருந்தாலும் புலிகளுடன் பேசலாம்' என்று சமாதான முகம் காட்டுவது ஒன்றேபோதும், இன்றைய அரசின் நம்பகத்தன்மை புரிந்துவிடுகிறது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை சற்று வித்தியாசமாக இருக்கிறார். தேர்தல் ஒத்திவைக்கப்படாவிட்டால் பதவியை தூக்கிக்கடாசிவிடுவேன் என்று பகிரங்கமாகவே கூறினார். யுத்த வெற்றியே தன் இதய நாதம் என்பதையும் வெளிப்படையாக சொல்லியிருந்தார். 'இனத்தை காக்க வந்த துட்டகைமுனு' என்று அவரை பௌத்த மதகுருமார் ஆசிர்வதித்ததாக 'ராவய' பத்திரிகை கூறியிருக்கிறது.

அந்தப் புகழாரத்தையும் மறுக்காமல் ஏற்றுக்கொண்டதோடு, அதற்கு தகுதியானவராக தன்னை மாற்றிக்கொள்வதிலேயே குறியாக இருக்கிறார்.

செய்தித் தணிக்கை மத்தியில் படைத்தரப்பு வெளியிடும் தகவல்கள்கூட வன்னிச்சமர் இன்றுவரை மாங்குளத்தை சுற்றியே நடைபெறுவதாகவே கூறிக்கொண்டிருக்கின்றன.

மாங்குளத்திற்கு கிழக்கே ஒலுமடுவில் சண்டை நடந்ததாகக் கூட ரூபவாஹினி செய்தி கூறியது. கடந்த ஆறுமாதமாக ஒலுமடுவில் சண்டை என்று செய்திகள் சொல்லப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

மாங்குளத்திற்கு தென்மேற்கே இருப்பது மூன்று முறிப்புச் சந்தி. அங்கும் சண்டைகள் அடிக்கடி நடப்பதாக படைத்தரப்பு செய்திகள் கூறுகின்றன.

மாங்குளத்தை கைப்பற்ற எப்போது முனைந்தனரோ அப்போதிருந்தே ஒலுமடுவிலும், மூன்று முறிப்புச் சந்தியிலும் மோதல்கள் என்று செய்திகள் வரத் தொடங்கின.

ஆறுமாதங்களாக மோதல் குறிப்பிட்ட பகுதிகளில்தான் நடந்து கொண்டிருக்கின்றன என்று நாம் சொல்லவில்லை, அரசின் வெகுஜன தொடர்பு சாதனச் செய்திகளில் கூறப்படுவதில் இருந்து தெரிகிறது.

ஜயசிக்குறுயில் படையினரின் பாதுகாப்பு நிலைகள்மீது பாரிய தாக்குதல்களை புலிகள் சமீபத்தில் நடத்தியுள்ளனர். 03.08.98 அன்று இத்தாக்குதல் நடைபெற்றது.

படையினரை முந்தும் நோக்கில் அவர்களது நிலைகளை தாமே தேடிச்சென்று தாக்கியுள்ளனர் புலிகள்.

பாரிய தாக்குதல் நடந்ததாக படைத்தரப்பும் ஒப்புக்கொண்டு செய்தியறிக்கை வெளியிட்டுள்ளது.

இத் தாக்குதல் குறித்து ஆராய மூவர் அடங்கிய விசாரணைக்குழு ஒன்றும் இராணுவத் தளபதியால் நியமிக்கப்பட்டுள்ளது.

சாதாரண தாக்குதல்களுக்கு இவ்வாறு விசாரணைக்குழு அமைத்து ஆராயும் தேவை இருக்காது என்பது தெரிந்ததுதான்.

மாங்குளத்திற்கு தென்மேற்கில் இருப்பது மூன்று முறிப்பு. புளியங்குளத்தில் இருந்து மேற்கில் இருக்கிறது.

மூன்று முறிப்பில் ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு அமைந்திருந்த பாதுகாப்பு வேலிகள்மீதே புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். சிறுத்தைப் புலிகள் அணியே இத்தாக்குதலை நடத்தியதாகத் தெரிகிறது.

03.08.1998 ஞாயிறு நள்ளிரவில் தாக்குதல் நடத்திய புலிகள், பின்னர் தாக்குதலை நிறுத்தினர். மீண்டும் உடனடியாக புலிகள் தாக்குதல் நடத்த மாட்டார்கள் என்று கருதப்பட்ட சூழலில் மறுதாக்குதலை திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு மேற்கொண்டனர்.

அடுத்த ஞாயிறு 09.08.1998 இலும் படை நிலைகள்மீது பாரிய மோட்டார் ஷெல் தாக்குதலை புலிகள் தொடுத்தனர்.

> **தேர்தல் ஒத்திவைப்பு என்பது, தென்னிலங்கை அரசியல் பிரச்சனையல்ல! தேசிய இனப் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு காணும் உக்கிரச் சமருக்கு கட்டியம் கூறுவதே தேர்தல் ஒத்திவைப்பு!**

மாங்குளம் சண்டைகள் ஒரு முனையில் நடைபெறும்போது மறுமுனையில் கிளிநொச்சி நகர்ப்பகுதியிலும் மோதல்கள் நடந்து வருகின்றன. அங்கும் முன்னேற்றம் பின்னேற்றம் பெரிதாக இருப்பதாக படைத்தரப்பு தகவல்களும் கூறவில்லை.

மொத்தத்தில் களநிலவரம் கடும் சமபல நிலவரமாக இருப்பதால், மூர்க்கமான நகர்வுகளை படையினரிடம் எதிர்பார்க்கலாம். படையினரை வன்னியில் குவிக்கப் போவதாக ஜெனரல் அனுருத்த ரத்வத்தை பாராளுமன்றத்தில் கூறியுமிருக்கிறார். புலிகளும் பாரிய சமரை எதிர்கொள்ள தயாராகிவிட்டனர்.

இந்நிலையில் உக்கிரச் சமர் மேலும் பல இலட்சம் மக்களை இடம்பெயரச் செய்யப் போகிறது. பாரிய சொத்தழிவுகளுக்கு வழிவகுக்கப்போகிறது.

தேர்தலை ஒத்திவைத்து பாரிய சமருக்கு தயாராவதை கண்டும் காணாமல் இருக்கும் தமிழ்க் கட்சிகள், இந்த சமரால் ஏற்படும் அவலங்களை தங்கள் அறிக்கை அரசியலுக்குரிய கருப்பொருளாக மாற்றிக் கொள்வர். ஜனாதிபதியுடனும், அமைச்சர்களுடனும் பேசியிருக்கிறோம், எடுத்து கூறியிருக்கிறோம். அவர்களும் செவிமடுத்தனர் என்று செய்திகள் வெளியிட்டு விளம்பரம் தேடுவர்.

வெள்ளம் தலைக்குமேல் வரப்போகிறது என்பதை தேர்தல் ஒத்திவைப்பு கட்டியம் கூறும்போதும், எத்தகைய எதிர் நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல் இருக்கும் இக்கட்சிகள், அரசியல் தீர்வு, அன்றாட அவலங்கள் பற்றி பேசுவது வெறும் வாயை மெல்லுவது போன்றதே.

இதுவரைகாலமும் தமிழ் பேசும் தரப்பு எதிர்கொள்ளாத அவலங்கள் இப்போதே தோன்றியுள்ளன. மேலும் யுத்தம் உக்கிரமாகும்போது இதனைவிட பல மடங்கு அவலம் சூழப்போகிறது.

இதனை முற்றாக தடுக்கக்கூடிய பலம் தமிழ் கட்சிகளிடம் இல்லாவிட்டாலும், பெருமளவு குறைப்பதற்கான அழுத்தங்களையாவது பிரயோகிக்கலாம்.

தேர்தல் ஒத்திவைப்பு என்பது தமிழ் பேசும் மக்களை அழிவுக்குள்ளாகும் விதமான யுத்த உக்கிரத்துக்கு இட்டுச் செல்லப் போகிறது என்று வெளியுலகம் முன்னால் முன்கூட்டியே எடுத்துரைக்கலாம்.

தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிரான சக்திகளுடன் இணைந்து நின்று போராடலாம். அதன் ஊடாக ஜனநாயக மறுப்புக்கு எதிரான பொதுப்போராட்டம் என்ற தளத்தை தமிழ் பேசும் தரப்பை பலவீனப் படுத்துவதற்கு எதிரான நோக்கத்துக்கும் பயன்படுத்தலாம்.

தமிழ் பேசும் மக்கள்மீது அவசரகால சட்டம் பாய்ந்தபோதெல்லாம் பார்த்திருந்த சிங்கள மக்களை நோக்கி அதே சட்டம் திரும்பியுள்ளது. இதனை பயன்படுத்தி அவசரகால சட்டத்திற்கு எதிரான பொது எதிர்ப்பை உருவாக்கலாம்.

இப்படி எத்தனையோ மார்க்கங்கள் ஆயுதம் ஏந்தாத பாதையில் சாதிக்கக் கூடியதாக உள்ளன. ஆனால் மார்க்கம் இருந்தாலும் மனம் வேண்டுமே. ○

நாரதர்

---

## அதிரடி அய்யாத்துரை



***ரெண்டு எழுத்துத் தலைவரை*** மலையகத் தனித்துவத் தலைவர் புகழ்வது எல்லாம், உதட்டளவுதான் என்று முரசு சொன்னதை நிருபித்துப் போட்டார். கொலைப்பட்டியலில் அவர் பெயரும் இருப்பதாகக் கூறியதை, யார் கூறுகிறார்கள்; எதற்காகக் கூறுகிறார்கள் என்ற ஆய்வே இல்லாமல் ஒப்புக்கொண்டமாதிரியல்லோ பேட்டிகள் கொடுத்திருக்கிறார்! 'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்பதை பெரும் தலைவர் மறந்தது ஏனோ? இதுதான்(டா) அரசியல்!

***ஞானப்பால் உண்ட*** தமிழ் அரசியல்வாதி, "மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கேட்கவில்லை. உதவிதான் கேட்டனாங்கள்!" என்று சொன்னதற்கு கட்சிக்குள் கடும் எதிர்ப்பாம். யாழ் மாநகர கூட்டான கட்சிப் பிரமுகர்கள் கெட்ட கோபத்தில் இருக்கினமாம். நாங்கள் மத்தியஸ்தம் தேவை என்று அறிக்கைவிட, "இந்த மனுசன் மறுப்பறிக்கை விட்டுக் கெடுக்குது!" என்றாராம் முக்கிய பிரமுகர் ஒருவர்.

***வடக்கு-கிழக்கு*** மாகாண கல்வி சம்பந்தப்பட்ட அந்த அதிகாரி தற்போது கிழக்கின் தனித்துவத் தலைவரின் உதவியை நாடியிருக்கிறாராம். பதவிக்கு மாற்றம் வந்தால், அவரது பிரிவுக்குள் செல்லும் உத்தேசத்துடன்தான் நாடியிருக்கிறார். பேனா, பென்சில் விழுங்கியவருக்கு கப்பல் கப்பலாக விழுங்கும் ஆசை வந்துவிட்டதாக்கும்! தனித்துவத் தலைவர் தட்டிக் கொடுப்பாரா? வெட்டி விடுவாரா?

***தபால் தந்தி மற்றும் தகவல்துறைக்கு*** பொறுப்பானவர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மான விடயத்தில் தமிழ்க் கட்சிகள் அதிகார முள்ளவரை ஆதரித்தன. அப்படி ஆதரித்ததுகூட வேறு விஷயம்! ஆனால் அந்தப் பிரேரணையையும் இனப்பிரச்சனையையும் தொடர்புபடுத்தி சில தமிழ் பிரதிநிதிகள் ஆற்றிய உரை அல்லது கிலோக்கணக்கான ஐஸ் இருக்கிறதே. சொறி கொஞ்சம் ஓவர்! போராளிக் கட்சிகள் இன்று புகழாரக் கட்சிகளாகிவிட்டன. நல்லவர், வல்லவர் என்று ஜே.ஆரை புகழ்ந்த அமுதரை விளாசிய இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் இன்று தாமே புகழ்வதில் முண்டியடிப்பதைப் பார்த்தால்... சபாஷ் சரியான ஐஸ் மோதல்!

***தமிழ்க் கட்சியான கழகத்தில்*** உட்பிரச்சனையில் சமரச முயற்சிகள் நடக்கிறதாம். சமீபத்தில் வெகுஜனசபை உணவு விடுதியில் கழக சித்தரும், மாணிக்கமும் சமரசப் பேச்சு நடத்தினராம். ஒன்றாக உணவருந்திய படி பேச்சு நடந்ததாம். வவுனியா வெகுஜன பிரதிநிதி சந்திரர்தான் சமரசத்தூதுவராக செயற்பட்டதாகத் தெரிகிறது. உட்பிரச்சனையால் அடிவாங்கிய பிற்றர் என்னும் ஆறுமுகம் இன்னமும் தலைநகர பொது மருத்துவமனையில்தான் இருக்கிறார். பலமாதங்களாக இருக்குமளவுக்கு செமர்த்தியா அடி விழுந்திருக்குது. அவரைத் தாக்கியவர்கள் தலைநகர கழக அலுவலகத்தில் நிற்பதாக பொலிசுக்கு முறைப்பாடு செய்யப்பட்டதாம். இவை ஒருபுறமிருக்க சமரச ஏற்பாடுகளும் தொடர்கின்றனவாம். "கழக இராணுவப் பிரிவுக்கும் எனக்கும் ஒரு தொடர்புமில்லை, உறவுமில்லை" என்று கழக சித்தர் பேட்டியும் கொடுத்திருக்கிறார்.

***"யாழ் மாவட்டத்தில்*** அடுத்து வரும் தேர்தல்களில் முன்னாள் போராளிக் குழுக்களை சனத்தின் மத்தியில் இருந்து விலக்கிக் காட்டுகிறோம்!" இப்படி சவால் விட்டாராம் கூட்டான கட்சிக்கு யாழில் முக்கியமாக உள்ளவர். சவால் விட்டது ஒரு வெளிநாட்டு பிரமுகரிடம்!

***மன்னாரில் எட்டுத் தமிழர்களை*** சுட்டுப்போட்டினம். சுட்டது யார் என்று தெரிந்தும், காதில் பட்டதுபோலவே காட்டிக் கொள்ளவில்லை தமிழ்க் கட்சிகள். கொழும்பில் மனித உரிமை கொப்பளிக்கும் ஐயாமாரும், அம்மாமாரும் எங்கே போனவையோ தெரியேல்லை! எல்லாம் தனக்குத்தனக்கு என்றால்தான் படக்குப் படக்கு என்றடிக்கும்!

***தலைநகரில் நடந்த*** பெரும் மாநாட்டில் சக்தியானவர் ஏற்றிய விளக்கு அணைந்துவிட்டதாம். அபசகுணமாக இருக்கக் கூடாது என்பதற்காக வெளிநாட்டு விவகாரங்களுக்குப் பொறுப்பானவர் ஒரு காரியம் செய்வித்தாராம். அணையாமல் இருந்தமீதி விளக்குகளையும் அணைக்கச் சொல்லிப்போட்டாராம்!

***சர்வதேச மன்னிப்புச் சபை*** உட்பட வெளியுலக மனித உரிமை அமைப்புக்கள் அரசைச் சாட ஆரம்பித்துவிட்டன. ஆனால் இங்குள்ள தமிழ்க் கட்சிகள், தங்கள் அரசியல் விளம்பரத்துக்காக, புதைகுழி விவகாரங்களையும், அன்றாட அவலங்களையும் அம்மையாரிடம் முறையிட்டு பரிகாரம் கண்டு விடலாம் என்பதுபோல புலுடா விட்டுக் கொண்டிருக்கின்றன. இது மக்கள் சேவையல்ல; மாண்புமிகு அரசுக்கு ஆற்றும் சேவை!

***நல்லைக் கந்தன்*** திருவிழாவில் தொல்லைக் குமரர்கள் கொட்டம் தாங்க முடியவில்லையாம். தட்டிக்கேட்க ஆளில்லை. சுட்டிக் காட்டவும் கேட்பாரில்லை. கந்தன் கையில் உள்ள வேல் இருந்தாலும், இந்த வால்களை நறுக்குவதற்கு முடியவில்லையே என்று ஏங்கினராம் பக்தர்கள்.

***தலைநகர மயூராபதி*** ஆலயத்தில் பைகளை பிளேட்டால் வெட்டி உருவும் கில்லாடிகள் பக்தர்கள் ரூபத்தில் உலாவுகிறார்களாம். அதில் சிலர் நல்ல திருடர்கள். எப்படி என்று தெரியுமா? பர்சுகளில் பணத்தை எடுத்துப்போட்டு அதற்குள் உள்ள அடையாள அட்டையுடன் கோயிலடியில் போட்டுவிட்டு போவதால், அட்டைகளைப் பறிகொடுத்தவர்களுக்கு மறுபடி கிடைக்கிறதாம். கொழும்பில் தமிழர்கள் பணம் இன்றியும் சீவிக்கலாம், அடையாள அட்டை இல்லாவிட்டால் பிணம்தான். வாழ்க-மனிதாபிமானத் திருடர்கள்!

***இவ்வாரப் பொன்மொழி:***

> "முயன்று தோற்பது கௌரவம்!
> முயலாமல் இயலாதென்பது கேவலம்!" ■



படிப்பகம்

www.padippakam.com

யாழ்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# 194

கோட்டை முற்றுகையை உடைக்க மண்டைதீவில் இருந்து முன்னேறிய படையினரில் ஒரு பகுதியினர் புலிகளின் தாக்குதல் காரணமாக கோட்டைக்குள் புகுந்துகொண்டனர்.

முற்றுகையை உடைக்க நினைத்து தாமே முற்றுகைக்குள் சிக்கிக் கொண்டனர் அவர்கள்.

மூன்று மாதங்களாக நீடித்த முற்றுகையை எப்படியாவது முடிவுக்குக் கொண்டுவந்தேயாக வேண்டும். என்ன செய்யலாம்? ஏது செய்யலாம்? என்று படைத்தரப்பு யோசனையில் மூழ்கிக் கிடந்தது.

விமானத் தாக்குதல்களையே படையினர் மலையாக நம்பியிருந்தனர். ஆனால் விமானத் தாக்குதல்கள் மத்தியிலும் புலிகள் முற்றுகையைத் தொடர்ந்தனர்.

அதன் பின்னர்தான் இரசாயனக் குண்டுகளுடன் அவ்ரோ விமானம் யாழ் நகர் நோக்கி அனுப்பிவைக்கப்பட்டது.

25ற்கு மேற்பட்ட குண்டுகளை அவ்ரோ யாழ் நகரில் வீசியது. புலிகளின் காவலரண் என்று கருதப்படும் பகுதிகளை இலக்கு வைத்து குண்டு போட்டது. குண்டுகள் நகரில் கட்டடங்களை நாசமாக்கினவே தவிர, புலிகளின் பதுங்கு நிலைகளைத் தகர்க்க முடியவில்லை.

விமானத் தாக்குதல்களிலும், மண்டைதீவில் இருந்து முன்னேறிய படையினரது தாக்குதல்களிலும் பல நூற்றுக்கணக்கான புலிகள் பலியாகி விட்டதாக இலங்கை அரசு கூறிக் கொண்டிருந்தது.

• கோட்டை முற்றுகையை புலிகள் ஆரம்பித்த பின்னர் புலிகள் தரப்பில் கொல்லப்பட்டதாக அரசு வெளியிட்ட எண்ணிக்கைகளைக் கூட்டிப் பார்த்தால் ஒட்டுமொத்தமாகப் புலிகள் இயக்க உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் தாண்டிவிடும்.

## நினைவு நாள்

திலீபனின் நினைவு நாள் நெருங்கி வருகிறது. அதனை முன்னிட்டு யாழ் கோட்டை முகாம்மீது இறுதித் தாக்குதல் ஒன்றை, உக்கிரமாகத் தொடுக்கப் போகிறார்கள் புலிகள், என்ற தகவல் அரசின் புலனாய்வுப் பிரிவினருக்கு எட்டியது. அது அரசுக்கு போனது.

அவ்வாறு மூர்க்கமான தாக்குதல் நடத்தப்பட்டால் தாக்குப்பிடிக்க முடியுமா? இல்லையா? என்று யோசித்தனர்.

வான் மார்க்கமாகவோ, தரை மார்க்கமாகவோ விநியோகம் நடத்த முடியாத நிலையில் இருக்கிறது யாழ் கோட்டை முகாம்.

இவ்வாறான ஒரு முகாமைத் தொடர்ந்து தக்க வைப்பது இராணுவ ரீதியில் சாத்தியமானதல்ல எனவும் படை அதிகாரிகள் நினைத்தனர்.

"எப்படியிருந்தபோதும் யாழ் கோட்டையை கைவிடோம். புலிகளின் முற்றுகையை முறியடித்து அவர்களை விரட்டியடிப்போம்!" என்று அரசாங்கம் சூளுரைத்துக் கொண்டிருந்தது.

அதனால், யாழ் கோட்டையை மேலும் சில மாதங்களுக்காயினும் வைத்திருந்துவிட்டு பின்னர் கைவிடலாம் என்பதே அர சாங்கத்தின் திட்டம்.

இல்லையெனில் எதிர்க்கட்சிகள் கிண்டல் செய்யும். போரில் தோல்வி கண்டுவிட்டதாக பிரசாரம் செய்யும்.

ஆகவே முடியுமானவரை புலிகளின் முற்றுகையை உடைத்து அவர்களை விரட்ட நடவடிக்கை எடுக்குமாறு களத் தளபதிகளுக்கு அரசாங்கம் உத்தரவிட் டது.

படையினரால் கைப்பற்றப்பட்ட மண்டைதீவு கடற்கரையோரப் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர்மீது தினமும் இரவில் புலிகள் தாக்குதல் நடத்தியவண்ணம் இருந்தனர்.

# 105 நாள் முற்றுகை

கடற்பகுதியில் வைத்தும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

யாழ் கோட்டை முற்றுகையைத் தகர்ப்பதுடன், யாழ் நகரையும் படையினர் கைப்பற்றி விடுவார்கள் என்று அரசாங்க பிரசார சாதனங்கள் கூறிக் கொண்டிருந்தன.

இதற்கிடையே போர்க்களச் செய்திகளை அரசாங்கம் எப்படியெல்லாம் திரிபுபடுத்தியது என்பதற்கு ஓர் உதாரணமாக அறிவிப்பு ஒன்று வெளியானது.

"யாழ் கோட்டை முற்றுகை முறியடிக்கப்பட்டது. மறுபடி கோட்டைப் பகுதி அரச துருப்புக்களிடம் வந்துவிட்டது!" என்று கூறியது அந்த அறிவிப்பு.

மண்டைதீவில் இருந்து கடற்பாதை ஊடாக நகர்ந்த படையினர் புலிகளுடனான சண்டையில் யாழ் கோட்டைக்குள் பின்வாங்கினார்கள்.

அதனைத்தான் யாழ் கோட்டை கைப்பற்றப்பட்டது என்று அறிவித்தது அரசாங்கம்.



கோட்டையில் புலிக்கொடி



திலீபன்

## இறுதித் தாக்குதல்

கோட்டை மதில்மேல் காவலுக்கு நிற்கும் படையினரை நோக்கியும் புலிகள் தாக்கினார்கள்.

திலீபனின் நினைவு நாளை நெருங்கிக் கொண்டிருந்தபோது புலிகளின் அணிகள் இடையேயும் எப்படியாவது கோட்டையை பிடித்தே தீருவது என்னும் உத்வேகம் ஏற்பட்டிருந்தது.

கோட்டை மதிலில் புலிகள் தாவி ஏற முற்பட்டனர். அவர்களில் சிலர் மதில் மேல் காவலுக்கிருந்த படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

அவர்களது சடலங்களை புலிகளால் மீட்க முடியவில்லை. அப்படியே கிடந்தன.

"1990 செப்டம்பர் 26ம் திகதி திலீபனின் நினைவு தினம். அத் தினத்தில் யாழ் கோட்டை எமது கையில் இருக்க வேண்டும். அங்கு புலிக்கொடி ஏற்ற வேண்டும்!" என்று தீர்மானித்தனர் புலிகள்.

அதே நேரம் படையினரும் புலிகளின் பாரிய தாக்குதலை எதிர்கொள்ளும் வழிவகைகள் பற்றி முடிவு செய்திருந்தனர்.

எதிர்த்து நிற்க முடியாவிட்டால் யாழ் கோட்டையைக் கைவிட்டு மண்டைதீவை நோக்கிப் பின்வாங்குவது என்று முடிவு செய்திருந்தனர்.

கோட்டையை கைவிட நேர்ந்தால், எவ்வாறு பின்வாங்குவது, ஆயுத தளபாடங்களை எப்படி கொண்டு செல்வது என்பது பற்றியும் முடிவு செய்யப்பட்டது.

மண்டைதீவை நோக்கியிருந்த கடற்கரையோரமாக சீமெந்திடப்பட்டு முடிவைக்கப்பட்டிருந்த பின் கதவு அகற்றப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டது. இப்பாதை முன்னர் கழிவு அகற்றப் பயன்பட்டது.

செப்டம்பர் 25ம் திகதி யாழ் மாவட்ட தளபதி பானு தலைமையில் இறுதித் தாக்குதல் ஆரம்பமானது.

நள்ளிரவு 12 மணியளவில் புலிகளின் சொந்தத் தயாரிப்பான பாரிய மோட்டார் ஷெல்கள் கோட்டை முகாமை நோக்கி சரமாரியாக ஏவப்பட்டன.

பாரிய சத்தத்துடன் கோட்டையின் கொத்தளங்கள் சரிந்துவிழும் விதமாக ஷெல்கள் உள்ளே விழுந்து வெடித்தன.

எதிர்பார்த்தது சரிதான். புலிகள் தாக்குதலை உக்கிரமாகத் தொடுத்து விட்டனர் என்பது 'உள்ளிருந்த படையினருக்கு தெரிந்துவிட்டது.

யாழ் கோட்டையைத் தக்கவைக்க முயன்று தோற்றால், உள்ளே இருக்கும் படைகள் அழிய நேரலாம்.

அப்படி நிகழ்ந்தால் தென்னிலங்கையில் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டி வரும். முகம் கொடுக்க அரசால் முடியாது.

ஆகவே, உத்தரவு பறந்தது. "யாழ் கோட்டைக்குள் இருக்கும் துருப்புக்களை மீட்டெடுப்பதுதான் முக்கியம்!"

கோட்டைக்குள் இருந்த படையினருக்கும் உத்தரவு சென்றது: "ஆயுத தள பாடங்களுடன் கோட்டையைவிட்டு வெளியேறுங்கள்!"

அக் கட்டத்தில் வங்கியும் யாழ் கோட்டைக்குள்தான் இருந்தது. அங்கு பணமும், நகைகளும் இருந்தன.

## வெளியேற்றம்

கோட்டையின் உள்ளே புலிகளின் ஷெல்கள் விழுந்து வெடித் துக்கொண்டிருக்கையில் கோட்டையின் பின்புற வாயிலை உடைத்தபடி படையினர் வெளியேற ஆரம்பித்தனர்.

கோட்டையைவிட்டு பின்புற வழியாகவே படையினர் தப்பிச் செல்லுவர் என்பதை புலிகள் முன் கூட்டியே ஊகித்திருந்தனர்.

அதற்கேற்ப பின்புறமாக தப்பிச்செல்லும் படையினரைத் தாக்கி அழிக்க அணிகள் நிறுத்தப்பட்டிருந்தன.

யாழ் கோட்டைக்குள் இருந்து பாரிய ஆயுத தளபாடங்களுடன் வெளியேறிய படையினரின் சுடுபலம் அதிகமாக இருந்தது.

அதுதவிர, மண்டைதீவில் இருந்து படகுகள் மூலம் வந்த கடற்படையினரும் இராணுவத்தினருக்கு உதவினர்.

# வீழ்ந்தது யாழ் கோட்டை



படகுகள், மற்றும் காற்றடைத்த ரப்பர் படகுகள் போன்றவற்றின் உதவியுடன் மட்டுமன்றி, கையால் துடுப்பு வலித்தபடியும் படையினர் மண்டைதீவுக்கு அருகிலுள்ள சிறுத்தீவு நோக்கிச் சென்றனர்.

கோட்டை மதில் அருகே ஏணிகளை வைத்து ஏறிய புலிகள் கோட்டையின் உட்புறத்தில் குதித்தனர். இதனையடுத்து கோட்டையின் உட்புறத்தில் படையினரும் புலிகளும் மோதினர்.

யாழ் கோட்டையைக் கைவிட்டுச் செல்லும் படையினர் ஆயுத தளபாடங்களை கொண்டு செல்லாமல் தடுப்பதற்காகவே வெளியேறிய படையினரை நோக்கி புலிகள் தொடர்ந்து தாக்கினார்கள்.

ஆனால் புலிகளின் தடுப்பு முயற்சியை முறியடித்து பெரும் தொகையான ஆயுத தளபாடங்களுடன் மண்டைதீவுக்கு அருகிலுள்ள சிறுத்தீவுக்கு படையினர் சென்றடைந்தனர்.

செப்டம்பர் 26ம் திகதி அதிகாலை 3.30 அளவில் யாழ் கோட்டை முற்றாக புலிகளின் கையில் வீழ்ந்தது.

சிறுத்தீவு நோக்கிச் சென்ற படையினரை நோக்கியும் புலிகள் தாக்கத் தொடங்கினார்கள். ஷெல்களும் ஏவப்பட்டன.

அதனால் சிறுத்தீவில் இருந்து மண்டைதீவை சென்றடைந்தனர் படையினர்.

சரியாக 105 நாட்கள் நடைபெற்ற முற்றுகையுத்தத்தின் பின்னர் கோட்டையைக் கைப்பற்றினர் புலிகள்.

இறுதி நாள் மோதலில் புலிகள் தரப்பில் பெண் புலியான இரண்டாம் லெப்டினன்ட் சிசிலியா (யூஜினா பகீரதகுமார்- மன்னார்) லெப்டினன்ட் நகுலன் (இராசதுரை நேசன்- வதிரி) ரகு (றொபேர்ட் சாந்தகுமார்- கட்டுடை) ஆகியோர் பலியாகினர்.

யாழ் கோட்டைக்குள் இருந்த முக்கிய ஆயுத தளபாடங்களை படையினர் எடுத்துச் சென்றனர்.

ஆர்.பி.ஜிக்கள், ரி.56 ரக துப்பாக்கிகள், எல்.எம்.ஜிக்கள், பெரும் தொகையான ரவைகள் என்பவை புலிகளால் கோட்டைக்குள் இருந்து கைப்பற்றப்பட்டன.

கோட்டை முற்றுகைக் காலத்தில் கோட்டை மதிலில் ஏறி பலியான புலிகளின் எலும்புக்கூடுகளும், சீருடைகளும் மதிலோரங்களிலிருந்து புலிகளால் மீட்கப்பட்டன.

## கொடி

1987 செப்டம்பர் 26ம் திகதி காலை 10.48க்கு திலீபனின் உயிர் பிரிந்தது.

1990 செப்டம்பர் 26ம் திகதி காலை 10.48 க்கு யாழ் கோட்டையில் புலிகளின் யாழ் மாவட்ட தளபதி பானு புலிக் கொடியை ஏற்றிவைத்தார்.

யாழ் கோட்டையைக் கைவிட்ட பின்னர் அதற்கு அரசாங்கமும், படைத்தரப்பும் பல காரணங்கள் கூறின.

"கோட்டைக்குள் பெருந்தொகையான பணமும், நகைகளும் இருந்தன. அவற்றைக் கைப்பற்றவே புலிகள் திட்டமிட்டிருந்தனர். நாம் அவற்றைக் காப்பாற்றிவிட்டோம்!" என்றனர்.

கோட்டை வங்கியில் பணமும், நகைகளும்இருந்தன என்றாலும், அதனை குறிவைத்து பாரியதாக்குதல் நடத்துமளவுக்கு பெரும் தொகையாக இருக்கவில்லை.

"யாழ் கோட்டை இராணுவரீதியில் முக்கியத்துவம் வாயந்தது அல்ல. அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று முன்னரே முடிவு செய்திருந்தோம்!" விரைவில் யாழ் நகரைப் பிடிப்போம் என்றும் கூறப்பட்டது.

யாழ் கோட்டையை கைப்பற்றிய புலிகள் பின்னர் அதனை படிப்படியாக தரைமட்டமாக்கினர்.

அவ்வாறில்லாமல் இன்று யாழ் கோட்டை இருந்திருக்குமானால், யாழில் உள்ள படையினருக்கு பலமான தளமாக விளங்கியிருக்கும்.

யாழ் கோட்டையை இழந்தது அப்போதைய நிலையிலும், நீண்டகால நோக்கிலும் அரசுக்கு ஏற்பட்ட பாரிய இழப்புத்தான். எனினும் தோல்வியை ஒப்புக்கொள்ள அரசாங்கம் முன்வரவில்லை.

இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான போரில் முதலாவது நீண்ட முற்றுகை யுத்தம் யாழ் கோட்டை யுத்தமாகும்.

யாழ் கோட்டை வீழ்ந்ததை முன்னிட்டு புலிகளின் தலைமைச் செயலகம் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

"300 வருடகாலங்களுக்கும் மேலாக தமிழீழ மக்களை ஆக்கிரமித்து நின்ற ஆக்கிரமிப்புச் சின்னங்களில் ஒன்றான யாழ் கோட்டை இன்று அதிகாலை எம்மால் கைப்பற்றப்பட்டது.

என்ன விலை கொடுத்தும் இதனைக் கைப்பற்றுவோம் என்ற எமது உறுதி மொழியை நிறைவேற்றிவிட்டோம்!" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

## அரசின் அறிக்கை

அன்றைய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டார்.

"யாழ் கோட்டையை உங்களிடம் ஒப்படைக்கிறோம். யாழ் பொது மருத்துவமனை இயங்க ஏற்பாடு செய்யுங்கள்!" என்று கேட்டுக் கொண்டார்.

'விழுந்தும் மீசையில் மண்படவில்லை' என்ற கதைக்கு ஒப்பானதே ரஞ்சனின் அறிவிப்பாகும்.

அரசாங்கம் என்னதான் சமாதானம் கூறியபோதும், எதிர்க்கட்சிகள், "அரசு தோல்வி கண்டுவிட்டது. கோட்டையை புலிகளிடம் இழந்துவிட்டது!" என்றே பிரசாரத்தை முடுக்கிவிட்டன.

யாழ் கோட்டையைக் கைப்பற்றிய உற்சாகத்தோடு அடுத்த கட்டத் தாக்குதல்களுக்கு புலிகளின் அணிகள் தயாராகின.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# நினைப்பும் — நிராகரிப்பும்!

## வெற்றியே மூலதனம்!

"மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு பிரபாகரன் அரசிடம் கோரினால், அதனை பரிசீலிக்கத் தயாராக உள்ளேன்" என்று ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா சில ஆண்டுகளுக்கு முன்னர் (1996இல்) பேட்டியளித்திருந்தார்.

இந்து ராமை ஆசிரியராகக் கொண்ட இந்திய ஃபுரொன்ட்லைன் சஞ்சிகைக்காக அப்பேட்டியை ராம் மாணிக்கலிங்கம் எடுத்திருந்தார்.

அப்பேட்டி வெளியானதும் சில விமர்சகர்களும், சில தமிழ்க் கட்சிகளும் ஜனாதிபதியை பாராட்டியதுடன், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் எவ்வாறு அமையும் என்ற ஆராய்ச்சிகளிலும் ஈடுபடத் தொடங்கியிருந்தன.

ஆனால், அப்போதே, இலங்கை அரசு ஒருபோதும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை விரும்பமாட்டாது என்றும், அப்பேட்டி ஒரு அரசியல் தந்திரமே என்றும் முரசு திட்டவட்டமாக கருத்து வெளியிட்டிருந்ததை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

ஜனாதிபதியின் பேட்டியை தந்திரம் என்று கருதாமல், உண்மை என நம்பிய கூட்டணியின் செயலதிபர் இரா.சம்பந்தன் "மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை" என்று பாராளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார்.

"மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமே தேவையில்லை" என்று வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் திட்டவட்டமாக தெரிவித்தார். அதன்பின்னர் இரா. சம்பந்தனோ கூட்டணியினரோ மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கை பற்றி மூச்சே விடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மெத்தப் படித்தவர்கள் என்றும், அரசியல் சட்டம், அரசியல் ஞானம் என்பவற்றில் கரை கண்டவர்கள் என்றும் தங்களைக் கருதிக்கொள்ளும் கூட்டணியினர் அன்று முதல் இன்றுவரை தென்னிலங்கை அரசியல் தலைவர்களின் உதட்டளவிலான பேச்சுக்களை நம்பி ஏமாறுகிறவர்களாகவே இருந்து வருகின்றனர்.

இவர்கள் அரசின் நம்பிக்கையைப் பெறுவதற்காக அரைகுறை தீர்வுப் பொதியின் ஆதரவாளர்களாக இருந்தும்கூட, தமிழர் தரப்பு என்ற வகையில் இவர்களுடனும் 'நம்ப நட நம்பி நடவாதே' என்ற தோரணையில்தான் தென்னிலங்கை சிங்களத் தலைமைகள் நட்பு வைத்திருக்கின்றன.

அதனால்தான் ஜனாதிபதி போன்றோர் கூறும் சில கருத்துக்களின் உள்அர்த்தங்களை இவர்களாலும் அறியமுடிவதில்லை. அதனால் அவற்றை உண்மை என நம்பி வரவேற்பதும், பின்னர் அக் கருத்துக்களின் உள் அர்த்தம் அம்பலமாகும்போது அசடு வழிவதுமாக இத்தலைமைகள் அவமானப் படவும் செய்கின்றன.

தற்போதுள்ள அரைகுறைத் தீர்வுப் பொதியையே மேலும் எடை குறைக்கும் வகையில், பேரினவாத சக்திகளின் அச்சுறுத்தல்களுக்கு வளைந்து கொடுக்கும் அரசாக இன்றைய அரசும் மாறியுள்ளது.

இன்றைய யுத்தம் என்பதும் முக்கியமாக இரு அடிப்படைக் காரணங்களுக்காகவே நடத்தப்பட்டு வருகிறது.

1. தென்னிலங்கையில் இன்றைய ஆளும் கட்சியின் எதிர்கால தேர்தல் வெற்றிகளுக்கு உரிய அரசியல் மூலதனமாக பயன்படுத்துவது.

2. சிங்களப் பேரினவாதம் அங்கீகரிக்கக் கூடிய அரைகுறைத் தீர்வுப் பொதியை தமிழ் பேசும் மக்களிடம் திணிக்கக்கூடிய சூழ்நிலையை தோற்றுவிப்பது.

இந்த உண்மையை புரிந்து கொண்டால், இந்த உண்மைகளின் வெளிச்சத்தில் ஜனாதிபதியின் பேட்டிகள் உட்பட ஆட்சியாளர்களின் இனிப்பான பேச்சுக்களின் பின்னணிகளை, உள் அர்த்தங்களை சுலபமாக கண்டுபிடிக்கக் கூடியதாகவிருக்கும்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்று ஏற்படுமானால் முதலுக்கே மோசம் என்று அஞ்சும் நிலையிலேயே ஆட்சியாளர்கள் இருந்து வருகின்றனர்.

இனிக் கொடுப்பதற்கு எதுவுமில்லை. இன்னமும் குறைப்பதற்கே இடமிருக்கிறது என்ற நிலையில்தான் தீர்வுப்பொதி பற்றிய சிங்களப் பேரினவாதத்தின் கண்ணோட்டம் அமைந்திருக்கிறது.

அக் கண்ணோட்டத்தினை ஒத்ததாகவும், அதனுடன் முரண்பட விரும்பாத நிலையிலுமே ஆட்சியாளரின் அணுகுமுறைகளும் அமைந்து வருகின்றன.

இந்நிலையில் மேலும் கொடுப்பதற்கு நிர்ப்பந்திக்கக்கூடிய மூன்றாம் தரப்பு



மத்தியஸ்தத்தை ஆட்சியாளர்களோ, பேரினவாத சக்திகளோ ஒருபோதும் தாமாக விரும்பப்போவதில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

எனவே, சமீபத்தில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா கூறியுள்ள கருத்துக்கள் அவரது மனமாற்றம் என்றோ, முன்பு கூறியதற்கு மாறான நிலைப்பாடு என்றோ கொள்ளத்தக்கதல்ல.

1996இல் ஃபுரொன்ட்லைனுக்கு கொடுத்த பேட்டியும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற மனநிலையில் கொடுக்கப்பட்ட ஒன்றேயாகும்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்ற கோரிக்கையை புலிகள் சர்வதேச சமூகம் முன்பாகவோ, அன்றி மத்தியஸ்தம் செய்ய தயாராக உள்ளதாக கருதப்படும் ஏதாவது வெளிநாட்டிடமோ முன்வைப்பார்களே தவிர, தம்மோடு போரிடும் அரசாங்கத்தை நோக்கி முன்வைக்கமாட்டார்கள். அதற்கும் சரணடைவுக்கும் இடையே பெரிய வித்தியாசமில்லை.

அதனை நன்குணர்ந்தே பிரபாகரன் எம்மிடம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றி கோரினால் பரிசீலிக்கலாம் என்று ஜனாதிபதி அப்போது தனது பேட்டியில் கூறியிருந்தார்.

அதாவது, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை என்று தனது வாயால் கூறாமல், பந்தை புலிகளின் கோட்டிற்குள் அடித்துவிட எத்தனித்திருந்தார்.

சமீபத்தில் பி.ரி.ஐ. மற்றும் ராய்டர் செய்தி நிறுவனங்களுக்கு அளித்த பேட்டியில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையே இல்லை என்று முற்றாக நிராகரித்துள்ளார்.

புலிகள் ஈழக் கோரிக்கையை கைவிட்டால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றி பரிசீலிக்கலாம் என்று ஜனாதிபதி கூறியதாக பி.ரி.ஐ. செய்தி வெளியிட்டிருந்தது.

பின்னர் அதனையும் மறுத்த ஜனாதிபதி, புலிகள் ஈழத்தை கைவிட்டாலகூட மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கிடையாது என்ற தோரணையில் கருத்துக் கூறியுள்ளார்.

முன்னைய ஃபுரொன்ட்லைன் பேட்டிக்கும், சமீபத்திய பி.ரி.ஐ. பேட்டிக்கும் இடையே இருக்கக்கூடிய வித்தியாசம், முன்னையதில் மறைமுகமாக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நிராகரித்த ஜனாதிபதி, பின்னையதில் சுற்றி வளைக்காமல் நேரடியாக நிராகரித்துள்ளார்.

மொத்தத்தில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பான ஆட்சியாளரின் நிலைப்பாடு என்பது எதிர் நிலைப்பாடேயாகும்.

முன்னர் சுற்றிவளைத்துக் கூறிய ஜனாதிபதி அவர்கள் தற்போது நேரடியாகவே நிராகரித்து கருத்துக் கூறியுள்ளதன் காரணத்தையும் உற்று நோக்க வேண்டும்.

ஃபுரொன்ட்லைனுக்கு ஜனாதிபதி பேட்டி கொடுத்த காலகட்டத்தில் இங்குள்ள

> **தமிழ் பேசும் மக்கள் தங்களைப் பற்றி என்ன கருதுகிறார்கள் என்ற கவலையின்றி, சிங்களமக்கள் தங்களை வெற்றிவீரர்களாக கருதினால் போதும் என்ற நம்பிக்கையில் ஆட்சியாளர்கள் நடைபோடத் தொடங்கி விட்டனர்!**

தமிழ் பேசும் மக்களின் அதிருப்திகளை சம்பாதிக்கக்கூடாது என்ற அக்கறையும் அவருக்கிருந்தது.

ஜனாதிபதி தேர்தலிலும், அதற்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தலிலும் தமிழ் பேசும் மக்களின் கணிசமான வாக்குகள் பொதுஜன முன்னணிக்கே விழுந்திருந்தன.

எதிர்வரும் தேர்தல்களிலும் அந்த வாக்கு வங்கிகளை குறிப்பிட்டளவாயினும் தக்கவைக்க வேண்டும் என்ற எண்ணம் ஆட்சியாளரிடம் இருந்தது.

அதுதவிர, ஃபுரொன்ட்லைன் இந்தியச் சஞ்சிகையாகும். இந்தியாவில் புலிகளுக்கு எதிரான அபிப்பிராயத்தையும், இலங்கை அரசு நியாயமாக நடந்து கொள்கிறது என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தும் விதமாகவும் அப்பேட்டி அக் காலகட்டத்தில் அமைந்திருந்தது.

அதுமட்டுமல்லாமல் ஆளும் கட்சியின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் விதமான 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையும் அப்போது ஆரம்பமாகி இருக்கவில்லை.

மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது யாதெனில், யாழ் குடாநாட்டை கைப்பற்றியது மூலம், புலிகளை வெற்றிகொண்டு வீழ்த்திய தலைவி என்ற 'இமேஜ்' சிங்கள மக்களிடம் இருந்தபோதே அப்பேட்டியை ஜனாதிபதி அளித்திருந்தார்.

அப்போது ஜனாதிபதி என்ன கருத்து கூறினாலும், வெற்றிபெற்ற தேவதையின் வாயிலிருந்து உதிரும் கருத்துக்களாகவே நோக்கப்பட்டன.

ஆனால் இன்றுள்ள நிலவரம் மேற்கண்ட அன்றைய சூழ்நிலைகளுக்கு முற்றிலும் மாறானதாகும்.

இந்திய அரசு இலங்கைத் தமிழர் பிரச்சனையில் தலையிட வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்நாட்டில் மீண்டும் எழத் தொடங்கியுள்ளது. பாரதிய ஜனதா அரசின் பாதுகாப்பு அமைச்சர் விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர் என்பது யாவரும் அறிந்த ஒன்றாகும்.

இந்நிலையில் இந்திய அரசுக்கு அப்படி ஓர் எண்ணம் ஏற்பட முன்னரே முந்திக்கொள்வதற்காக, மத்தியஸ்தம் தேவையில்லை என்ற நிலைப்பாட்டை முன்வைக்கும் அவசியம் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு நேர்ந்துள்ளது.

அதுமட்டுமல்லாமல் அரசியல் தீர்வு இழுத்தடிப்பாலும், தொடரும் யுத்தம் காரணமாகவும், புலிகளின் இராணுவ பலம் வெளியுலகுக்கு தெரிவதாலும் இலங்கை அரசால் மட்டும் இனப்பிரச்சனையைத் தீர்கக முடியாது, யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரமுடியாது என்ற அபிப்பிராயம் சர்வதேச மட்டத்திலும் தோன்றி வருகிறது.

அரசும், புலிகளும் விரும்பினால் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்று சில நாடுகளும் கூறி உள்ளன.

இப்படியே போனால் ஏதாவது ஒருநாடு தானாக முன்வந்து மத்தியஸ்தம் பற்றி அறிவித்து விடுமோ என்ற அச்சமும் ஆட்சியாளருக்கு ஏற்பட்டிருக்கலாம். அதன் காரணமாக எந்தவொரு நாட்டுக்கும் அப்படி ஓர் எண்ணம் தோன்றாதிருக்கும் வகையில் தமது நிலைப்பாட்டை தெளிவாக கூறும் அவசியம் ஆட்சியாளருக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

முன்பு இந்த அவசியம் இருக்கவில்லை. அரசின் தீர்வுப் பொதியையும், சந்திரிக்கா அம்மையாரின் சமாதான கோஷங்களையும் வெளியுலகம் முழுதாக நம்பியிருந்தது. விரைவில் இலங்கைத் தீவில் சமாதானம் தோன்றும் எனவும் நம்பியிருந்தது.

உள்நாட்டு நிலவரத்தைப் பொறுத்தவரை, தென்னிலங்கையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழ் பேசும் வாக்காளர்கள் ஆளும் கட்சியை முன்னர்போல ஆதரித்திருக்கவில்லை.

எனவே, யுத்தம் தீவிரமாகும் நிலையில், அதனைச் சார்ந்த பாதுகாப்பு ஏற்பாடுகளின்போது தமிழ் பேசும் மக்கள் முன்னெப்போதும் இல்லாதளவுக்கு பாதிக்கப்படும் நிலையில் இனிமேல் தமிழ் பேசும் மக்களது வாக்குகள் தங்களுக்கு கிடைக்கப்போவதில்லை என்பதை பொதுஜன முன்னணி அழுத்தம் திருத்தமாக உணர்ந்தே இருக்கும்.

அதனால், தமிழ் பேசும் மக்களையும் ஓரளவு திருப்தி செய்தபடி, சிங்கள வாக்காளர்களையும் கவர்ந்திழுக்கும் முயற்சி இரண்டு தோணியில் கால்வைப்பது போன்ற காரியம் என்று நினைத்து, ஒரே தோணியில் பயணிக்க ஆட்சியாளர்கள் முடிவு செய்துவிட்டதாகவே தோன்றுகிறது.

அதாவது, தமிழ் பேசும் மக்கள் தம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்ற கவலையின்றி, சிங்கள மக்கள் தங்களை வெற்றி வீரர்களாக கருதினால் போதும் என்ற முடிவோடு ஆட்சியாளர்கள் தங்கள் பயணத்தை நடத்தத் தொடங்கியுள்ளனர்.

எனவே, புலிகளுக்கு எவ்வகையிலும் விட்டுக்கொடுக்காத அரசாங்கம் என்ற அபிப்பிராயமும், துணிச்சலான தலைவி என்ற இமேஜும் சிங்கள மக்களிடம் ஏற்படக்கூடியவிதமாக ஜனாதிபதியின் சமீபத்திய பேட்டி விளங்கியிருந்தது.

அதுதவிர, 'ஜயசிக்குறுய்' நடவடிக்கை இடையில் தொங்கிக் கொண்டிருக்கிறது. 'சூரியக்கதிர்' நடவடிக்கை மூலம் அரசு பெற்ற செல்வாக்கும், மரியாதையும் 'ஜயசிக்குறுய்' மூலம் சரிந்து விழுந்துள்ளது.

இந்நிலையில் புலிகளுடன் பேச்சு தொடர்பாக வெளியுலகுக்காக உதட்டளவிலான கனிவை காட்டுவதுகூட 'தோல்வியால் ஏற்பட்ட ஞானோதயம்' என்ற அபிப்பிராயம் தோன்ற வழிவகுத்துவிடும் என்று ஆட்சியாளர்கள் தயங்குகின்றனர்.

அதனால்தான் சாத்தியமில்லாத நிபந்தனைகளை முன்வைத்து ஜனாதிபதி பேட்டியளித்துள்ளார். ஆனால் 1996ல் ஃபுரொன்லைன் பேட்டியில் எபுலிகளுடன் பேச எந்தவொரு நிபந்தனையையும் ஜனாதிபதி முன்வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தனது தேர்தல் வெற்றிக்காக அரசியல் மூலதனமாக எதிர்பார்க்கப்படும் 'ஜயசிக்குறுய்' வெற்றியில்தான் ஜனாதிபதி உட்பட, ஆட்சியாளரது முழுக்கவனமும் திரும்பியுள்ளது.

அதற்கு இடையூறாக புலிகளுடன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இல்லாமல் பேசக்கூட ஆட்சியாளர் தயாராக இல்லை என்பதே நன்கு புலனாகின்றது. அதற்கு தோதாகவே ஜனாதிபதியின் பேட்டிகளும், அதில் வெளியான கருத்துக்களும் திகழ்கின்றன.

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

**நக்கீரன்**

ஜனாதிபதி சந்திரிக்கா தனது பேட்டி ஒன்றில் புலிகளுடன் அரசு பேசுவதாயின், எப்படிப் பேசுவது என்பதற்கான நிபந்தனைகளைக் கூறியுள்ளார்.

யுத்தம் தொடர்ந்தபடியே இருக்கும். அதன் மத்தியில் பேச்சு நடக்கும். சுருக்கமாகச் சொன்னால் ஜேம்ஸ் பொண்ட் படப் பாணியில் அடிபட்டுக்கொண்டே பேசிக்கொண்டு, பேசிக் கொண்டே அடிபட்டுக்கொண்டு இருக்கலாம்.

உலகில் வெற்றிகரமாக முடிந்த எந்தப் பேச்சுவார்த்தையும் யுத்த நிறுத்தம் மத்தியில் தான் நடந்துள்ளன.

வட அயர்லாந்து பிரச்சனையில் பிரிட்டிஷ் பிரதமரின் அணுகுமுறையை ஜனாதிபதி சந்திரிக்கா பாராட்டியிருந்தார்.

குண்டுவைப்புக்கள், அதிரடித் தாக்குதல்கள் என்பவற்றில் வட அயர்லாந்து போராளிகளும் ஈடுபட்டிருந்தனர். அவர்களை அடக்க பிரிட்டிஷ் படைகளும் துப்பாக்கிகளை தூக்கிக் கொண்டு அலைந்தன.

ஆனால், தீர்வுக்கான பேச்சு என்று வரும்போது, அடிபட்டுக்கொண்டே பேசலாம் என்று பிரிட்டிஷ் பிரதமர் நிபந்தனை விதிக்கவில்லை. யுத்தம் நிறுத்தப்பட்டது. பேச்சு நடந்தது.

இங்கே யுத்தத்தை தவிர வேறெந்த குறிப்பிடும்படியான சாதனையும் இல்லாத நம்நாட்டு அரசாங்கத்திற்கு யுத்தத்தையும் நிறுத்தினால், பட்டியல்போட வேறென்ன இருக்கிறது?

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வேண்டாம். வேண்டுமானால் மூன்றாம் ஆள் ஒருவர் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்யலாம். ஆனால் அவர் பேச்சில் கலந்துகொள்ள முடியாது எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அந்த மூன்றாம் ஆளை எப்படி அழைப்பது என்றுதான் புரியவில்லை. தபால்காரர் என்று அழைக்கலாம். பேச்சு தொடங்க முன்னர் இருதரப்புக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்த தகவல் பரிமாற்றம் போன்றவற்றில் ஈடுபடுவதுதான் அவருக்குரிய உத்தியோகமாக இருக்கும்.

தேசிய இனப்பிரச்சனையை மட்டுமல்லாமல், தீவிரமான யுத்தத்தில் தமக்கு சவாலாக உள்ள மறுதரப்பையும் சிறிதாக்கி காட்டும் உத்திபோல நிபந்தனைகள் அமைந்துள்ளன.

இதென்ன பெரிய பிரச்சனையோ? இதென்ன பெரிய யுத்தமோ? புலிகள் என்ன பெரிய சக்தியோ? இதற்கெல்லாம் மத்தியஸ்தம் ஏன்? அப்படிப்போகிறது கதை!

—★—

இந்தியப் பிரதமர் வாஜ்பேயியிடம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கேட்டன தமிழ்க் கட்சிகள். ஜனாதிபதி அதனை நிராகரித்துவிட்டார். தமிழ்க் கட்சிகளுக்கு பலத்த அதிர்ச்சி.

தம்மைப் பற்றி தமிழ்க் கட்சிகள் வெளியே என்ன கூறிக்கொண்டாலும், தமக்கு அரசு

## மத்தியஸ்தம் வேண்டாம் தபால்காரர் போதும்

தரும் மரியாதை என்னவென்பது தமிழ்க் கட்சிகளுக்கு தெரியாத விடயமல்ல.

அதனால், இந்தியப் பிரதமரிடம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோரும் விடயத்தை இலங்கை அரசு பெரிதாக எடுத்துக் கொள்ளாது. வழக்கம்போல தமிழ்க் கட்சிகளின் அரசியல் பம்மாத்து என புரிந்துகொள்ளும். கோபிக்காது என்றே நம்பியிருந்தன.



ஆனால், பாழாய்ப்போன ஒரு நிருபர் ஜனாதிபதியின் வாயைக் கிளறி, விடையை வாங்கிப் பிரசுரித்துவிட்டார்.

'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கிடையவே கிடையாது. 'நிராகரிப்பு!' என செய்திகள் வந்தன.

பதிலுக்கு காட்டமான அல்லது தெளிவான பதில் எதனையும் சொல்லாமல், சுற்றிவளைத்து கருத்துக்கூறின தமிழ்க் கட்சிகள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் சுரேஸ் பிரேமச் சந்திரன் ஒருபடி மேலே போய்விட்டார். "மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கையை நிராகரித்ததை ஜனாதிபதி பரிசீலிக்க வேண்டும்!" என்று கேட்டிருந்தார். நல்லவேளையாக அதற்கும் ஒரு பிரார்த்தனை நடத்தவில்லை.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்பதே இலங்கை அரசுமீது நம்பிக்கை இழந்த நிலையில் முன்வைக்கப்படும் கோரிக்கை. அந்தக் கோரிக்கையை அம்மையார் ஏற்றுக் கொள்ளுவார் என்று எதிர்பார்ப்பது என்றால், இவர்கள் எங்கே நிற்கிறார்கள்?

'அம்மா! மூன்றாம்தரப்பு மத்தியஸ்தம் கோருவது உங்களுக்கு எதிரானதல்ல' என்று அம்மையாரையும் ஏமாற்றப் பார்க்கிறார்களா?

இன்றைய அரசில் நம்பிக்கை இல்லை என்றும், அதனால்தான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோருவதாகவும் சுரேஸ் பிரேமச் சந்திரன் கூறியிருந்தார். அது கோரிக்கைக்கு ஏற்ற சரியான கருத்து. பின்னர் ஜனாதிபதியிடம் பரிசீலனைக்கு விண்ணபித்தது அக் கூற்றின் வீரியத்தை கெடுத்துவிட்டது.

சுரேஸ் என்றில்லை, பொதுவாக சகல தமிழ்க் கட்சிகளும் முதலில் அரசு தொடர்பாக திட்டவட்டமான நிலைப்பாடு எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்காமல் கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்று ஊசலாடினால், இவர்களது கோரிக்கைகளும் வேடிக்கைகளாகிவிடும்.

♦♦♦

ஜனாதிபதி புலிகளுடன் பேசலாம் என்று கூறியதை தேசிய சமாதானப் பேரவை வரவேற்றுள்ளது.

எடுத்ததுக்கெல்லாம் இப்படி வரவேற்பு விடுப்பதால்தான் அரசியல் தலைவர்களுக்கு தங்கள் தந்திரங்கள் எடுபடும் என்ற நம்பிக்கை பிரமாண்டமாகிறது.

என்ன சொன்னார், ஏன் சொன்னார்? என்றெல்லாம் ஆராயாமல் வரவேற்பது, சமாதானத்தின் பெயரில் சண்டை தொடரவே உந்துதல் தரும் என்பதை தேசிய சமாதானப் பேரவையும் மறந்துவிட்டதே!



படிப்பகம்

www.padippakam.com

# இடி அமீன்

## உண்மைத் தொடர்

### அதிர் இடி 22

**கடந்தவாரம்**

**லுஸிரா சிறையில் இருந்த கைதிகளில் 290 பேர் அமீனின் கட்டளைப்படி கொல்லப்படுகின்றனர். அமீன் ஜனாதிபதியாகிய ஓராண்டு கொண்டாடப்படுகிறது. அமீனின் மனைவியரில் ஒருவரான சாரா சிலருக்கு பதவி உயர்வு கொடுக்க சிபாரிசு செய்ய அவள் சிபாரிசு செய்தவர்களுக்கும் அவளுக்கும் தொடர்பிருக்குமோ சந்தேகப்படுகிறான் அமீன்.**

**இனி.....**

**“சாராவை எப்படித் தெரியும்?”** என்று அமீன் கேட்ட தோரணையிலேயே அவர்கள் மூவரும் நடுங்கிவிட்டனர்.

மூவருமே சிவில் உத்தியோகத்தர்கள். பதவி உயர்வுக்காக சாராவை சிபாரிசு செய்யச் சொன்னதுதான் தங்கள் வாழ்க்கையில் நேர்ந்த மாபெரும் தவறு என்பதை மூவரும் ஒரு சேர நினைத்தனர்.

**“மூவரையும் பிறந்த மேனியராக்குங்கள்!”** என்று அமீன் இட்ட கட்டளை துரிதமாக நிறைவேற்றப்பட்டது.

அவர்கள் கூசிப் போனார்கள். வெட்கத்தைவிட பயம்தான் பெரிதாகி அவர்களை ஆட்டிப் படைத்தது.

எழுந்து குளிர்சாதனப் பெட்டிக்கு அருகே போய் நின்ற அமீன், **“இங்கே வாருங்கள் பையன்களே!”** என்றழைத்தான்.

உடம்பைக் குறுக்கிக்கொண்டு அவர்கள் தயங்கித் தயங்கி அருகே செல்ல, சட்டென்று குளிர் சாதனப் பெட்டிக் கதவை திறந்து காட்டினான்.

மூவருக்கும் இதயத்துடிப்பே நின்று விடும்போல இருந்தது. ஆடிப்போனார்கள். பயத்தில் வெளிறிப் போனார்கள்.

குளிர்சாதனப் பெட்டிக்குள் உறைந்தபடி இருந்தது தலையொன்று.

அது படை உயரதிகாரியும் ஒபேடேயின் விசுவாசியுமான சுலைமான் ஹசனின் தலை.

பல மாதங்களாக அத் தலையை குளிர்சாதனப் பெட்டிக்குள்ளேயே வைத்திருந்தான் அமீன்.

மனிதத் தலையை குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்து வேடிக்கை பார்ப்பவன் தங்களை என்ன செய்யப் போகிறானோ என்பதை நினைக்க மூன்று பேருக்கும் கிட்டத்தட்ட பாதி உயிர் போய்விட்டது.

அவர்கள் கிடுகிடுவென்று நடுங்குவதைப் பார்த்த இடி அமீன் நகைத்தான். அந்த நகைப்பு தங்கள் உயிரைப் பறிக்கப் போகும் பிசாசின் நகைப்பாகத்தான் அவர்களுக்குத் தெரிந்தது.

அவர்களது அச்சத்தை உச்சத்துக்குக் கொண்டுபோனது அமீன் அடுத்துச் சொன்ன வார்த்தை:

“உங்களுடைய தலைகளை வெட்டப்போவதில்லை!” என்று சொல்லி, இடியென நகைத்தபடி, தங்கள் உடல்களில் அமீன் கண்கள் சென்ற இடத்தைப் பார்த்ததும் மூவருக்கும் மூச்சுத் திணறியது.

**“திருடினால் கையை வெட்டலாம். காலால் அடித்தால் காலை வெட்டலாம்!”** என்று நிறுத்தி நிதானமாகச் சொன்னான்; **“எந்த உறுப்பு குற்றம் செய்கிறதோ அந்த உறுப்பைத் தானே வெட்ட வேண்டும்? ஆகவே நீங்கள் செய்த குற்றத்திற்கு..?”** என்றுவிட்டு வாக்கியத்தை முடிக்காமலேயே அமீன் நிறுத்த, மூவரும் விக்கித்து, அவன் முன்னால் மண்டியிட்டனர்.

**“என் மடியிலேயே கைவைத்த உங்களுக்கு மன்னிப்பு தரப்போவதில்லை. மண்ணுக்குள் இடம்தான் தரப்போகிறேன்!”** என்று நகைத்தபடி, கண்ஜாடை காட்ட, உதவியாளர்களால் அவர்கள் மூவரும் தாக்கப்பட்டனர்.

தன் மேசையில் இருந்த பெரிய சுத்தியல் ஒன்றை கையில் எடுத்துக் கொண்டான் அமீன்.

**“நிறுத்துங்கள்!”** என்ற அவனின் குரலுக்கு, உதவியாளர்கள் அடிப்பதை நிறுத்தினார்கள்.

மேசையில் இருந்த தொலைபேசியை சுழற்றி, சாராவை தொடர்பு கொண்டான்.

**“எப்படி இருக்கிறாய்- நலமா?”** என்ற அமீனின் கேள்வி மறுமுனையில் சாராவை உலுப்பியது. வழக்கத்திற்கு மாறான கேள்வி அவளைக் குழப்பியது.

**“என்ன பதிலையே காணவில்லை, இன்ப அதிர்ச்சியா? ஒன்றுமில்லை, நீ சிபாரிசு செய்தவர்களுக்கு பதவி உயர்வு கொடுத்துக் கொண்டிருக்கிறேன். அதைச் சொல்லத்தான் எடுத்தேன்!”**

மறுமுனையில் சாரா நிம்மதியாகி, “நன்றி!” என்று சொல்லவும், மறுகையில் இருந்த சுத்தியலால் மூவரில் ஒருவனது தலையில் அமீன் ஓங்கி அடிக்கவும் சரியாக இருந்தது.

அடிபட்டவன் எழுப்பிய அவலக் குரல் ஃபோன் வழியாக சாராவையும் எட்டியது.

“அ...அ.. என்ன, சத்...சத்தம்?” என்றாள் திகிலடைந்த குரலுடன்.

பதில் சொல்லாமல் இரண்டாவது ஆளின் தலையிலும் சுத்தியலால் ஓங்கி அடித்தான்.

அந்த அறையே வெடித்து விடும் அளவுக்கு அவன் மரண ஓலம் எழுப்ப, அடுத்தது தனக்கு என்ற கிலியில் மூன்றாவது ஆளும் சேர்ந்து கதற, மறுமுனையில் சாராவுக்கு புரிந்தும் புரியாததுபோல இருந்தது.

**“என்ன கேட்டாய்? என்ன சத்தம் என்று கேட்டாய் அல்லவா? பதவி உயர்வு பெற்றவர்கள் சொர்க்கத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள்!”** அத்தோடு ஃபோனை வைத்துவிட்டான்.

மூவரும் தலை உடைந்து இரத்தம் பெருமளவில் விரயமாகியதில் மூச்சை





உகண்டா முன்னாள் ஜனாதிபதி ஒபேடே தன் ஆதரவாளர்களின் தோள்களில் இருக்கிறார். இது அமீன் ஆட்சியை கைப்பற்ற முன்னர் எடுத்த படம்.

நிறுத்திக் கொண்டார்கள்.

மூன்று இளைஞர்களையும் பற்றிய தகவல்களை விரைவாக திரட்டிக் கொடுத்த உளவுப்பிரிவு அதிகாரிக்கு சம்பள உயர்வு வழங்க உத்தரவிட்டான் அமீன்.

சம்பள உயர்வு உத்தரவும் வாய்மூலமே இடப்பட்டது. பெரும்பாலான உத்தரவுகளை வாய்மூலமே அமீன் வெளியிடுவதால் அதிகாரிகள் தடுமாறினார்கள்.

பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் அனைத்தும் வாய்மூலமே கூறப்பட்டுவந்ததால், யாருக்கு என்ன பதவி என்பதோ, பதவி உயர்வு யார் யாருக்கு வழங்கப்பட்டது என்றோ-சம்பளம் கொடுக்கும்போது கண்டு பிடிக்க முடியவில்லை.

பல சிப்பாய்களும், சாதாரண பொலிஸ்காரர்களும் தங்களுக்கும் பதவி உயர்வு கிடைத்து விட்டதாகக் கூறி கூடிய சம்பளம் பெற்றனர்.

பதவி உயர்வு பெற்றதாகக் கூறுபவர்கள் உண்மையிலேயே அமீனால் பதவி உயர்த்தப்பட்டவர்கள்தானா? என்று அமீனிடம் கேட்கப் பயந்து, பொய் கூறியவர்களுக்கும் அதிக சம்பளம் கொடுக்கப்பட்டது.

இடி அமீன் ஆட்சிக்கு எதிராகச் செயற்படுபவர்களைக் ‘கவனிப்பதற்காக’ என்று தனியான பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

இப்பிரிவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டவன் லெப்டினன்ட் மலையமுங்கு. ஏறக்குறைய அமீனை ஒத்த குணமுடையவன். பழி பாவத்திற்கு அஞ்சாதவன். இரக்கம் என்றால், அதற்கு என்ன அர்த்தம் என்று அலட்சியமாக கேட்பவன்.

ரீனா என்ற அழகியை பாகம், பாகமாக அகழ்வாராய்ச்சி செய்து கொண்டிருந்த மலையமுங்குவை ஃபோன் ஒலித்து வெறுப்பூட்டியது.

ரீனாவின் கழுத்திற்கு மூன்றங்குலம் கீழே முத்தமிட்டுவிட்டு, சலிப்பாக முணுமுணுத்தபடி ஃபோனைத் தூக்கியவன், நொடியில் விறைப்பாகி, சல்யூட் அடித்தான். மறுமுனையில் இடி அமீன்.

**“என்ன செய்து கொண்டிருக்கிறாய். என் இனிய லெப்டினன்ட்?”** என்று கிண்டல் கலந்து அமீன் கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல், கட்டிலில் விரித்த புத்தகம் போலக் கிடந்த ரீனாவை நோக்கினான் மலைய முங்கு. அவள் அவனுக்கு கிறக்கம் தரக்கூடியவாறு தன் நாவை அசைத்துக் காட்டினாள்.

**“அந்த ரீனாவை அளவெடுத்துக் கொண்டிருக்கிறாயா லெப்டினன்ட்?”** என்ற அடுத்த கேள்விக்கு மலையமுங்கு ஆச்சரியப்பட்டான்.

இடி அமீனின் கண்களுக்கும் காதுகளுக்கும் எதுவும் தப்பமுடியாது என்று நினைத்தான்.

**“உடனே புறப்பட்டு வா! தலைபோகும் அவசரம்!”** என்றான் அமீன்.

ரீனா எழுந்துவந்து அவனை பின்புறமாக அணைத்துக் கொள்ள, அவளைப் புறக்கணித்து ஆடைகளை அணிந்து கொண்டு புறப்பட்டான் மலையமுங்கு.

அமீனின் அவசர அழைப்பு அவனுக்குப் புதிராகவே இருந்தது. **(இடி தொடரும்)**

## தருவது ரசிகன்



## சிம்லாவில் காதலி

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தின்போது கவர்னர் ஜெனரலாக இருந்தவர் மவுண்ட் பேட்டன் பிரபு. இவருடைய மனைவிக்கும் நேருவுக்கும் ஆழமான நட்பு இருந்தது பரகசியம். மவுண்ட் பேட்டன் பிரபுவுக்கும் அது தெரியும். அதுபற்றிய புத்தகம் ஒன்று வெளியாகி சர்ச்சை கிளப்பியது.



அதெல்லாம் இருக்க இப்போது மவுண்ட் பேட்டனின் காதலி பற்றிய புத்தகம் ஒன்று வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்தியாவில் பெங்களூரில் வசிக்கும் போல் சீசர் என்பவர் ‘மவுண்ட் பேட்டன்’ என்ற பெயரில் புத்தகம் ஒன்று எழுதியுள்ளார். இவர் மவுண்ட் பேட்டனின் உதவியாளராக இருந்தவர். இப்போது 74 வயது.

இந்தியாவில் அவாபாஷின் என்னும் பெண்ணை காதலித்தார் மவுண்ட் பேட்டன் என்று கூறும் போல் சீசர், அதற்கு ஆதாரமாக மவுண்ட் பேட்டன் காதலிக்கு எழுதிய கடிதத்தையும் அப்படியே வெளியிட்டுள்ளார்.

இதனை அடுத்து அந்தக் காதலி எங்கிருக்கிறார் என்று தேடிப் பிடித்த பத்திரிகையாளர்கள் அவரை கேள்விகளால் துளைத்தெடுக்கிறார்கள்.

“அப்போது சிம்லா வந்த மவுண்ட் பேட்டன் என்னை ஒரு நிகழ்ச்சியில் பார்த்தார். கார்டன் விருந்துக்கு என்னையும் என் கணவரையும் அழைத்திருந்தார். அந்த அரைமணி நேர தேநீர் விருந்து மறக்கமுடியாதது. மற்றப்படி எதுவும் இல்லை!” என்று வெட்கப்பட்டபடி கூறுகிறார் அவாபாஷின்.

## பகிரங்க வியாபாரம்

அவுஸ்திரேலியாவில் சி.டி. இசைத்தட்டு விற்பனையில் வர்த்தக நிறுவனங்கள் இடையே பலத்த போட்டி.

‘காஸ்கட் மியூஸிக்’ என்ற சி.டி. இசைத்தட்டு விற்பனை செய்யும் நிறுவனம் வித்தியாசமான ஆனால் அதிர்ச்சிகரமான முறை ஒன்றை கையாண்டுள்ளது.



அதனால் 28.06.98 அன்று அந்த நிறுவனத்தை ஆண்களும், பெண்களும் முற்றுகையிட, பயங்கரமான வியாபாரம் நடந்தேறியது.

அப்படி என்ன விசேஷம் என்கிறீர்களா?

இந்த விளம்பர அறிவிப்பைப் பாருங்கள்.

“28.06.98 அன்று காலை பதினொரு மணி முதல் பிற்பகல் இரண்டு மணி வரை கடைக்கு வரும் முதல் நூறுபேர் (பதினெட்டு வயதுக்கு மேல் உள்ளவர்கள் மட்டும்) கடையில் தங்கள் உடைகளை அவிழ்த்துவிட்டு நிர்வாணமாக நின்று சி.டி.க்களை வாங்கினால் ஒரு சி.டி. இலவசம்.

அதுமட்டுமல்ல அப்போதைய நிர்வாணக் கோலத்தைப் படமெடுத்து அவர்களிடமே கொடுப்போம்!”

அதுதான் அறிவித்தல். இதனைப் படிக்கும் நீங்கள் அதிரக்கூடும். ஆனால் அவுஸ்திரேலியா மெல்போர்ணில் உள்ள மேற்படி கடைக்கு ஏகப்பட்ட கூட்டம். சி.டி.க்கள் விற்றுத் தீர்ந்தன.

இளைஞர்களும், இளைஞிகளும் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்த இந்த வியாபாரம், அன்று மாலையே தொலைக்காட்சியிலும் காண்பிக்கப் பட்டது.

## யார் அம்மா?


விளம்பரங்களால் மக்களைக் கவர புதுசு புதுசாக என்ன செய்யலாம் என்று விளம்பரக் கம்பனிகள் மூளையைக் குடைந்தபடி இருக்கின்றன.

நவீன உடைகளை விளம்பரப்படுத்தும் ஃபாஷன் ஷோவில் சமீபத்தில் ஒரு புதுமை செய்துள்ளனர்.

மொடல் அழகிகளுடன் அவர்களது அம்மாக்களையும் கலந்து கொள்ளச் செய்தனர். சாதாரணமாக அல்ல, அவர்களும் கவர்ச்சி உடையில்.

பிரபல மொடல்கள் கவர்ச்சி உடைகளில் அம்மாக்கள், சகிதம் கலந்துகொள்ள, அதில் யார் அம்மா? என்று தெரியாமல் பார்வையாளர்கள் முடியைப் பிய்த்துக்கொண்டார்களாம்.

இத்தகைய ஃபாஷன் ஷோக்கள் வரவேற்பு பெற்றிருப்பதால், பெரியளவில் நடத்தத் தொடங்கி விட்டனர்.



## இதற்கு அது மேல்

ரசியாவில் கருத்துக் கணிப்பு ஒன்று சமீபத்தில் நடை பெற்றது. முன்னர் இருந்த சோசலிச ஆட்சி முறையா? இன்றைய ஆட்சிமுறையா? எது சிறந்தது என்று மக்களிடம் கேட்டிருந்தனர்.

நூற்றுக்கு 75 சதவீதமான மக்கள் கூறியுள்ள பதில்: “முன்னைய சோசலிச ஆட்சிமுறை தான் சிறந்தது!”

இந்தக் கருத்துக் கணிப்பு ரசிய அதிபர் யெல்ட்சினை மிரளவைத்திருக்கிறது.

யெல்ட்சினை மட்டுமல்ல, அமெரிக்காவையும், சோசலிச ஆட்சி முறையை எதிர்க்கும் பிரசார சாதனங்களையும் கூட கலங்கடித்திருக்கிறது.

எங்கே மறுபடியும் தங்களுக்கு சமமான நாடு உருவாகிவிடுமோ என்று பயப்படுகிறார்கள்.

## டைட்டானிக் + வயாக்ரா

அமெரிக்காவில் இன்றைய தேதியில் கூட்டம் கூட்டமாக மக்கள் கியூவில் நிற்குமிடங்கள் எவை?



இதுதான் வயாக்ரா

‘டைட்டானிக்’ படம் ஓடும் திரையரங்குகள் முன்பாகவும், வயாக்ரா மாத்திரை விற்கும் மருந்துக் கடைகள் முன்பாகவுமே நீண்ட கியூவரிசை காணப்படுகிறது.

வயோதிபர்களையும் இளைஞராக்கும் இந்த மாத்திரை அதிக நேர இன்பத்துக்கு வழி வகுக்கிறது. அதனால் உலகில் ஆண்களின் கடவுள் போல மாறிவிட்டது இந்த மாத்திரை என்கிறார்கள்.

ஒரு வாரத்தில் வயாக்ரா விற்பனையாகும் தொகையைக் கேட்டால் தலை சுற்றும். ஒரு இலட்சத்து பத்தாயிரம் மாத்திரைகள்வரை விற்றுத் தீர்கின்றன. இத்தொகை மேலும் அதிகரிக்குமே தவிர குறையாது.

உலகெங்கும் இருந்து ஏராளமான விண்ணப்பங்கள். அதற்கேற்ப உற்பத்தி செய்ய முடியாமல் வயாக்ரா தயாரிப்பாளர்கள் திணறுகிறார்கள்.

இந்தியாவில் சில மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் இதனை தாமும் தயாரிக்க ஆரம்பித்துள்ளன. ஒரிஜினல் வயாக்ரா மாத்திரை நீல நிறத்தில் இருக்கும்.

இத்தனை தீவிரமாக பேசப்படும் இந்த வயாக்ரா மாத்திரை பற்றி மருத்துவ வட்டாரங்களில் அச்சமும் ஏற்படுள்ளது.

மருத்துவ ஆலோசனை இன்றி வயது வேறுபாடின்றி இதனை உட்கொள்ளத் தொடங்கிவிட்டனர். இதனால் பக்கவிளைவுகள் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது.

இரத்தக்கொதிப்பு உள்ளவர்கள், நீரழிவு நோய் உள்ளவர்கள் போன்றோர் இதனைப் பாவிப்பது கூடாது என்கின்றனர் சில மருத்துவர்கள். ஆனால் மன்மதக் கலைக்காக மரணத்தையும் சந்திக்க தயாராகிவிட்டனர் இலட்சோப இலட்சம் ஆண்கள்.

இன்னொரு சங்கதி; வயாக்ரா முதன் முதலில் இரத்த ஓட்டம் குறைவாக உள்ளவர்களுக்காகவே தயாரிக்கப்பட்டது. இதன் வேதியல் பெயர்: ‘சில்டெபினர் சிட்ரேட்.’ பைசர் மருந்துக் கம்பனி இதனை தயாரித்தது. ஆனால் இரத்த ஓட்டத்தை அதிகரிப்பதில் இம் மாத்திரை தோல்விகண்டது.

என்னடா செய்யலாம் என்று மருந்துக் கம்பனி கவலையில் மூழ்கியிருந்தபோதுதான், இம்மாத்திரையை உட்கொண்டதும் ஆண்மைச் சக்தி அதிகரிப்பதை கண்டறிந்தனர்.

பின்னர் என்ன, இன்று உலகையே கலக்கிக்கொண்டு விற்றுத் தீர்ந்துகொண்டிருக்கிறது வயாக்ரா.


படிப்பகம்

www.padippakam.com

## மனிதப் பூனைகள்



↑ படத்தில் காணப்படுவது உலக சாதனை படைத்த இசை நிகழ்ச்சியில் ஒரு முக்கிய காட்சி. இந்த இசை நிகழ்ச்சிக்கு பூனைகள் என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது. இலண்டனைச் சேர்ந்த பெண் கலைஞர்களால் இந் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. பூனைகள் போல தத்ரூபமாக வேடமணிந்து பூனைகள் போலவே இசைக்கு ஏற்ப அசைந்தாடி இரசிகர்களின் வரவேற்பைப் பெற்றனர்.

உலகெங்கும் 6 ஆயிரத்தி 138 தடவைகள் இந் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. 82 இலட்சம் மக்கள் கண்டு களித்தனர். மொத்த வசூல் கணக்கு எவ்வளவு தெரியுமா? 220 கோடி ரூபாய்! 7 ரோனி பதக்கங்களும் கிடைத்தன. இவர்கள் கறுப்புப் பூனைகள் அல்ல. கலைப்பூனைகள்!

தகவல் பெட்டி

## குடு குடு குடு



← வீதி வித்தை காட்டும் நாய். பார்வையாளர்களை பிரமிக்க வைக்கிறது. வயோதிபர் போல மூக்குக் கண்ணாடி, பொல்லு சகிதம் குடு குடு என்று நடந்து குதூகலப்படுத்துகிறது. வயோதிபர்களை மதியாதோர்கூட இப்படியான காட்சிகளை மட்டும் இரசிக்கிறார்கள். அதுதான் கவலைக்குரியது.


## மிருக ஆசை

↘ மனிதர்களுக்கு எல்லாம் ஐந்தறிவு ஜீவன்கள்போல மாற ஆசை. அவற்றுக்கோ மனிதர்களாக மாற ஆசை.

பிசாசு போலவும், சிங்கங்கள் போலவும் தங்கள் தலைகளில் வரைந்து கொண்டு இவர்கள் திரிந்தது காட்டில் அல்ல. உலகக் கோப்பைக்கான கால்பந்தாட்ட அரங்கில்! ஆண்களும் பெண்களும் இப்படித்தான் அலைந்தார்கள்! சிலரது முகங்களைவிட இவை பரவாயில்லை!







## பார் வியக்கும் கார் ஓட்டம்

↑ கயிற்றில் சைக்கிள் ஓட்டம் பார்த்திருப்பீர்கள். கயிற்றில் காரோட்டம் பார்த்திருக்கிறீர்களா? பாருங்கள்! இதுதான் உலக சாதனை. 200 மீட்டர் உயரத்தில் கயிற்றில் காரோட்டி சாதனை படைத்திருக்கிறார் ஜக்ஸ் ஸ்ரெயின் மீஸ். இவர் மத்திய ஃபிரான்ஸ்சை சேர்ந்தவர். அங்குள்ள ருவர்னெமயர் என்ற ஆற்றுப் படுக்கைக்கு குறுக்காக கயிற்றைக் கட்டி காரோட்டினார். பார் வியக்கும் கார் ஓட்டம் என்பது சரிதானே! காரின் சமநிலையைப் பேண இரு புறமும் இருவர் தொங்கிச் சென்றனர்.



## "நான் திடமாக இருக்கிறேன்"

↑ ஈராக் அதிபர் இரும்பு மனிதர் சதாம் உசேன் வெளியே வரப் பயந்து அரண்மனைகளுக்குள் ஒளிந்து கிடக்கிறார். நோயும் பிடித்துவிட்டது என்றெல்லாம் அமெரிக்க சார்பு பிரசார சாதனங்கள் புலுடா விடுகின்றன. 61 வயதான சதாம் 21 வயது இளைஞர் போல் திடகாத்திரமாக இருக்கிறார். கிராமங்களுக்கு திடீர் விஜயம் செய்து மக்களைச் சந்திக்கிறார்.

வட ஈராக் கிராமம் ஒன்றுக்கு சென்ற சதாம் அங்கு மக்கள் முன் தொழுகையில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம் இது. அங்கு அவர் கூறினார்: "நான் நன்கு திடமாயுள்ளேன். இப்போதும் உடல் வலிமையுடன் இருக்கிறேன். ரைக்கிறிஸ் ஆற்றை என்னால் நீந்திக் கடக்க முடியும்!"

## அதிவேக ஜெட்

↘ அதிவேக போயிங்ஜெட் விமானம் இது. பயணிகளை ஏற்றிக்கொண்டு காற்றைக் கிழித்து ஊடுருவிப் பாயும். நீண்ட நவீன வடிவத்தில் இந்த ஜெட் உருவாகியுள்ளது. அதிக பயணிகளை சுமக்கக்கூடியது. போயிங் 717-200 என்று பெயர். அமெரிக்கத் தயாரிப்பு.

புதிய ஜெட்டை வேடிக்கை பார்க்க மக்கள் குழுமியுள்ளனர்.






படிப்பகம்

www.padippakam.com

## சிவாஜியும் அர்ஜுனும்
### மன்னவரு-சின்னவரு

சிவாஜி கணேசனும், அர்ஜுனும் இணைந்து நடிக்கும் படத்திற்கு 'மன்னவரு சின்னவரு' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

சிவாஜியும், அர்ஜுனும் முன்னர் இணைந்து நடித்த படம் 'முதல்குரல்'. வி.சி.குகநாதன் இயக்கினார். ஜெயலலிதா ஆட்சியை ஒரு பிடி பிடித்திருந்தனர்.

ஆனால் இன்றுவரை படம் திரையரங்குக்கு வரவே இல்லை. வீடியோவில் மட்டும் வெளியாகியுள்ளது. சிவாஜி கணேசன் ஜெயலலிதாவின் சம்பந்தியாகிவிட்டதால் அப்படத்தை இனிமேல் வெளியிடவும் விரும்பமாட்டார்.

தற்போது தயாராகும் 'மன்னவரு சின்னவரு' படத்தை இயக்குபவர் பி.என்.ராம்சந்தர். இவர் புதியவர். இசையமைப்பாளரும் புதியவர். பெயர்: கீதப்பிரியன்.

அர்ஜுனுக்கு ஜோடி கௌசல்யா. இன்னொரு ஜோடி சௌந்தர்யா. மற்றும் ஜே.ஆர்.விஜயா, எஸ்.எஸ். சந்திரன், மணிவண்ணன், ஆர்.சுந்தர்ராஜன், அனுமோகன், சின்னி ஜெயந்த் ஆகியோரும் நடிக்கின்றனர்.

## விஜயகாந்துடன் லைலா

விஜயகாந்த் நடித்துவரும் படம் கள்ளழகர். பிரமாண்டமான பொருட் செலவில் உருவாகி வரும் கள்ளழகரின் காதலியாக யாரைப் போடலாம்? முடியைப் பிய்த்துக் கொண்ட தயாரிப்பாளரும், இயக்குநரும் மும்பாய் சென்றனர்.

பிரபல மொடல் அழகியான லைலாவை கண்டனர். அவர்களைக் கவர்ந்தார் லைலா. அப்படியே அள்ளிக் கொண்டு வந்து கதாநாயகியாகப் போட்டுவிட்டனர்.

இப்போது கள்ளழகரை கட்டியணைத்து டூயட் பாடிக் கொண்டிருக்கிறார் லைலா.

கள்ளழகர் படத்தில் விஜயகாந்தின் அசத்தலான தோற்றத்தை சென்றவார சினிவிசிட்டில் தந்தோம் அல்லவா.

இப்படத்தில் நாசர், மணிவண்ணன், சார்லி, சோமையாஜுலு உட்பட பலர் நடிக்க, மறுமலர்ச்சி படப் புகழ் பாரதி இயக்குகிறார்.

## புரட்சிக்காரன் சத்யராஜ்

நடிகர் சத்யராஜ் பகுத்தறிவுக் கருத்துக்களில் நம்பிக்கை கொண்டவர். சில படங்களில் அக் கருத்துக்களை பிரசாரப்படுத்தியும் உள்ளார்.

தற்போது முழுக்க, முழுக்க புரட்சிகரமான பகுத்தறிவுக் கருத்துக்களை பிரசாரப்படுத்தும் பாத்திரத்தில் நடிக்க உள்ளார். அப் படத்திற்கு 'புரட்சிக்காரன்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கடவுள், நாளைய மனிதன் போன்ற படங்களை இயக்கிய வேலு பிரபாகரன் இப்படத்தை இயக்கவுள்ளார்.

'கடவுள்' படத்தில் வேலு பிரபாகரன் புரட்சிக்காரராக நடித்தார்.

சத்யராஜின் ஜோடியாக ரோஜா நடிக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பை தந்தை பெரியார் திடலில் கமலஹாசன் துவக்கிவைத்தார். கமலஹாசன் பெரியார் ஆரம்பித்த கட்சியான திராவிடர் கழகத்தில் உறுப்பினராகவும் இருக்கிறார்.

## ஷங்கரின் புதிய படம்
### மனிஷாவுடன் அர்ஜுன்

ரவீனா ராண்டன், தபு போன்ற இந்தி நடிகைகளுடன் நடித்தவர் அர்ஜுன். அவருக்கு மற்றொரு அதிஷ்ட வாய்ப்பு. மனிஷா கொய்ராலாவுடன் ஜோடி சேரப்போகிறார்.

ஜென்டில்மேன், இந்தியன், ஜின்ஸ் படங்களை இயக்கிய ஷங்கர் அடுத்து இயக்கும் படத்தில்தான் இந்த அதிஷ்டம் கிடைக்க இருக்கிறது.

இன்னமும் படத்திற்கு பெயர் சூட்டப்படவில்லை. கதை விவாதம் நடந்து வருகிறது.

தனது அடுத்த படத்தில் விஜயை நடிக்க வைக்கவே முதலில் விரும்பினார் ஷங்கர். அவருக்கு ஏற்ற கதையும் வைத்திருந்தார்.

ஆனால் விஜய் படு பிஸி. தொடர்ச்சியாக கால்ஷீட் கொடுக்க முடியாத நிலை.

அதனால்தான் அர்ஜுனை வைத்து வேறு ஒரு கதையுடன் படம் பண்ணப்போகிறார் ஷங்கர்.

## ரஜினி–ஸ்ரீதேவி

ரஜினியும், ஸ்ரீதேவியும் பல படங்களில் ஜோடியாக கலக்கியவர்கள். தனது புதிய படத்தில் கதாநாயகியாக ஸ்ரீதேவியை நடிக்க வைக்கலாம் என்று நினைத்தார் ரஜினி.

ஸ்ரீதேவியுடன் தொடர்பு கொண்டு கேட்கப்பட்டதாம். ஆனால் ஸ்ரீதேவி நடிக்க விரும்பவில்லை. திருமணமாகி குழந்தை பிறந்தபின் நடிக்க வந்தால், முன்பிருந்த மதிப்பும் மவுசும் போய்விடும் என்று தயங்குகிறார்.

இதனால் வேறொரு முன்னணி நடிகைக்கு அந்த சான்ஸ் கிடைக்கப்போகிறது.

ரஜினியின் அடுத்த படத்தின் பெயர் முதலில் ராம கிருஷ்ணா என்றனர். பின்னர் கிருஷ்ணா என்றனர். தற்போது 'படையப்பா' என்கின்றனர். ஆறு படை அப்பன் என்பதை குறிக்க 'படையப்பா' என பெயர் சூட்டப் போகிறார்களாம். இதெல்லாம் தகவல்கள். உண்மை தானா? ரஜினிக்குத் தான் தெரியும்.



ராஜஜி

"தங்க முகமே! — நீ
தரையில் வந்த வெண்ணிலவா!
கன்னி மலரே! — நீ
மலர்ந்திருந்த கண்ணிலவா!"



பிரபு–மீனா
படம்: மனம் விரும்புதே உன்னை

முகப்பில்
சிம்ரான்
சிம்ரான்
சிம்ரான்

## காதோடு சொல்லுகிறோம்

'கார்' கால ஹீரோவுக்கு ஏற்கனவே இரண்டு மனைவிகள். அது போதாது என்று பல நடிகைகளுடன் நட்பும் உண்டு. இப்போது திடீரென்று கல்லூரி மாணவி ஒருவரை காதலிக்கிறார். அந்த மாணவி பின்னால் மோட்டார் சைக்கிளில் சுற்றுகிறாராம். முகத்தை மூடிக் ஹெல்மெட் போட்டுக்கொண்டு போனால் அடையாளம் தெரியாது என்று அவர் நினைத்தாலும், சிலர் கண்டு பிடித்துவிட்டனராம்.

நட்சத்திர தம்பதி வீட்டில் இப்போது தினமும் திருவிழாதானாம். தம்பதிகளின் வாரிசு நடிகையை நாடி சில ஹீரோக்களும், அரசியல் பிரபலங்களும் தம்பதி வீட்டில் தவம் கிடக்கின்றனராம். புளியங்கொம்புகள் என்றால் மட்டும் விசேஷ அனுமதி கிடைக்கிறதாம். ஏனையோருக்கு பார்த்துப் பேசி கொள்ள மட்டும் அனுமதி.

சிம்ம நடிகையின் இறுக்கமான சிபாரிசால் அவரது தங்கை நடிகையாகியுள்ளார். சிம்ம நடிகையைவிட தங்கை சீரும் சிறப்பும் செழிப்புமாக இருப்பதால், முன்னவரையே தங்கை ஓரம்கட்டி ஒரு ரவுண்ட் வரக்கூடுமாம்!

மூன்றெழுத்து இளம் நாயகரை வெளிநாட்டில் இருந்து மீட்டுக் கொண்டுவர தாயும், தந்தையும் பாடாத பாடு படுகின்றனர். சினிமாவில் முன்னேற வேண்டிய நேரத்தில், வேறு எதிலோ முன்னேறிக் கொண்டிருக்கிறானே என கவலை கொண்டுள்ளனர்.



கார்த்திக்-ரம்யா கிருஷ்ணன்
படம்: அத்தை மகன்

## சிம்ரானுக்கு போட்டி

ப்ரீதா விஜயகுமாரின் வரவால் பாதிக்கப்பட்டிருக்கிறார் சிம்ரான். சிம்ரான் தனக்காக தானே கஷ்டப்பட்டு வாய்ப்புக்களை வளைத்தார்.

ப்ரீதாவுக்கு யோசனை சொல்ல தாயும் தந்தையும் இருக்கின்றனர். அம்மா மஞ்சுளா அனுபவப்பட்டவர். மகளுக்கு யார் மூலம் வாய்ப்பு கிடைக்கும்? யாரை தவிர்க்க வேண்டும்? யாரை தாஜா பண்ண வேண்டும் என்ற சங்கதியெல்லாம் அத்துப்படி. இப்போது ப்ரீதா காட்டில் அடை மழை.

சிம்ரான் இனிப் பின்னே தள்ளப்படலாம். ப்ரீதாவுக்கு சுக்ர திசை.

## ரம்யா விளக்கம்

இந்திப் படம் ஒன்றில் விலைமகளாக நடிக்க இருக்கிறார் ரம்யா கிருஷ்ணன். அதற்கு அவர் கூறும் விளக்கம்.

காம சூத்ராவில் ரேகா காம லீலைகளை சொல்லிக் கொடுக்கும் இன்ஸ்ட்ரக்டராக நடித்தார். அவரையே ஓரம் கட்டக்கூடிய நடிப்பை இப் படத்தில் காட்டப் போகிறேன் என்கிறார்.

## ரவளி முத்தம்

பார்த்திபனால் 'சீமைப்பசு' என்று அழைக்கப்பட்டவர் நடிகை ரவளி. பார்த்திபனுடன் ஒட்டாக இருந்தவர், பார்த்திபன் மனைவியின் சீற்றத்தால் விலகிப் போனார்.

தெலுங்கில் திகட்ட திகட்ட கவர்ச்சி காட்டி அசத்தும் ரவளி, 'மறவாதே கண்மணியே' படத்தில் வினீத்தின் ஜோடியாக நடிக்கிறார்.

இப்படத்தில் முத்தக் காட்சி ஒன்று இடம் பெறுகிறது. காட்சி விளக்கம் முடிந்ததும், வினீத்தின் உதடுகளை கவ்வி முத்தமிட்டு படப்பிடிப்புக் குழுவினரையே கிறங்கடித்துவிட்டாராம் ரவளி. பாவம், வினீத் என்ன பாடு பட்டிருப்பாரோ?!

## பளார் பதில்

தேவயாணியை சந்தித்த நிருபர் ஒருவர்: "நீங்கள் தொட்டா சிணுங்கி, சிவசக்தி போன்ற படங்களில் படு கவர்ச்சியாக நடித்தீர்களே, இப்போது மட்டும் அப்படி நடிக்க மறுப்பது ஏன்?" என்று கேட்டார்.

தேவயாணி சொன்ன பளார் பதில்: "நீங்கள் பிறக்கும் போது எப்படி இருந்தீர்கள், ஆடை போட்டிருந்தீர்களா? பிறந்த மேனிதானே. அப்போ அப்படி இருந்தீர்கள். இப்பவும் அது மாதிரி இருக்கச் சொன்னால் இருப்பீர்களா? அப்படித்தான் நானும்!"

## பாப்பா–பீப்பா

விஜயகாந்தும், குஷ்புவும் இணைந்து நடிக்கும் படம் 'வீரம் வௌஞ்ச மண்ணு'.

குட்டிப் பாப்பாவாக நடிக்கத் தொடங்கி இப்போது பீப்பாவாக மாறிவிட்டார் குஷ்பு என்று தமிழக பத்திரிகைகள் கேலி செய்கின்றன.

என்னதான் கேலி செய்தாலும் குஷ்புவிடம் கவர்ச்சியையும் மீறிய நடிப்பு இருக்கிறது என்பது நிரூபணமாகிவிட்டது.

தன்னுடன் வந்த நடிகைகள் பலர் காணாமல் போனபின்னும் குஷ்பு நின்று பிடிக்கிறார். இப்போதும் பிஸியான நடிகையாக இருக்கிறார்.

## சங்கவி வருத்தம்

விஜய், சுவலட்சுமி நடிக்கும் 'நிலாவே வா' படத்தில் சங்கவியும் நடிக்கிறார். முக்கிய பாத்திரம் என்று ஒப்பந்தம் செய்து விட்டு, குளிக்கும் காட்சியில் கவர்ச்சியை பிழியவைத்திருக்கிறார்கள்.

விஜய் தனக்காக சிபாரிசு செய்வார் என்று சங்கவி எதிர் பார்த்தால், விஜய் தன் காதல் சங்கதியில் மாட்டி நிற்கிறார். கடனே என்று நடித்து வருகிறார் சங்கவி.

## நிஜ ஜோடி

இயக்குநரும், குஷ்புவின் காதலருமான சி.சுந்தர் ஹீரோவாகப் போகிறார். இராம நாராயணன் இயக்கும் படம் ஒன்றில்தான் ஹீரோவாக நடிக்கப்போகிறார். ஜோடி யார் என்கிறீர்கள்? நிஜ ஜோடிதான். குஷ்பு!

கைவசம் மூன்று படங்கள் இருப்பதால் அவற்றை இயக்கி முடித்துவிட்டு வருகிறேன் என்று கூறுகிறாராம் சுந்தர்.

## இடைவேளைதானா?

அஜித்குமார்-ஹீரா உறவு முறிந்துவிட்டதா? இனி உறவே கிடையாது என்று ஹீரா சொன்னது நிலைக்குமா? என்ற கேள்விகள் சினிமா வட்டாரத்தில் உலாவுகின்றன.

பத்திரிகையாளர்களை அழைத்து ஹீரா பேட்டி கொடுத்தும்கூட அஜித்குமார் ஹீராமேல் கோபப்படவில்லை. ஹீராவை முற்றாக மறக்க அவர் தயாரில்லை. அந்தளவுக்கு வித்தை காட்டி வசியம் பண்ணி வைத்திருக்கிறார் ஹீரா. அதே சமயம் வீட்டாரை பகைத்து ஹீராவை மணக்கவும் அஜித் அஞ்சுகிறார்.

அஜித்- ஹீரா மோதல் இடைவேளை மாதிரித்தான். மறுபடி ஒட்டிக்கொள்ளக்கூடும் என்கிறது சினிமா வட்டாரம்.



விஜயகாந்த்-குஷ்பு
படம்: வீரம் வௌஞ்ச மண்



படிப்பகம்

www.padippakam.com



திரையுலக மறுபக்கம் 67

# மன்னிப்புக் கேட்கவைத்த நடிகை
# சிம்ரானை கவர்ந்த சிநேகிதர்

அடிதடி ஆக்ஷனுக்கு பெயர் பெற்ற இளம் நடிகர் அவர். அவரது சொந்தத் தயாரிப்பில் இந்திய தேசியக் கொடி மீதான பக்தியை குறிக்கும் விதமான பெயரோடு படம் எடுக்கப்பட்டது.

இந்தியில் பிரபலமான இரண்டெழுத்து நடிகை ஒருவர்மீது நடிகருக்கு கண். அந்த நடிகை தெலுங்கில் நடித்திருந்த படம் ஒன்றை நடிகர் வீடியோவில் பார்த்திருந்தார். அந்த நடிகையின் அழகில் மயங்கிப்போனார்.

எப்படியாவது அந்த நடிகையை அடைய வேண்டும் என்று முடிவு செய்த ஆக்ஷன் நடிகர், தனது படத்தில் நடிக்க நடிகையை ஒப்பந்தம் செய்தார்.

நடிகை சம்பளத்தை உயர்த்திக் கூறியும் நடிகர் மறுபேச்சின்றி எடுத்து நீட்டினார்.

பணம் என்னடா பணம்? மனம் வைத்த நடிகையே கைக்குள் சிக்கும்போது பணமா பெரிது.

நடிகையும் மும்பாயில் இருந்து சென்னை வந்தார். இதற்கு முன்னர் இன்னொரு மும்பாய் நடிகையுடன் சல்லாபம் செய்தவர் நடிகர். அந்த நடிகை தாராள மனதுடன் நடிகரின் அன்புப் பிடிக்குள் சிக்கியிருந்தார். அந்த நடிகைபோலவே இவரும் ஒத்துழைப்பார், அனுசரித்து நடப்பார் என்று மலைபோல நம்பினார் நடிகர்.

சென்னையில் நடிகருக்கு மிகவும் வேண்டப்பட்ட நட்சத்திர விடுதி ஒன்றிலேயே நடிகைக்கு அறை ஒதுக்கப்பட்டது. அந்த விடுதிக்கு நடிகர் கூச்சமில்லாமல் சென்று வரலாம். அந்த விடுதி அதிபருக்கும் நடிகருக்கும் இடையே புரிந்துணர்வு இருந்தது. சில நடிகைகளை அந்த விடுதி அதிபருக்கு அறிமுகம் செய்து வைப்பதே நடிகர்தான்.

முன்னணி நடிகை ஒருவருக்கு அந்த விடுதியில் நிரந்தர அறை ஒன்றே இருக்கிறது. அங்கு எப்போது விரும்பினாலும் சென்று தங்கி, மதுவும், விடுதி அதிபரும் துணையிருக்க உல்லாசம் அனுபவிப்பார் அந்த முன்னணி நடிகை. அந்த நடிகையை அதிபருக்கு அறிமுகம் செய்து வைத்ததும் நடிகர்தான். அந்த நடிகை ஐந்தெழுத்து பெயர் கொண்டவர். மேற்கண்ட காரணங்களால் அந்த நட்சத்திர விடுதி நடிகரின் சொந்த விடுதி போல சுதந்திரமானது. அங்கு இந்தி நடிகைக்கு ஒதுக்கப்பட்ட அறை சகல வசதிகளும் கொண்டது.

## நடிகரின் ஆராய்ச்சி

நடிகை படப் பிடிப்பில் கலந்து கொண்ட முதல் இரண்டு நாட்கள் ஜென்டில்மேனாக நடந்து கொண்டார் நடிகர். அதனால் நடிகையும் நடிகருடன் மரியாதையாக பழகினார்.

அதன் பின்னர்தான் வேதாளம் முருங்கை மரத்தில் தாவியது. நடிகையை கட்டியணைத்து காதல் வசனம் பேசும் காட்சியில் நடிகரின் கைகளும், கால்களும் சும்மா இருக்குமா? சாரீர ஆராய்ச்சியில் இரகசியமாக ஈடுபட்டன.

நடிகைகளின் மனக்குறிப்பை அறிய நடிகர்கள் செய்யும் தந்திரம் இது. முதலில் தெரியாமல் தற்செயலாக தொடுவது போல தொடுவார்கள். பின்னர் குறிப்பறிந்து விஷமம் நீளும். கைகள் தாவும். அதற்கும் நடிகைகள் கண்டும் காணாததுபோல இருந்தால் படப்பிடிப்பு முடிந்ததும் அந்த நடிகையுடன் தனியாக பறந்து விடுவார்கள்.

இப்படி எத்தனைப் பேரைக் கண்டவர் அந்த நடிகை. சிலருக்கு இசைந்து கொடுத்துள்ளார். வேறு சிலருடன் சினந்து விழுந்தும் இருக்கிறார்.

தான் ஒரு பிரபலமான நடிகை, அதுவும் இந்தியில் பிரபலமான நடிகை என்ற கர்வம் இருந்ததால், எடுத்த எடுப்பில் நடிகர் சில்மிஷம் செய்ததை நடிகையால் ஜீரணிக்க முடியவில்லை. ஆனாலும் நாகரிகம் கருதி நேராக எதிர்ப்புக் காட்டாமல் சென்றுவிட்டார். அன்று மாலை மயங்கிய பின்னர் நடிகையின் அறைக்குச் சென்றார் நடிகர். உற்சாக பானத்தை ஏற்றிக்கொண்டுதான் போனார்.

## சினிமாவைப் போல

அறைக்குள் சென்றவர் கதவை உட்புறம் தாழிட்டுவிட்டு நடிகையின் கையைப் பிடித்திருக்கிறார். பக்குவமாகச் சொல்லி மறுத்தார் நடிகை. நடிகர் விடவில்லை. தழுவிக் கொண்டார். பொறுக்க முடியாத நடிகை அவரது கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டார். நடிகர் அதனை எதிர்பார்க்கவில்லை. பிடியைத் தளரவிட்டார். சினிமாவில்வரும் காட்சியைப் போல அங்கே அரங்கேறியது நிஜக்காட்சி.

ஆப்பிள் வெட்டும் கத்தியை தன் கையில் எடுத்துக் கொண்டு தயாராக நின்றார் நடிகை. இப்படியான காட்சியை சினிமாவில் மட்டுமே பார்த்த நடிகர், நேரில் உண்மையாகவே கண்டபோது திணறிவிட்டார்.

கன்னத்தை தடவியபடி கதவைத் திறந்து கொண்டு போய்விட்டார். அன்றிரவே அறையைக் காலி செய்துவிட்டு மும்பாய்க்கு பறந்துவிட்டார் நடிகை.

அதனால் படப்பிடிப்பு தாமதமானது. ஆக்ஷன் நடிகரின் அத்துமீறல் பற்றி சில பத்திரிகையாளர்களுக்கும் ஜாடை மாடையாகக் கூறிவிட்டார் நடிகை.

சில மாதங்களின் பின்னர் நடிகையிடம் மன்னிப்புக் கேட்டார் நடிகர். மீதிப் படத்தை முடித்துக் கொடுக்க மனம் இரங்கினார் நடிகை. சென்னை சென்று நடித்தும் கொடுத்தார்.

## சிம்ரானின் சிநேகிதர்

நடிகை சிம்ரான் பிரபு தேவாவின் சகோதரர் ராஜு சுந்தரத்தை காதலிப்பதாக பரவலான கதை. சிம்ரான் மறுக்கிறார்.

'ஜீன்ஸ்' படத்தின் மூலம் பிரபலம் பெற்றுவிட்ட ராஜு சுந்தரம் சிம்ரானுக்கு தனியாக நடனம் சொல்லிக் கொடுத்தாராம். இவர் கற்றுக்கொடுக்க, அவர் கற்றுக் கொள்ள காதல் பற்றிக் கொண்டது. ராஜு சுந்தரம் ஏற்கனவே தனது நடனக் குழுவில் உள்ள துணை நடிகைகள் சிலருடன் ஊர் உலகம் சுற்றிய ஜாலிப் பேர்வழியாம்!

'சிம்ரான் நல்ல சிநேகிதி. அதற்கு மேல் அவரைப் பற்றி சொல்லவோ, நினைக்கவோ ஒன்றுமில்லை' என்று ராஜு சுந்தரம் கூறுகிறார். ஆனால், தினமும் காலையிலும், இரவிலும் இருவரும் ஃபோனில் லவ்வுகிறார்களாம். அன்று நடந்த சம்பவம் அனைத்தையும் இரவு படுக்கச் செல்லுமுன் ஃபோனில் ராஜு சுந்தரத்திடம் கூறி விட்டுத்தான் நிம்மதியாக தூங்குகிறாராம் சிம்ரான்.

ரயில் பெட்டியில் தனியான குளு குளு கம்பார்ட்மெண்டில் இருவரும் தனியாக ஊட்டிவரை சென்றபோதுதான் இவர்களது நெருக்கம் முதன் முதலில் பரகசியமானது. அதன் பின்னர் இவர்களது நெருக்கம் பத்திரிகைகளில் பிரபலமானபோதும் இருவரும் 'நாங்கள் சிநேகிதர்கள்' என்றே கூறிக்கொண்டிருக்கின்றனர்.

பிரபு தேவா நடன அழகி ஒருவரை திருமணம் செய்தார். அவரது சகோதரர் நடிகை ஒருவரை திருமணம் செய்ய முன்வருவாரா? அல்லது திகட்டும் வரைதான் நெருக்கமா? என்று தெரியவில்லை.

நடன அழகியான மருமகளை இன்னமும் அங்கீகரிக்கவில்லை பிரபு தேவாவின் அப்பா சுந்தரம். தன் இன்னொரு மகன் நடிகையை மணக்க சம்மதிப்பாரா? மாட்டார். அதனால் சிநேகிதத்துடன் நிறுத்திக் கொள்வார் ராஜு சுந்தரம். ஆனால் இது "ஆழமான சிநேகிதம்" என்று குறும்புகின்றனர் அவரை அறிந்தவர்கள்.




வினீத்-ரேஷ்மா
படம்: மறவாதே கண்மணியே



ரம்பா

## மினி சினி

* பிரபு-மலையாள நடிகை மஞ்சு வாரியர் ஜோடியாக நடிக்க 'காஞ்சிபுரம்' என்ற புதிய படமொன்று தயாராகிறது. சிவாஜி ஃபிலிம்ஸ் தயாரிக்கும் இப்படத்தை அநேகமாக பிரதாப் போத்தன் இயக்குவார் எனத் தெரிகிறது.

* 'பூந்தோட்டம்' படம் இந்தியில் தயாராகவுள்ளது. தமிழில் முரளி நடித்த வேடத்தில் இந்தியில் ஷாருக்கான் நடிக்கிறார். 'பூந்தோட்டம்' படத்தைத் தமிழில் இயக்கிய மு.களஞ்சியமே இந்திப்படத்தையும் இயக்குகிறார்.

* அகத்தியன் இயக்கத்தில் பிரசாந்த் நடிக்கும் புதிய படத்தில் பிரசாந்திற்கு ஜோடியாக இந்தி நடிகை மஹிமா சௌத்ரி நடிப்பதாக இருந்தது. ஆனால் இப்போது 'என் சுவாசக் காற்றே' நாயகி இஷா கோபிகரை நடிக்க வைக்கப்போகிறார்கள்.

* 'காதல் கோட்டை', 'மறுமலர்ச்சி' போன்ற படங்களுக்கு ஒளிப்பதிவு செய்த தங்கர் பச்சன் தற்போது 'கண்ணெதிரே தோன்றினாள்' படத்திற்கு ஒளிப்பதிவு செய்து வருகிறார். இப்படத்தை முடித்துவிட்டு இவர் ஒரு படத்தை இயக்கவுள்ளார்.

* மணிரத்னத்தின் 'உயிரே' படத்தில் இரண்டாவது நாயகியாக நடிப்பவர் பிரீத்தி சிந்தா என்ற மொடல் அழகி. இந்த வேடத்தில் முதலில் சிம்ரான் நடிப்பதாக இருந்தது.


* விஜய் நடித்த 'ப்ரியமுடன்' தெலுங்கில் தயாராகப் போகிறது. பிரபல தெலுங்கு இயக்குநரும் நடிகருமான தாசரி நாராயணராவின் மகன் அருண் கதாநாயகனாக நடிக்கிறார். 'ப்ரியமுடன்' தமிழ்ப்படத்தை இயக்கிய வின்சென்ட் செல்வாவே தெலுங்கு படத்தையும் இயக்குகிறார்.

* சரவணன் நடிப்பில் நீண்ட காலத்திற்கு முன் தயாரான படம் 'சுந்தரம் ப்ளஸ்டு'. அதற்கென்ன இப்போ என்கிறீர்களா? இந்தப் படம் இப்போது 'பொன்மானைத் தேடி' என்ற பெயரில் வெளியாக உள்ளது.

* படங்களின் பெயர்களைப் பதிவு செய்யும் ஃபிலிம் சேம்பரில் அண்மையில் 'ஹவுஸ்ஃபுல்' என்று பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பெயரைப் பதிவு செய்திருப்பவர் யார் தெரியுமா? நடிகர்-இயக்குநர் பார்த்திபன்.

* 'அவதாரம்', 'தேவதை' போன்ற படங்களை இயக்கி நடித்த நாசர் அடுத்து இயக்கி நடிக்கும் படம் 'வீரன் விருமாண்டி'. இப்படத்தில் நாசருக்கு ஜோடியாக குஷ்பு நடிக்கிறார்.

* நீண்ட இடைவெளிக்குப் பின் டாக்டர் ராஜசேகர் நடித்த படமொன்று 'தலைவா' என்ற பெயரில் தமிழில் மொழி மாற்றப்படுகிறது. இது 'சிவய்யா' என்ற பெயரில் வெற்றிகரமாக ஓடிய தெலுங்குப் படம் ஆகும்.



## மீனா குளியல்

பிரபுவுடன் மீனா நடிக்கும் படம் 'மனம் விரும்புதே உன்னை'. இப்படத்தில் படு கவர்ச்சியான குளியல் காட்சி ஒன்றில் நடித்துள்ளாராம் மீனா.

முதலில் தயங்கிய மீனாவை பிரபுதான் உற்சாகம் கொடுத்து நடிக்க வைத்ததுடன், குறிப்பிட்ட குளியல் காட்சி படமாக்கி முடியும்வரை கூடவே இருந்தாராம். மீனாவும் துணிந்து புகுந்து விளையாடினாராம்.

## நித்திய நிகழ்வாகி...

என்னையே சொல்லி
அழுதுகொண்டிருப்பாய்- அம்மா!
கையாலாகாத மகன்
கவிதை
எழுதிக்கொண்டிருக்கிறேன்-
கண்காணாத தூரத்திலிருந்து!
**
நிலமைக்குப் பயந்து
பரதேசம் போனேன்-அம்மா!
நான்
அஞ்ஞாதவாசம் இருக்கையிலே,
முற்றுகையில்
நீ
வனவாசம் அனுப்பப்பட்டாய்!
**
"அம்மா!
அஞ்ஞாதவாசம் வந்துவிடு!"
அழைத்தேன்...
அசைய மறுத்தாய்!
பிடிவாதம்-உன்
ஊனில் உறைந்தது!
**
சொல்லுக் கேட்காத
உன் உடம்பு
மெல்லக் கூனி
பொல்லுக் கேட்டதாம்-
எனக்குத் தெரியாது!
**
என்னையே சொல்லி
அழுதுகொண்டிருப்பாய்-அம்மா!
கையாலாகாத மகன்
கவிதை
எழுதிக்கொண்டிருக்கிறேன்
கண்காணாத தூரத்திலிருந்து!
**
முட்டிப்போன என் வயிற்றை
தொட்டுப்பார்க்கிறேன்- அம்மா!
ஒட்டி உலர்ந்துபோன
உன் வயிறு
ஞாபகம் வருகிறது!
**
வெள்ளைக் காரில்
வழுக்கிச் செல்லும்
போதெல்லாம்-அம்மா!
வெறும் காலுடன்
நீ நடந்த தூரம்
நினைவு வரும்!
**
ஓயாமல் உழைத்த நீ
படுக்கையில் இருக்கிறாயோ?
உண்மையோ?
உன்னாலும்
ஓய முடியுமோ?
**
என்னையே சொல்லி
அழுதுகொண்டிருப்பாய்-அம்மா
கையாலாகாத மகன்
கவிதை
எழுதிக்கொண்டிருக்கிறேன்-
கண்காணாத தூரத்திலிருந்து.

உரும்பராய் சிவன்சுதன்.

## எதைத் தருவாய்?

தேடுவன எல்லாம்
எல்லார்க்கும் கிடைக்கும்
என்றால்...
எனக்கு ஏன்
கிடைக்கவில்லை?
**
கவலையுடன் கைவைத்து
காத்திருந்தால்
கவலை மறையும் எனின்...
என் கவலை ஏன்
அப்படியே இருக்கிறது?
**
புதியன தோன்றல்
பழையன கழிதலுக்கு
வழிகோலும் ஆயின்...
ஏன் இந்த
அர்த்தநாரீஸ்வரர் நிலை!
**
வெடிக்க வெடிக்க
எடுத்துப் போட்டுவிட்டு
எடுத்துப் போடுவதை நிறுத்த
வெடிப்பது நிற்கும்
என்றால்...
நம்பவா முடியும்?
**
இருட்டு கறுப்புதான்...
கறுப்பு எல்லாம்
இருட்டல்ல!
**
இருட்டை ஒழித்துவிட்டு
வெளிச்சம் கொண்டு
வருவது பற்றி
யோசனை செய்வதைவிட
வெளிச்சத்தைக் கொண்டு
இருட்டை ஒழிக்கலாமே!
**

சுபா வரன்-கண்டி.



யாசினை தூக்கில் தொங்கவிட ஆயத்தம்- கழுத்தில் கயிறு.





தூக்கு வழங்கப்பட்ட ஈரானியர்கள்

## திரைகடலோடி தேடிய மரணம்

இலங்கையில் இருந்து குவைத்துக்கு தொழில் தேடிப் போனவர் யாசின் அப்துல் கபூர். தொழில் தேடிப்போன இடத்தில் காதல்.

ஹமா டோஜி மொஹமட் என்னும் அழகியின் கண்ணோடு கண் கவ்வி காதலுற்று, பின்னர் காமமுற்று இருவரும் ஒன்றுக்குள் ஒன்றாகினர். அழகியும் தொழில் தேடி இங்கிருந்து குவைத் போனவர்தான்.

யாசினுக்கு காதலி கொடுத்த போதை திகட்டியதும், போதைவஸ்து மோகம் வந்தது. அடிக்கடி போதை வஸ்து வாங்க பணம் தேவைப்பட்டது. சம்பாதித்த பணம் தண்ணீராய்ச் செல வழிந்தது.

காதலியின் கடைக்கண் பார்வைக்கு ஏங்கியவரை போதை ஆசை கடன் கேட்க வைத்தது. கொடுத்த காதலி, ஒரு கட்டத்தில் வெறுப்பேறி மறுக்க, கோபம் தலைக்கேறிய யாசின் அவள் நகைகளை பலவந்தமாகப் பறிக்க, அவள் எதிர்க்க, போதை ஆசை யாசினின் உள்ளே மிருகத்தை உசுப்ப- நேர்ந்தது கோரம்.

காதலியை அடித்து விழுத்தி நிலத்தில் உருட்டி, பாறாங்கல் ஒன்றைத் தூக்கி காதலியின் தலையில் ஒரே போடு! காதலி காலி!

யாசின் கைதானார். விசாரணையில் நீதிபதியே கடுப்பாகி, தூக்குத்தண்டனை விதித்தார்.

யாசினுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட அதே நாளில் போதை வஸ்து கடத்தல்காரர் இருவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. ஒரே நாளில் மூவருக்கும் இவ்வாறு தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது குவைத்தில் இதுதான் முதற்தடவை. மூவரும் பிறநாட்டவர்கள்!

வழக்கமாக தூக்குத் தண்டனைக் காட்சிகளை பத்திரிகைகளுக்குக் கொடுப்பதில்லை. ஆனால் மூவரையும் தூக்கில் போட்ட காட்சிகள் அடங்கிய புகைப்படங்கள் வெளியிடப்பட்டன. ஏனையோருக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும் என்று கருதியே வெளியிடப்பட்டது.

1961ல் குவைத் சுதந்திர மடைந்த பின்னர் தூக்கிலிடப்பட்ட 12 வது நபர் யாசின்.



தூக்கிலிட்ட பின்னர்

## தேன்கிண்ணம்

## பிரிவு

விழிகளுக்கும்
உதடுகளுக்கும்
வேலையில்லை-இனி
காகிதங்களே-
கவலை சுமக்கும்,
கண்ணீர் சுமக்கும்,
அன்பு வளர்க்கும்,
ஆதரவு தேடும்!
**
'நாளை' என்பது
நாளையாகிப்போக,
நேற்றைய நினைவுகளை
நெஞ்சில் சுமந்து
'இன்று'கள் கழியும்-
இதயம் கனந்து...
**
கடதாசிக் கட்டுகள்
காகிதக் கட்டுகளாகும்!
நிறைந்த பேனாக்கள்
நிறைத்தபின் வீசப்படும்!
**
பாடக் குறிப்பெதுவும்
பத்திரமாயில்லை;
அன்பு மடல்கள் மட்டும்
அடுக்கடுக்காய்...அடுக்கடுக்காய்...
**
படித்து முடிக்க
உழைத்து,
உழைத்துக் களைக்க
படித்து...
**
வயிற்றுக்காய்
வாழ்வு வளர்த்து...
வாழ்வுக்காய்
வயிறு வளர்த்து...
**
ஆனால்-
அன்புக்காக மட்டும்
அன்பு வளர்த்து...
அன்பை உழைத்து,
அன்பில் திளைத்து,
பிரிவில் களைத்து...
**
ஓ...
இனி,
விழிகளுக்கும்
உதடுகளுக்கும்
வேலையில்லை...!

சௌஜன்யா.

## பேனா நண்பர்கள்



பெயர்: மலர்,
வயது: 24
முகவரி:
P.O.BOX- 63
KAFARCIMA
BEYRUT, LEBONAN.
பொழுது போக்கு:
ரீ.வி., நண்பர் தொடர்பு.



பெயர்: ஆர். ஹஸீனா,
வயது: 22
முகவரி:
P.O.BOX- 31040,
CODE NO- 90801
SVLAIBEI-KHAT
KUWAIT.
பொழுது போக்கு:
ரீ.வி., பத்திரிகை.

## இந்த வாரம் உங்கள் பலன்

(16.08.1998 தொடக்கம் 22.08.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- காரிய சித்தி, இனசன விரோதம். | காலை | 7 மணி |
| திங்கள்- மனஸ்திரமின்மை, யோசனை. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- நண்பர் விரோதம், முயற்சித் தடை. | காலை | 7 மணி |
| புதன்- இனப் பிணக்கு, பிரயாணம். | காலை | 9 மணி |
| வியாழன்- பொருள் நஷ்டம், அச்சம் | காலை | 6 மணி |
| வெள்ளி- தனலாபம், கீர்த்தி. | பி.ப. | 2 மணி |
| சனி- சுகக்குறைவு, யோசனை. | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, யோசனை மிகுதி. | காலை | 7 மணி |
| திங்கள்- மனச் சஞ்சலம், தொழில் மந்தம். | காலை | 7 மணி |
| செவ்வாய்- திரவிய லாபம், சோர்வு மிகுதி. | காலை | 6 மணி |
| புதன்- வெளியிடப பிரயாணம், மனச் சஞ்சலம். | மு.ப. | 10 மணி |
| வியாழன்- இனசன விரோதம், சுபகாரியம். | காலை | 9 மணி |
| வெள்ளி- மனப் பிணக்கு, மகிழ்ச்சி. | பி.ப. | 3 மணி |
| சனி- தேகசுகம் பாதிப்பு, யோசனை மிகுதி. | மாலை | 5 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- மனக் கவலை, சுபகாரியம். | காலை | 8 மணி |
| திங்கள்- சுபசெய்தி, பணவிரயம். | மாலை | 6 மணி |
| செவ்வாய்- திரவிய லாபம், முயற்சி வெற்றி | மு.ப. | 10 மணி |
| புதன்- பயமிகுதி, பிரயாணம். | மு.ப. | 9 மணி |
| வியாழன்- பண வரவு, மன மகிழ்ச்சி. | மாலை | 5 மணி |
| வெள்ளி- அதிகாரம், பொருள் விரயம். | காலை | 6 மணி |
| சனி- தேகசுகம் பாதிப்பு, செலவு அதிகம். | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- தேகசுகம், தொழிலில் ஊக்கம். | காலை | 8 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், வெளியிடப் பிரயாணம். | காலை | 6 மணி |
| செவ்வாய்- பொருள் நஷ்டம், சுகக் குறைவு. | காலை | 6 மணி |
| புதன்- மனக் கவலை, சோர்வு. | பி.ப. | 3 மணி |
| வியாழன்- மனச் சஞ்சலம், அந்நியர் உதவி. | காலை | 7 மணி |
| வெள்ளி- குடும்ப சுகம், பண வரவு. | மு.ப. | 10 மணி |
| சனி- தனலாபம், காரியதாமதம். | மாலை | 4 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- மனப் பகை, பொருள் நஷ்டம். | மாலை | 6 மணி |
| திங்கள்- தேகசுகம் பாதிப்பு, செலவு அதிகம். | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, தேகசுகம். | காலை | 6 மணி |
| புதன்- பண இலாபம், முயற்சி பலிதம். | பி.ப. | 4 மணி |
| வியாழன்- பண வரவு, சுகம். | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- கைவிடல், பொருள் நஷ்டம். | காலை | 6 மணி |
| சனி- திரவியலாபம், காரிய தாமதம். | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், இராகு, கேது. |
| கடகம் | - செவ்வாய், புதன், வெள்ளி. |
| மீனம் | - வியாழன். |
| மேடம் | - சனி. (வக்ரம்) |

சந்திரன்-இடபம், மிதுனம், கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- மனக் குழப்பம், இனசன விரோதம். | காலை | 9 மணி |
| திங்கள்- பொருள் நஷ்டம், அலைச்சல். | மாலை | 4 மணி |
| செவ்வாய்- மனநிலையின்மை, கடும் முயற்சி. | காலை | 6 மணி |
| புதன்- அவமானம், சோம்பல். | காலை | 9 மணி |
| வியாழன்- இனசனச் சேர்க்கை, மன மகிழ்ச்சி. | மாலை | 6 மணி |
| வெள்ளி- தனலாபம், கௌரவம். | மாலை | 5 மணி |
| சனி- பணச் செலவு, காரியத்தடை. | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- தேகசுகம் பாதிப்பு, மனக் கவலை. | காலை | 7 மணி |
| திங்கள்- சந்தோஷம், கௌரவம். | மாலை | 6 மணி |
| செவ்வாய்- குடும்பப் பிணக்கு, பொருள் நட்டம். | மாலை | 6 மணி |
| புதன்- மனச் சலனம், வெளியிடப் பயணம். | காலை | 7 மணி |
| வியாழன்- காரியத் தடை, பண வரவு. | காலை | 6 மணி |
| வெள்ளி- பெரியோர் சகவாசம், கௌரவம். | மு.ப. | 10 மணி |
| சனி- இனசன விரோதம், மனச் சஞ்சலம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதறகால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- தேகச் சுகக்குறைவு, மனச் சஞ்சலம். | காலை | 7 மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, உறவினர் சேர்க்கை. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, அலைச்சல். | மாலை | 5 மணி |
| புதன்- அசௌகரியம், பொருள் விரயம். | மாலை | 6 மணி |
| வியாழன்- காரிய பங்கம், நிம்மதியின்மை. | காலை | 7 மணி |
| வெள்ளி- தனலாபம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 மணி |
| சனி- காரிய தாமதம், முயற்சித் தடை. | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-1

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- மன நிலையின்மை, சஞ்சலம். | மாலை | 7 மணி |
| திங்கள்- தேகசுகம், மனக் கவலை. | காலை | 7 மணி |
| செவ்வாய்- மனச் சலனம், பொருள் விரயம். | காலை | 6 மணி |
| புதன்- மன மகிழ்ச்சி, முயற்சி பலிதம். | காலை | 9 மணி |
| வியாழன்- இனசன விரோதம், பண வரவு. | காலை | 6 மணி |
| வெள்ளி- மனச் சந்தோஷம், பண விரயம். | காலை | 7 மணி |
| சனி- நண்பர் விரோதம், அவமானம். | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-ஞாயிறு, அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- பண வரவு, தொழில் பிணக்கு. | காலை | 7 மணி |
| திங்கள்- மனப் பயம், மனச் சஞ்சலம். | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- காரிய தாமதம், பண முடை. | காலை | 8 மணி |
| புதன்- காரியத் தடை, வெளியிடப் பிரயாணம். | காலை | 7 மணி |
| வியாழன்- வெற்றி , பண வரவு, சுபசெய்தி. | மாலை | 8 மணி |
| வெள்ளி- தரும கைங்கரியம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| சனி- தெய்வானுகூலம், காரியத் தாமதம். | காலை | 8 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-9

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, மகிழ்ச்சி. | பகல் | 11 மணி |
| திங்கள்- தேகசுகம் குறைவு, மனப் பயம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- பணச் செலவு, வெளியிடப் பயணம். | காலை | 6 மணி |
| புதன்- இனசன நன்மை, பண வரவு. | பி.ப. | 3 மணி |
| வியாழன்- மனமகிழ்ச்சி, வரவு தாமதம். | காலை | 7 மணி |
| வெள்ளி- உறவினர் கலகம், தொழில் மந்தம். | மாலை | 5 மணி |
| சனி- மனச் சஞ்சலம், பொருள் நஷ்டம். | மாலை | 6 மணி |

அதிஷ்டநாள்-ஞாயிறு, அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- பிரயாண தாமதம், மனச் சஞ்சலம். | காலை | 7 மணி |
| திங்கள்- பொருள் நஷ்டம், தேகசுகம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- தனலாபம், நிம்மதி | மாலை | 7 மணி |
| புதன்- மன மகிழ்ச்சி, இனசன வரவு. | காலை | 8 மணி |
| வியாழன்- சுகபோகம், பெரியோர் சகவாசம். | காலை | 7 மணி |
| வெள்ளி- திரவியலாபம், பிரயாணம். | காலை | 6 மணி |
| சனி- வீண் அலைச்சல், பண நஷ்டம். | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6



படிப்பகம்

## குழந்தைகளின் எடை

இளவயதில் பெண்கள் குண்டாக இருந்தாலும் மிக்க மெலிவாக இருந்தாலும் அழகாக இருக்கமாட்டார்கள். நடுத்தரமான உயரமும் பருமனும், அவற்றுக்கேற்ற எடை



அள்ஷும் கொண்டவர்கள்தான் எடுப்பாகத் தோற்றமளிப்பார்கள்.

சிறு குழந்தையாக இருக்கும்போது சில குழந்தைகள் மிகவும் மெலிந்து காணப்படுவார்கள். இதனால் கவலையுறும் தாய்-தந்தையர். அக்குழந்தையின் உடலை ஊதவைப்பதற்காக அதிக கொழுப்புள்ள உணவுகளைத் தேடிக் கொடுப்பார்கள்.

இதனால் அக்குழந்தை நாளாவட்டத்தில் குண்டாகி விடும்.

அதே உணவினைத் தொடர்ந்து அருந்தும் குழந்தை சில வேளைகளில் எடை கூடி, தேவையில்லாத இடங்களில் அதிக சதை பிடித்து அவலட்சணமாகிவிட வாய்ப்புமுண்டு.

வளர்ந்துவரும் சிறுவர்களின் எடை பற்றிய அக்கறை ஒவ்வொரு பெற்றாருக்கும் இருக்க வேண்டும். வயதுக்கேற்ற எடையில்லாமல் கூடிய எடையுள்ள பிள்ளைகள் எப்போதும் சுறுசுறுப்பற்ற சோம்பேறிகளாகவே காணப்படுவர்.

ஏனைய குழந்தைகளைப் போல் போதுமான தேகாப்பியாசமில்லாமையினால், அறிவு மந்தமாகவே இருக்கும். கல்வியிலும் போதுமான நாட்டம் இருக்காது.

சில பிள்ளைகளின் பெற்றார் மற்றும் மூதாதையர் போன்றாரின் உடற்கூறுகளை யொட்டியே உடலமைப்பைப் பெறுகின்றனர்.

இப்பரம்பரைக் கூறுகளால் ஏற்படும் இயல்பான தோற்றத்தை மாற்றி அமைப்பது கடினம் என்ற நம்பிக்கை கடந்த காலங்களில் நிலவியது. ஆனால் இப்போது நவீன சிகிச்சை முறைகளைக் கொண்டு எடை கூடுதல், உடலமைப்புப் பருமனடைவது ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகிறார்கள்.

## மெல்லியராக விருப்பமா?

உடலமைப்பினை உப்பவைப்பதிலும் எடையினை அதிகரிக்கச் செய்வதிலும் மாப்பொருளும், இனிப்புப் பண்டங்களும் பெரும் பங்கினை ஏற்கின்றன. இவ்விரு பொருட்களை நிதானமாக உட்கொண்டு வருவதன் மூலம் பருமனாவதையும் எடைகூடுவதனையும் கட்டுப்படுத்தலாம்.



பொதுவாக எமது பெண்கள் அரிசி உணவையே பிரதானமான உணவாகக் கொள்ளுகின்றனர். கோதுமை, குரக்கன், உழுந்து போன்றவற்றைவிட அரிசியில் மாச்சத்து அதிகமாகும். உடலளவையும் எடையினையும் குறைக்க நினைப்பவர்கள் அரிசி உணவைக் குறைத்து ஊட்டமளிக்கும் கொழுப்பு அதிகமில்லாத கோதுமை, குரக்கன், சோளம் மற்றும் உழுந்து போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

கீரைவகைகள், காய்கறிகள் ஆகியவற்றின் அளவை அதிகரிக்கலாம். கொழுப்பற்ற சிறிய மீன், கோழி இறைச்சி ஆகியவற்றையும் உட்கொள்ளலாம். எண்ணெயில் பொரிக்காமல் வேக வைத்து உண்பதே சிறந்த முறை.

உடலளவைக் குறைப்பதற்காக வேளாவேளைக்கு உண்ணும் உணவினை ஒரேயடியாக நிறுத்திவிடலாகாது. இதனால் உடலுக்குள் அவசியமான ட்ரதங்களும் போஷாக்கும் இல்லாமல் விபரீத விளைவுகளே ஏற்படும்.

சிறு சிறு தேகப்பயிற்சிகளையும் மேற்கொள்ளலாம். அதிக பருமனுடையவர்கள் பாரிய பயிற்சிகளில் ஈடுபடலாகாது. மென்மையான பயிற்சிகளையே செய்ய வேண்டும். இதற்கு முடியாதவர்கள் காலையிலோ, மாலையிலோ அரைமணி நேரமாவது வேகமாக நடக்க வேண்டும்.

## தாகம் தீர.....

தாகம் தீர்ப்பதற்குச் சுத்தமான தண்ணீரைவிட வேறு எதுவும் நல்ல பலனைத் தருவதில்லை. தாகமெடுக்கும் போதெல்லாம் போத்தல்களில் அடைக்கப்பட்டு வரும் குளிர்பானங்களையே நாடும் பழக்கம் எம்மிடம் அதிகரித்துவிட்டது.

சுத்தமான நீரைக் கொதிக்க வைத்து ஆறிய பின் வடிகட்டி ஒரு மண்பானையில் வைத்துக் கொள்ளுங்கள். வெய்யில் காலங்களில் இத்தண்ணீரில் ஒரு குவளை குடித்தால் அதன் சுகமே தனிதான்.

காலையில் எழுந்ததும் பல்துலக்குவதற்கு முன்னர் 4 முதல் 6 குவளைத் தண்ணீரைக் குடித்து வாருங்கள்; மலச்சிக்கல் நீங்குவதுடன் வேறு நோய்களும் அணுகாது.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** EF

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 22-08-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## கண்ணீரில் கரைந்த இரவுகள்

48

புவனா

இளவரசர் சாள்ஸ்சும், டயானாவும் பிரிந்து வாழும் முடிவை பிரிட்டிஷ் பிரதமர் அறிவித்த பின்னரும் அவர்கள் மீண்டும் ஒன்று சேருவார்கள் என்றும் நம்பப்பட்டது.

சில காலம் பிரிந்திருக்கும்போது இருவரும் தாம் விட்ட தவறுகளை உணரத் தலைப்படுவர் என்று நினைத்தோரே அவ்வாறு நம்பினார்கள்.

ஆனால், சாள்ஸ்சும், டயானாவும் நிரந்தரப் பிரிவுக்கு தயாராகிவிட்டது போலவே நடந்து கொண்டனர்.

தான் விரும்பாத- தனக்கு ஒத்துவராத அரச குடும்ப உறவுகளை முற்றாகத் துண்டிக்கும் எண்ணமே டயானாவிடம் குடிகொண்டிருந்தது.



பாடகர் எல்டனுடன்

ஆனாலும் அரச குடும்ப உறவுகளை முற்றாகத் துண்டிக்க முடியாதளவுக்கு சில உறவுகள் தொடரவே செய்தன. அந்தச் சில உறவுச் சங்கிலிகளையும் விரைவில் உடைக்க வேண்டும் என்று நினைத்தார் டயானா.

தங்கக் கூண்டில் இருந்து அந்தத் தேவதைக்கு பாதி விடுதலை கிடைத்துவிட்டது. சிறகுகள் முளைப்பதற்காக அவள் காத்திருக்கிறாள். அந்த அரச குடும்பத்தினர்தான் ஈவிரக்கம் இல்லாமல் அந்தத் தேவதையின் சிறகுகளை வெட்டிப் போட்டுவிட்டார்களே!" என்று எழுதியது இலண்டன் பத்திரிகை ஒன்று.

அரச குடும்ப உறவுகளில் இருந்து விடுபடுவது பற்றி டயானா பின்வருமாறு கூறினார்: "இதற்கான விலையைக் கொடுக்க நான் சித்தமாகி விட்டேன். இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் நல்ல முடிவு வந்தே தீரும்! அதுவரை அமைதியாக இருக்க ஆயத்தமாகிவிட்டேன்."

டயானாவின் நெருங்கிய சிநேகிதி ஒருவர் கூறினார்: "இப்படியொரு நிலை தனக்கு ஏற்படும் என்று சில காலத்தின் முன்னர் டயானா கற்பனையே செய்திருக்கமாட்டார். அவரது வாழ்க்கையை, கண்ணாடியை உடைப்பதுபோல உடைத்துவிட்டனர். அதனை எண்ணி டயானா கண்ணீர் விட்டதுண்டு. ஆனால் இப்போது அரச குடும்ப திருமண பந்தத்தால் ஏற்பட்ட மகிழ்ச்சியற்ற சம்பவங்களை மறக்க ஆயத்தமாகி விட்டார். டயானா சுதந்திரமாக வாழ்வதற்கான ஒரு காலம் உதயமாகிவிட்டது."

### ஊழியர் பேட்டி

சில ஆண்டுகாலம் அமைதியாக இருக்கப் போவதாக டயானா கூறினார்.

மரம் ஓய நினைத்தாலும் காற்று அதனை விடாது. அப்படித்தான் டயானாவின் வாழ்க்கையும் பத்திரிகைகளிலும், தொலைக் காட்சிகளிலும் டயானா பற்றிய செய்திகள் வெளியான வண்ணமே இருந்தன.

இலண்டனில் கென்சிங்டன் மாளிகைக்குள் துன்பகரமான சூழல் நிலவியது.

கென்சிங்டன் மாளிகையில் இருந்து சாள்ஸ் வெளியேறிவிட்டார். டயானா மட்டுமே அங்கிருந்தார்.



டயானா

சாள்ஸ், டயானாவின் உலகப் புகழ் பெற்ற திருமணத்தால் பதினொரு வருடங்களுக்கு முன்பாக குதூகலமடைந்த அந்த மாளிகை இப்போது அந்தத் திருமண முறிவால் அழுது வடிந்தது.

கென்சிங்டன் மாளிகை ஊழியர் ஒருவரைத் தேடிப் பிடித்து அவர் கூறியதை வெளியிட்டது ஒரு பத்திரிகை.

அதனைப் படித்தவர்களின் கண்கள் ஈரமாகின. டயானா மேல் அளவற்ற அனுதாபம் ஏற்பட்டது.

"அந்த இளம் பெண்ணின் படுக்கை அறையில், அந்தப் பெரிய கட்டிலில் தனது கரடிப் பொம்மையை அணைத்தவாறு அழுதபடி குப்புறக் கிடப்பார். அந்தத் துன்பகரமான காட்சியை எத்தனையோ இரவுகள் கண்டுள்ளேன்!" என்று கூறியிருந்தார் அந்த ஊழியர்.

"இப்பொழுது அவளுடைய கணவரிடமிருந்து மட்டுமல்ல, அவளுடைய திருமணத்தினால் சின்னா பின்னமாக்கப்பட்ட சூழலிலிருந்தும் அவள் பிரிக்கப்பட்டுவிட்டாள்!" என்று எழுதியது அந்த ஊழியரின் பேட்டியை வெளியிட்ட பத்திரிகை.

### புதிய ஏற்பாடுகள்

அந்தப் பத்திரிகை கூறியதில் உண்மை இருக்கத்தான் செய்தது.

தனது படுக்கை அறையில் போடப்பட்டிருந்த கருங்காலி மரத்தில் செய்யப்பட்ட இரட்டைக் கட்டிலை முதலில் அப்புறப்படுத்தினார் டயானா.

அந்த அறை அதுவரை எப்படி இருந்ததோ, அதிலிருந்து முற்றிலும் மாறான அறையாக மாற்றியமைத்தார்.

சுவர்கள், கதவுகள் என்பனவற்றுக்கு புதிய வர்ணம் பூசப்பட்டது. திரைச் சீலைகளும் புதிய வர்ணங்களில் மாற்றப்பட்டன.

தனது சொந்த தொலைபேசி இலக்கத்தையும் மாற்றிக்கொண்டார்.

திருமணத்தின்போது பரிசளிக்கப்பட்ட பொருட்கள் கென்சிங்டன் மாளிகையில் மலைபோலக் குவிந்து கிடந்தன.

அப்பொருட்களில் தனக்குத் தேவையானவற்றை மட்டும் டயானா பொறுக்கி எடுத்தார்.

ஏனைய பரிசுப்பொருட்களை தொண்டு நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தார். எதற்கும் உபயோகம் இல்லாதவை தீயிட்டு எரிக்கப்பட்டன.

கென்சிங்டன் மாளிகையில் டயானாவும், சாள்ஸ்சும் ஜோடியாக நின்ற பிரமாண்டமான திருமணப் புகைப்படமும் அகற்றப்பட்டது.

கென்சிங்டன் மாளிகையில் தனது காதல் கோட்டை சரிந்து விழுந்து தவிடுபொடியானமையால் அம் மாளிகை வாழ்வை டயானா வெறுத்தார்.

"இதுவே எனது இராச்சியம். இதுவே எனது கூண்டு!" என்று சிநேகிதிகளிடம் கிண்டலாகக் கூறினார்.

தனது புத்திரர்கள் இருவரும் தன்னுடன் கென்சிங்டன் மாளிகையில் வசிக்கப்போவதை நினைத்து மகிழவும் செய்தார்.

கென்சிங்டன் மாளிகையில் கணப்பு அடுப்பு இருந்தது. குளிருக்கு மிக இதமாக இருக்கும். அதற்கு முன்பாக 5 அடிக்கு 5 அடி பரப்பிலான தோலால் செய்யப்பட்ட தரைவிரிப்பு போடப்பட்டிருக்கும்.

அந்தத் தரை விரிப்பில் தனது மகன்கள் இருவருடனும் படுத்து உருளுவதில் இன்பம் காண்பார்.

## தங்கக் கூண்டுக்கு வெளியே

பேசிக்களித்து, மனம் விட்டுச் சிரித்து, டயானா துன்பங்களை மறந்திருக்கும் வேளை அது.

தன் புத்திரர்கள் மீது டயானா வைத்திருந்த பாசத்தை அளவிட முடியாது.

பிள்ளைகள் இருவரும் தன்னோடு இல்லாத நாட்களிலும், அவர்களுடன் இருப்பது போன்றே தோன்றத் தக்கதாக புகைப்படங்களை சுவர்களில் மாட்டி வைத்திருந்தார்.



வில்லியமுடன்

இளவரசர்கள் வில்லியம், ஹரி ஆகியோரின் பல்வேறு தோற்றப் படங்கள் சுவர்களில் மர மற்றும் வெள்ளிச் சட்டங்கள் போட்டு மாட்டப்பட்டிருக்கும்.

தனது தந்தையார், சகோதரர், சகோதரிகள் ஆகியோரின் படங்கள், தனது சின்ன வயதில் எடுக்கப்பட்ட படங்கள் ஆகியவற்றையும் மாட்டி வைத்திருந்தார்.

பிரபல சினிமா இயக்குநரான ரிச்சட் அட்டன் பேக்குடன் டயானா நடனமாடும் படமும், பிரபல பாடகர் எல்டன் ஜோனின் படமும் தொங்க விடப்பட்டிருந்தன.

அரச குடும்பத்தவர் எவரது படங்களும் டயானாவின் பிரத்தியேக அறைகளில் காணப்படவில்லை.

டயானாவின் குளியலறையிலும் சில படங்கள் மாட்டப்பட்டிருந்தன. அவை யாருடைய படங்கள்- எதற்காக மாட்டப்பட்டிருந்தன என்று அறிந்தால் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்.

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

ஜரீனா இம்தியாஸ்,
166/2, மசூதி வீதி,
திருகோணமலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு- அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 14

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

www.padippakam.com





நின்னைச் சில வரங்கள் கேட்பேன்-அவை
நேரே இன்றெனக்குத் தருவாய்-என்றன்
முன்னைத் தீயவினைப் பயன்கள்-இன்னும்
மூளாது அழிந்திடுதல் வேண்டும்!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# நாயும் கழுதையும்

ஓர் ஊரில் ஒருவனிடம் ஒரு நாயும், கழுதையும் இருந்தன. அவன் வெளியூர் செல்வதாக இருந்தால் பொதி சுமக்க கழுதையையும், காவலுக்காக நாயையும் அழைத்துச் செல்வான்.

ஒருநாள் அவன் வழமைபோல் கழுதையையும் நாயையும் அழைத்துக் கொண்டு வெளியூர் சென்றான். வெளியூரில் அவன் தன் வேலையை முடித்துக் கொண்டு அங்குள்ள ஒரு சத்திரத்தில் ஓய்வெடுத்தான்.

அவன் சத்திரத்திற்குள்ளே செல்லும் போது, சத்திரத்திற்கு வெளியே கழுதையைக் கட்டி வைத்து, அதற்கு இலை குழைகளைப் போட்டான். நாயையும் வெளியே நிற்க வைத்தான். உள்ளே போகும்போது, கழுதை மேல் இருந்த பொதிகளில் ஒன்றை மட்டும் விட்டு விட்டு மற்றவைகளை மறக்காமல் எடுத்துச் சென்றான். அவன் விட்டுச் சென்றது நாயின் உணவுப் பொட்டலம்.

கழுதையும் எஜமான் போட்ட இலை குழைகளை ஆனந்தமாய்த் தின்று கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் நாய்க்கும் பசியெடுத்தது. எஜமான் வந்து தனக்கு உணவு தருவார் என்று பொறுத்துப் பொறுத்துப் பார்த்தது.

அதற்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. கடைசியாகக் கழுதையைப் பார்த்து,

"நண்பனே! கொஞ்சம் கீழே படுத்துக்கொள், உன் முதுகில் எனது உணவுப் பொட்டலம் உள்ளது. அதில் உள்ள உணவை எடுத்துக் கொள்கிறேன். உள்ளே எஜமான் தூங்கியிருப்பார். என்னால் பசி தாங்க முடியவில்லை," என்று கெஞ்சிக் கேட்டது.

இவற்றைக் காதில் போட்டுக் கொள்ளாமல், தன் பாட்டிற்கு கழுதை இலை குழைகளைச் சாப்பிட்டது. ஆனால் நாய் மறுபடி மறுபடி கேட்டது. அதற்குக் கழுதை,

"என்னப்பா அவசரம்? எஜமான் விழிக்கட்டும். அவர் எழுந்ததும் உனக்குக் கட்டாயம் உணவு கொடுப்பார்!" என்று சொன்னது.

வேறு வழியில்லாமல், பசியால் நாய் சோர்ந்து படுத்துக் கொண்டிருந்தது.

இந்த வேளையில் இரண்டு முரட்டு ஓநாய்கள் அங்கே வந்தன. அவை கழுதை மீது பாய்ந்தன.


உடனே கழுதை நாயைப் பார்த்து,

"நண்பா! நண்பா! ஓடிவா... எனக்கு உதவி செய். இந்த ஓநாய்களிடமிருந்து என்னைக் காப்பாற்று!" என்று கத்தியது.

படுத்த இடத்தை விட்டு நாய் எழுந்திருக்காமலே கழுதையைப் பார்த்து,

"என்னப்பா அவசரம்? எஜமான் விழிக்கட்டும். அவர் எழுந்ததும் உனக்குக் கட்டாயம் உதவி செய்வார்!" என்று சொன்னது.

கழுதையைக் கடித்துக் குதறிக் கொண்டிருந்த ஓநாய்கள், யாரோ அப்பக்கம் வரும் சத்தத்தைக் கேட்டு, அப்படியே விட்டு விட்டு அவ்விடத்தைவிட்டு ஓடிப் போயின.



'காயங்களுக்குள்ளான கழுதை, நாய்க்கு உதவி செய்திருந்தால் தனக்கு இந்நிலைமை ஏற்பட்டிருக்கவே இருக்காது' என்று தன்னைத்தானே நொந்து கொண்டது.

## அதிசயம் – ஆனால் உண்மை!

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 12 வயதுச் சிறுமி ரோஸ்மேரி ஒரு நாள் தன் நாயுடன் ஏரி ஒன்றில் விழுந்து விட்டாள். என்ன ஆச்சரியம்! அவர்கள் விழுந்த இடத்தில் ஒரு காற்றுக் குமிழி ஒன்று தோன்றி அவர்களைக் கரை சேர்த்து விட்டதாம்.



உலகில் உள்ள தவளைகள் அனைத்திற்கும் 4 கால்கள் தான் உண்டு. ஆனால் கலிஃபோர்னியாவில் உள்ள ஒரு குளத்தில் வாழும் தவளைகளுக்கு 8 கால்கள் உள்ளனவாம்.



ஆபிரிக்காவில் உள்ள காபிர் இனத்தவர் ஒருவருக்கு அரக்கர்களுக்கு இருப்பது போன்று தலையின் இரு புறமும் கொம்புகள் முளைத்துள்ளதாம். சுமார் 2 அடி கொண்ட இக்கொம்புகள் பார்ப்போரை பயமுறுத்தும் தோற்றத்தில் அமைந்துள்ளன.



870 முதல் 954 வரை வழ்ந்தவர் குடாகி என்ற பாரசீகக் கவிஞர். இவரது மனைவி ஒரு பிரசவத்தில் 4 குழந்தைகள் பெற்றெடுத்த அதே நாளில் இவரது மகள் 3 குழந்தைகளையும், இவரது பேத்தி 2 குழந்தைகளையும் பெற்றெடுத்தாள்.



## வாரம் ஒரு நாடு

### லற்வியா

| | |
|---|---|
| தலைநகர் | - ரிகா |
| பரப்பு | - 63700 சதுரகிலோமீட்டர் |
| மக்கள் தொகை | - 26 இலட்சம் |
| மொழி | - லாட்விடன் |
| சமயம் | - கிறிஸ்தவம் |
| எழுத்தறிவு | - 99% |
| நாணயம் | - லற் |
| தனிநபர் வருமானம் | - 2260 டொலர் |

**அமைவிடம்:**

கிழக்கே ரஷ்யாவையும் தெற்கே பெலோரஷ்யா மற்றும் லிதுனியாவையும் மேற்கே பொத்னியாக் குடாக் கடலையும் வடக்கே எஸ்டோனியாவையும் எல்லைகளாகக் கொண்டது.

**வரலாறு:**


1939ல் சோவியத் யூனியனின் பிடிக்குள் வந்தது. 1940ல் சோவியத் யூனியனின் குடியரசுகளில் ஒன்றானது. 1991ல் சுதந்திரமடைந்தது.



**பொருளாதாரம்:**

கால்நடை வளர்ப்பு, கைத்தொழில் முன்னேற்றமடைந்துள்ளன. தொழில் வளர்ச்சி கண்டு வருகிறது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 22.08.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 258**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 256

பரிசுக்குரியவர்:
ருக்ஷா அஸீஸ்,
கோடோபா சர்வதேசக் கல்லூரி, அக்குறணை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ரி.எஃப். அஸ்மிலா, வறகஸ்ஹின்ன, அக்குறணை. | எம்.ஐ.எஃப். இப்திஹாஜ், ஹன்சகிரிய, கள-எலிய. |
| வினா விஜேந்திரன், கெப்ரியல் மகளிர் ம.வி., அட்டன். | என்டன் ரியான்சி பர்னாந்து, புனித ஆசிர்வாதப்பர் கல்லூரி, கொழும்பு-13. |
| செல்வி விஜிதா பேரின்பநாயகம், சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. | எம்.ஆர்.எஃப். நஸ்ஹா, குருத்தலை முஸ்லிம் மகா வித்., கடுகண்ணாவை. |
| எல். அகமட் றஸ்மி, ஸ்ரீ கோனேஸ்வர இந்துக் கல்., திருகோணமலை. | சாரதாஞ்சலி மனோகரன், இந்து மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை. |
| டி. கிர்ஸ்சாந்தன், சென். ஜோன் பொஸ்கோ கல்லூரி, அட்டன். | ஏ. சிபோரா பர்னாந்து, நல்லாயன் கன்னியர் மடம், கொழும்பு-13. |

## விடுகதைகளும் விடைகளும்

1. வானுக்கும் பூமிக்கும் ஒரே கம்பி;
அது என்ன?
2. ஒட்டு உடம்புக்காரனுக்கு ஓடத் தெரியாது;
அவன் யார்?
3. காலால் மிதித்தால் காற்றாய்ப் பறப்பான்;
அவன் யார்?
4. படுத்திருப்பவன் உடம்பில் பரதநாட்டியம் ஆடுகிறாள்.
யார் அவர்கள்?
5. சூடு பட்டுச் சிவந்தவன் வீடு கட்ட உதவுவான்.
அவன் யார்?
6. நாலுகால் இருந்தும் தானாக நடக்க மாட்டான்.
அவன் யார்?
7. என்னைப் பார்த்தால் உன்னைப் பார்க்கலாம்.
நான் யார்?
8. வண்ணத்தில் வருவான் எண்ணத்தில் நிறைவான்.
அவன் யார்?
9. மரம் வழுக்கும் பழம் இனிக்கும்.
அது என்ன?
10. கால் இல்லாதவன் என்றாலும் வேகத்திற்குக் குறையாதவன்.
அவன் யார்?

**விடைகள்**

1. மழை 2. ஆமை 3. சைக்கிள்
4. அம்மி-குழவி 5. செங்கல்
6. நாற்காலி 7. கண்ணாடி
8. வானவில் 9. வாழை 10. பாம்பு

தொகுப்பு-ஏ.அகல்யா.

## கண்டு பிடிப்புக்கள்




அலுவலக வேலைகளைச் சுலபமாக்குவதற்காகத் தான் தட்டச்சு இயந்திரம் (Type writter) கண்டு பிடிக்கப்பட்டது என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. உண்மையில் கண் பார்வையற்றவர்களின் அலுவலக உதவிக்காகவே தட்டச்சு இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டது.

●●●



பார்வையற்றவர்களுக்காக லூயிஸ் பிரெய்லி என்பவர் புள்ளி எழுத்து முறையை உருவாக்கினார் என்று நீங்கள் கருதினால் அதுவும் தவறு. உண்மையில் ஃபிரெஞ்சு படைகளுக்கு இரவு நேரத்தில் செய்தி அனுப்புவதற்காகவே லூயிஸ் பிரெய்லி புள்ளி எழுத்து முறையைக் கண்டுபிடித்தார். புள்ளி எழுத்துக்களை அனுப்பும்போது இரவு வேளைகளில் வெளிச்சம் இல்லாமலும் தடவிப் படிக்க முடியும் என்பதற்காகவே இப்புள்ளி எழுத்து முறையைப் பயன்படுத்தினார்கள்.



இதே போன்று தான் குளிர் சாதன இயந்திரமும் (AIR CONDITION) மனிதர்கள் சொகுசாக இருப்பதற்காகக் கண்டு பிடிக்கப்படவில்லை. புடவைத் தொழிலில் பயன்படுத்துவதற்காகவே குளிர்சாதன இயந்திரம் முதலில் பயன்படுத்தப்பட்டது. அடிக்கடி மாறும் வெப்பநிலை காரணமாக துணிகள் சாயம் மாறாமல் இருக்க குளிர்சாதன இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டு உபயோகப்படுத்தப் பட்டது.

★★★

## ஏன் தெரியுமா?

சில உணவுப் பொருட்களுக்கு ஐஸ்கட்டிகள் மூலம் குளிர்ச்சி ஏற்படுத்துகிறார்கள். இது ஏன் தெரியுமா?



உணவுப் பொருட்களுக்கு ஐஸ்கட்டிகள் மூலம் குளிர்ச்சி ஏற்படுத்தினால் உணவுப் பொருட்கள் நீண்ட நேரம் கெட்டுப் போகாமல் நல்ல நிலையில் இருக்கும்.

எப்படி? உணவில் சில நுண்ணுயிரிகள் உள்ளன. இவற்றின் தொழிற்பாட்டால் உணவுகள் கெட்டுப் போகின்றன. உணவுப் பொருட்களைக் குளிர்ச்சி அடைய வைத்தால், உணவில் உள்ள தண்ணீர் உறைகிறது. இதனால் நுண்ணுயிரிகள் செயலற்றுப் போய் விடுகின்றன. உணவுப் பொருட்கள் பழுதடையாமல் நீண்ட நேரம் நல்ல நிலையில் இருக்கும்.

## கோல்ஃப் விளையாட்டு



* கோல்ஃப் விளையாட்டு முதன் முதலில் ஸ்கொட்லாந்து நாட்டில் தான் தொடங்கியது. இவ்விளையாட்டை ரோமானியர்கள் 'பகானிகா' என்ற பெயரில் முதலில் அழைத்தனர்.

* இங்கிலாந்தில் இவ்விளையாட்டு 14ம் நூற்றாண்டில் தொடங்கியது.

* ஆரம்ப காலத்தில் தெய்வ வழிபாட்டை மறந்து, தேவாலயங்களுக்குப் போகாமல் கோல்ஃப் விளையாட்டில் தீவிரமாக ஈடுபட்டமையால் இவ்விளையாட்டுக்கு சில நாடுகளில் தடை கூட விதிக்கப்பட்டது.

* கோல்ஃப் விளையாட்டை ஆரம்பித்த ஸ்கொட்லாந்து நாட்டில் தான் முதன் முதலாக 18ம் நூற்றாண்டில் கோல்ஃப் கிளப் ஆரம்பிக்கப்பட்டது.

## பெரிய பூங்கா

உலகத்திலேயே மிகப் பெரிய பூங்கா 'உட்பார்லோ தேசிய பூங்கா' ஆகும். இது கனடாவில் உள்ள அல் பாடா என்ற இடத்தில் அமைக்கப் பட்டுள்ளது.

இதன் பரப்பளவு 17 ஆயிரத்து 872 சதுர மைல்கள். இந்தப் பூங்காவில் உலகத்தில் உள்ள எல்லா வகையான பூச் செடிகளும் தாவரங்களும் இருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com



**அமோக வாரம் 09**

# மேற்கே ஒரு குற்றம்

"**ர**ங்கராஜன்.. ரகசியமா ஒரு விஷயம் உங்ககிட்டே சொன்னா பத்திரமா வெச்சுப்பிங்களா?"

ரங்கராஜன் இந்தப்பக்கம் அந்தப் பக்கம் பார்த்து, "மூச்சுவிடமாட்டேன். சொல்லுங்கோ!" என்றார்.

"அந்த விளம்பரத்துக்கு அர்த்தமே வேற! இது பெரிய ரகசியம். உங்க செய்தித்தாளைப் பொறுத்தவரையிலும் இதைப் போடறதுக்கு ஒரு அப்ஜெக்ஷனும் இல்லையே?

"இல்லை. மேம்போக்காகப் பார்த்தா சாதாரணமான பர்சனல் விஷயமாகத் தான் இருக்கு..."

"அப்ப போட்டுறுங்க! இதைப் போடறதிலே இந்த தேசம் பலன் பெறப்போறது! அப்புறம் விவரமாச் சொல்றேன்!"

"சரி ஸார்; ஒரு நான் ஆத்துக்கு வாங்கோ."

"அட்ரஸ் சொல்லுங்கோ!" எனறான் வசந்த்.

"அவரே அழைச்சுட்டுப் போவார் டா!"

வெளியே வந்ததும், "அதென்ன அன்புள்ள அய்யா?" என்றான் வசந்த்.

"அந்த அசரீரியோட பேசிக்கிட்டிருந்த போது ஒரு தடவை ஒருத்தன் அய்யாங்கிற வார்த்தையை உபயோகிச்சான். ஞாபகம் இருக்கா?"

"இருக்கு பாஸ்!"

"அவுங்க இன்னிக்கு நம்மை ஃபாலோ பண்ணியிருக்காங்க. எங்கெங்கே? முதல் கலாராதனா. அப்புறம் ஏர் இண்டியா. அப்புறம் பாஸ்போர்ட் ஆபீஸ். அப்புறம் பத்திரிகை ஆபீஸ். இத பார், இப்பகூட அந்த நீல அம்பாஸடர் நம்மைத் தொடர்ந்துகிட்டு வரது. பேசாம நல்ல பிள்ளை மாதிரி கோர்ட்டுக்குப் போயிடலாம். நாளைக்கு விளம்பரம் வரும்."

"நடுவில பொலீஸைப் பார்த்தது அவங்களுக்குத் தெரிஞ்சிருக்காது."

"காது. ராஜேந்திரன் நம்ம டெலிஃபோனை மானிட்டர் பண்றதுக்கு ஏற்பாடு செஞ்சுடுவார். அப்புறம் எப்படிப் பணம் கொண்டு வந்து கொடுக்கிறான்னு பார்த்துறலாம். அப்ப பிடிக்கறதுக்கோ, பொலிஸ் அவங்களை ஃபாலோ பண்ற துக்கோ ஒரு சந்தர்ப்பம் ஏற்படும்."

"சரி பார்த்துறலாம் பாஸ். திஸ் இஸ் வெரி எக்ஸைட்டிங். எனக்கு நரம்பெல்லாம் துடிக்குது."

"ஈஸி ஈஸி. ஜெர்மனிக்குப்போறதுக்குள்ளேயே அவங்களைப் புடிச்சுட்டா, கவலை விட்டது. பதினைஞ்சு நாள் இருக்கே!"

"எப்படியும் அவன் நம்மை மறுபடி டெலிஃபோன்ல காண்டாக்ட் பண்ண மாட்டானா? பணம் கொடுக்க வேண்டாமா?"

"பார்க்கலாம். அவுங்க என்னென்ன தந்திரங்கள் வெச்சிருக்காங்களோ!"

காரைக் கோர்ட் வாசலில் திருப்ப, சற்று தூரத்தில் அந்த நீல அம்பாஸடரும் திரும்புவது தெரிந்தது கணேஷுக்கு.

"அவனும் வரானா பாஸ்?"

"ஆமாம். நம்பரை நோட் பண்ணிக்கலாம். ஆனால் அது நிச்சயம் ஒரு உபத்திரவமில்லாத தப்பில்லாத நம்பரா இருக்கும்."

அந்தக் கார் அவர்கள் காருக்கு நாலடி தள்ளி பார்க் செய்யப் பட்டிருந்தது.

"கண்டுக்காம வா!" என்றான் கணேஷ். அந்தக் காரைக் கடக்கும் போது அதன் டிரைவர் தன் முகத்தை மறைத்து தினத்தந்தி படித்துக்கொண்டிருந்தான். டி.எம்.எக்ஸ். 3635 என்று மனதில் குறித்துக் கொண்டான் கணேஷ்.

இருவரும் கோர்ட்டில் நுழைந்தார்கள்.

மாலை ராஜேந்திரன் டெலிஃபோன் செய்தார்.

"கணேஷ், ஏதாவது டெலிஃபோன் வந்ததா?"

"இல்லை. நான் கொடுத்த கார் நம்பர்?"

"டி. எம்.எக்ஸ். 3635 அந்த நம்பரில் ரிஜிஸ்ட்ரேஷனே இல்லை."

"அது எப்படி?"

"கூட்டிப் பார்த்தா எட்டு வரதுன்னு சில நம்பர்கள் இப்படி மிஸ் ஆயிடறதுண்டு. அது போலி நம்பர். எதுக்கும் அந்த நம்பருள்ள கார் கண்ல தென்பட்டதுன்னா புடிக்கும்படி டிராஃபிக் பொலிஸ்ல சொல்லி வெச்சிருக்கேன்."

"அதுக்குள்ள அவங்க நம்பரை மாத்தினாலும் மாத்திடுவாங்க. தேர்ந்த கோஷ்டின்னுதான் தெரியுது."

"அப்புறம் என்ன செஞ்சிங்க?"

"பாஸ்போர்ட் ஆபீசிலே போயி அப்ளிகேஷன் ஃபாரம் வாங்கிட்டு வந்தேன். விளம்பரம் கொடுத்தேன். நாளைக்கு காலை வரும். அதுக்கப்புறம்தான் காண்டாக்ட் பண்ணுவாங்கன்னு நினைக்கிறேன்."

"நாளைக்கு உங்க ஆபீசை மஃப்டியில் கண்காணிக்கச் சொல்றேன். யாராவது வந்து காண்டாக்ட் பண்ணா அந்த ஆளு பேச்சை முடிச்சிட்டு வெளில வரும்போது உங்க அஸிஸ்டண்ட்டை ஒரு தடவை கையை உயர்த்தி சோம்பல் முறிக்கிற மாதிரி செய்யச் சொல்லுங்க. ஆளைக் கண்டுகிட்டு அவனை ஃபாலோ பண்ணித் தீர்த்துறலாம்... என்ன?"

"சரி"

"டெலிஃபோன் வந்ததுன்னா கொஞ்சம் சம்பாஷணையை நீட்டுங்க. காலை ட்ரேஸ் பண்றதுக்கு கொஞ்சம் அவகாசம் தேவையா இருக்கும். அதுவும் எக்ஸ்சேஞ்சுக்கு எக்ஸ்



சேஞ்சுன்னா இவுங்களுக்கு ரொம்ப டயமாகும்."

"சரி."

"விளம்பரம் என்ன குடுத்திருக்கீங்க?"

"டிக்கட்டுக்கு பணம் கேட்டு இருபத்தி அஞ்சாயிரம்."

"போறதா முடிவு பண்ணிட்டிங்களா?"

"பணம் கொடுத்தாப் போறோம்! அதுக்குள்ள நீங்க கண்டுபிடிச்சிட்டிங்கன்னா கான்ஸல் பண்ணிடறது!"

"பார்க்கலாம், அது இருபத்தி அஞ்சாயிரம் குடுக்கற பார்ட்டியா இருந்தா விஷயம் ரொம்ப பெரிசுன்னு முடிவு செஞ்சுறலாம்! வெச்சுறட்டுமா?"

"சரி."

வசந்த் வந்தான். "அந்த கார் நம்பர் டம்மி."

"நான் நினைச்சேன்! பாஸ், நீங்க கேட்ட விவரங்கள். முதல்ல கலாராதனாவுடைய ப்ரொக்ராம். முதல்ல ஃப்ராங்ஃபர்ட்டில் இறங்கறாங்க. அங்கேருந்து லூஃப்தான்ஸா ஃப்ளைட்டைப் புடிச்சு ம்யுனிக் போறாங்க. அங்க ஒரு பர்ஃபார்மன்ஸ். ரெண்டு நாள் தங்கியிருந்து அப்புறம் பாரிஸ்ல நாலு நாள். பாரிஸ்ல ஒரு நிகழ்ச்சி. அதுக்கப்புறம் லண்டன்..."

"அதில எந்த இடத்தில் அந்தக் குற்றம் நிகழப் போகிறது?"

"கடவுளுக்குத்தான் வெளிச்சம்! நாமகூட அதேமாதிரி டூர் ப்ரொக்ராம் போட வேண்டியதுதான்!"

"முதல்ல பணம் வரட்டும். அதுக்கப்புறம் யோசிக்கலாம்."

"பாஸ்போர்ட் ஆபீஸ்ல பேசிட்டேன். பாஸ்போர்ட் பத்தி கவலையில்லை. ஜெர்மனிக்கு விசா வேண்டாம். பாரிஸுக்கு ஏர்ப்போர்ட்டிலேயே ரெண்டு நாளைக்கு டூரிஸ்ட் விசா தருவாங்களாம். லண்டனுக்கு ஹைகமிஷன்ல முன்னாடியே வாங்கிக்கலாமாம். உங்க பழைய பாஸ்போர்ட் இன்னும் வாலிடா இருக்கு. விசா மட்டும் மறுபடி வாங்கிக்கணும். எனக்குப் புதுசா பாஸ்போர்ட் வாங்கணும். நானும் உண்டில்ல?"

"உண்டு. இதை என்னால தனியா சமாளிக்க முடியாது. உதைபட்டாக்கூட பாதி பாதியா பிரிச்சுக்கலாம் பாரு?"

"உங்கமேல யாராவது கைவைக்க விடுவேனா? கராத்தே எதுக்கு கத்து வெச்சுக்கிட்டிருக்கேன்?"

"நீ கத்துண்ட கராத்தே போதாது."

டெலிஃபோன் மணி அடித்தது. கணேஷ் ஆர்வத்துடன் எடுத்தான்.

"சீனிவாச கோபாலன் இருக்காரா?"

"ராங் நம்பர்!"

"இது சீனிவாச கோபாலன் நம்பர் இல்லே!"

"இல்லை, இது சென்ட்ரல் ஸ்டேஷன்!"

"ஸாரி!" வைத்தான்.

"சீனிவாச கோபாலனாம். சட்!"

❑❑❑

**ம**றுதினம் அந்த விளம்பரம் செய்தித்தாளில் வந்தது. கணேஷுக்கு அன்றைக்கு கோர்ட்டில் வேலையில்லை. கோபாலாச்சாரியாரின் வேண்டுகோளில் கேஸ் அட்ஜோர்ண் ஆகி அடுத்த மாதத்திற்கு போஸ்ட் ஆகியிருந்தது. ஏறக்குறைய நாள் முழுவதும் தன் ஆபீஸிலேயே இருந்தான். டெலிஃபோன் வரும் என்று காத்துக் கொண்டு, வரவில்லை. ராஜேந்திரன் ரெண்டு தடவை ஃபோன் செய்தார். ஆபீஸுக்கு வெளியே டீக்கடையில் மஃப்டியில் ஒரு பொலிஸ் ஆசாமி காத்திருந்தான். டெலிஃபோன் மூலம் அவர்கள் இனி அவனுடன் தொடர்பு கொள்ளப் போவதில்லை என்பது ஏறக்குறைய உறுதியாகிவிட்டது. மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர்கள் என்பது தெரிந்தது. 'இதுவரை அவன் அவர்களில் ஒருவரைக்கூடப் பார்த்ததில்லை. ஏதோ இருட்டில் சென்றார்கள். பேசினார்கள். வந்தார்கள். எல்லாம் கனவு போலத்தான் இருந்தது. அல்லது அடிப்படையாக ஏதாவது தப்பு செய்துவிட்டேனா? தப்புச் செய்து இவன் சும்மா எல்லாம் தெரியும் என்று கதை விட்டிருக்கிறான்' என்று கண்டுபிடித்து விட்டார்களா? ஒன்றும் புரியவில்லை.

✌ ✌ ✌

**ம**றுதினமும் காலை வரை ஒன்றும் நிகழவில்லை. வாசலில் அந்த பொலிஸ் ஆசாமி காத்திருந்தான். ரெலிஃபோன் எதுவும் வரவில்லை. வசந்த் பாஸ்போர்ட் ஆபீஸ் போய் வந்தான். இரண்டு கட்சிக்காரர்கள் வந்தார்கள். கலாராதனாவின் வெளிநாட்டுப் பயணம் பற்றிய செய்தி செய்தித்தாள்களில் ஒரு ஓரத்தில் வந்தது. வேறு எதுவும் விசேஷமாக நிகழவில்லை.

"அவ்வளவுதான் பாஸ்! எங்கேயோ தப்பு நேர்ந்து போச்சு. ஒண்ணு அவுங்க டிக்கெட் வாங்குன்னு சொன்னது வேற இடத்துக்கா இருக்கலாம். அல்லது அவுங்களுக்கு இருபத்தி அஞ்சாயிரம் கொடுத்து ரெண்டு பேருக்கு டிக்கெட் எடுக்க இஷ்டமில்லையோ என்னவோ?"

"எப்படியும் ஏதாவது தகவல் சொல்லித்தானே ஆகணும். தகவலே இல்லியே. கிணத்தில் கல்லைப் போட்டாப்பல இருக்கே..."

"அவ்வளவு தான் பாஸ் ஆட்டம் க்ளோஸ். ஏதோ ஓசில ஒரு டிரிப் கிடைக்கும்னு சப்புக் கொட்டிக்கிட்டு

**எழுத்துலக வேந்தன்**

## சுஜாதா

இருந்தேன். உதைச்சுடுச்சு!"

மாலைத் தபாலில் கணேஷிற்கு வந்திருந்த கடிதங்களை ஒவ்வொன்றாகப் பிரித்தான்.

பார் அஸோஸியேஷனிருந்து; சென்சுரி கிளப்பிலிருந்து; ஆபீஸ் எலக்ட்ரிஸிட்டி பில்; அப்புறம் அது என்ன?

கவருக்குள் ஒரே ஒரு சீட்டு மட்டும் இருந்தது. சீட்டைப் பிரித்தான். ஒரு சின்ன சாவி விழுந்தது. அந்தச் சீட்டு சென்ட்ரல் ஸ்டேஷனில் க்ளோக் ரூமில் ஒரு பெட்டியை ஒப்படைத்ததற்கு ரசீது. வேறு எதுவும் அந்தக் கவரில் இல்லை.

(தொடர்ந்து வரும்)

**அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை**

# சதாம் உசேன்

**02**

"**யா**ர் அவன்?"

கண்களை உருட்டிக் கொண்டு அதிகாரி கேட்டார்.

பதில் இல்லை.

"ஜனாதிபதியைக் கொல்ல முயற்சி பண்ணின உன் கோஷ்டிக்கு தலைமை தாங்கினவன்... இப்ப தப்பி ஓடிட்டவன்... அவன் யார்....?"

கைதி இப்போதும் மௌனம் சாதித்தான்.

அவன் தரைக்கு மேல் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டிருந்தான். சித்ரவதைக் கூடத்தின் முகட்டிலிருந்து தொங்கிய இரும்புச் சங்கிலியில் அவன் கால்கள் பிணைக்கப்பட்டிருந்தன. ஜனாதிபதியைக் கொல்ல முயன்ற கோஷ்டியில் இடம் பெற்றிருந்த இந்தக் கைதி தப்பி ஓடும் போது பாதுகாப்புப் படையினரிடம் பிடிபட்டு, சித்ரவதை கூடத்துக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறான்.

"இப்படிக் கேட்டா சொல்ல மாட்டே! ஷாக் ட்ரீட்மெண்ட் குடுத்தாத்தான் சரிப்படுவே!" என்று ஆத்திரத்துடன் சொன்ன அதிகாரி காவலாளியை அழைத்தார்.

இதைக்கேட்ட விசாரணைக் கைதியின் மன உறுதி முதல் முறையாகக் குலைந்தது. உள்ளுக்குள் அதிர்ந்தான். அவன் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே மின் சாரத்துடன் இணைக்கப்பட்ட வயரை காவலாளி எடுத்து வந்தான். கைதியை நெருங்கினான்...

நடுக்கத்தில் கண்களை மூடிக்கொண்டான் கைதி. சுர்ரென்று உடலுக்குள் மின் சாரம் பாய்ந்தது. பொறி கலங்க, நரம்புகள் வெட்டியிழுக்க, உயிர்போவது போல் அலறினான். "ஐயோ வேணாம்...சொல்லிடுறேன்..."

வெற்றிக் களிப்பில் எக்காளமாய்ச் சிரித்தார் அதிகாரி.

"இப்பச் சொல்லு! அந்த இளைஞன் யார்...?"

கைதி சொன்னான்:

"சதாம் உசேன்...!"

சதாம் உசேன் பெயர் அன்றுதான் முதன் முதலாக ஈராக் முழுவதும் பரவியது. பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தியது...

ஜனாதிபதியை சுட்டுக்கொல்ல முயன்ற சதாம் உசேனின் துணிச்சல் கண்டு ஈராக்கியர்கள் பிரமித்தார்கள். ஜனாதிபதியின் போக்கை வெறுத்த இளைஞர்கள் சதாம் உசேன் பெயரை பிரியத்துடனும், கம்பீரத்துடனும் உச்சரித்தார்கள்.

'யார் இந்த சதாம் உசேன்? திடீரென்று ஜனாதிபதியைக் கொல்ல ஏன் முயன்றான்? இத்தனை நாளும் அவன் எங்கிருந்தான்? அவன் ஊர் எது? அவன் குடும்பம் எப்படி?' என்ற விவரங்களையெல்லாம் அவர்கள் தெரிந்து கொள்ள மிகவும் ஆர்வம் காட்டினார்கள்.

❑❑❑

**ச**தாம் உசேனின் பின்னணி பற்றிய தகவல்கள் ஒன்றன்பின் ஒன்றாக வெளிவரத் தொடங்கின. அந்த தகவல்களைக் கேட்டு அவர்கள் ஆச்சரியத்தில் மலைத்துப் போனார்கள்.

சதாம் உசேனின் சொந்த ஊர் அல்-அஜா. அது ரொம்பச் சின்ன கிராமம். சுத்துப் பட்டிக்காரர்களைத் தவிர, வெளியே வேறு யாருக்கும் தெரியாத குக்கிராமம்.

நாகரிகத்தின் நிழல் கூடப் படியாத பழமையில் அது மூழ்கிக் கிடந்தது. அருகிலுள்ள தக்ரித் நகருக்குப் போய் வர புழுதி பறக்கும் வண்டிப் பாதையை விட்டால் அக்கிராமத்துக்கு வேறு ரோடு எதுவும் இல்லை. மின்சார வசதி இல்லை. குடி நீருக்கு குழாய் வசதி இல்லை.



**ராஜையா**

ஊர் முழுக்க குடிசைகள்தான். மண் சுவர்+ஓலைக்கூரை.

அடுப்பெரிக்க எரு மட்டும்.

இத்தனை பின்தங்கிய கிராமத்தில்தான் 1937ஆம் ஆண்டு ஏப்ரல் 28ம் தேதி, நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பத்தில் சதாம் உசேன் பிறந்தான்.

அந்த ஊரில் வீசிய காற்றில் மருந்துக்குக் கூட அரசியல் கலந்திருக்கவில்லை. அரசும், அரசியலும் மையம் கொண்டிருந்த பாக்தாத் நகரம் பல மைல்களுக்கு அப்பால் எங்கோ தொலைவில் இருந்தது.

இப்படிப்பட்ட கிராமத்தில் பிறந்து வளர்ந்த சதாம் உசேன், ஒருநாள் ஆட்சியாளர்களுக்கு சிம்ம சொப்பனமாகவும், ஈராக் முழுவதும் பரபரப்பாகப் பேசப்படும் மாவீரனாகவும் திகழ்வான் என்று அப்போது அவனைப் பெற்றவளும் நினைத்ததில்லை, மற்றவர்களும் கற்பனை செய்துகூடப் பார்த்ததில்லை.

சதாம் உசேனின் குழந்தைப் பருவம் மிகப் பரிதாபமானது. அந்தப் பருவத்து கசப்பான அனுபவங்களை மீண்டும் நினைத்துப் பார்க்கவும் சதாம் விரும்புவதில்லை. அவை அத்தனை துயரமானவை.

சதாம் உசேனின் தந்தை உசேன் அல்-மஜீத். அவரை சதாம் பார்த்ததே இல்லை. அவர் முகம் கறுப்பா? சிவப்பா? அவனுக்குத் தெரியாது. அவர் அன்பானவரா? கொடூரமானவரா? தெரியாது.

அவர் சதாம் பிறப்பதற்கு முன் அல்லது பிறந்த ஓரிரு மாதங்களுக்குப் பின் இறந்து விட்டதாக நெருங்கின உறவினர்கள் கூறுகிறார்கள். ஆனால், "சதாம் கைக்குழந்தையாக இருந்தபோது அவன் தந்தை மனைவியையும், குழந்தையையும் விட்டுவிட்டு ஓடிப் போய்விட்டார். அதன்பிறகு அவர் திரும்பி வரவே இல்லை!" என்கிறார்கள் உள்ளூர் வாசிகள்.

உண்மை எதுவாக இருப்பினும், கணவன் போய் விட்டதால் சதாமின் அம்மா சுபா தனிமரம் ஆனாள்.

சிறிது காலத்திற்குப் பின், ஏற்கனவே திருமணமான இப்ராகிம் ஹாசன் என்பவனைச் சந்தித்தாள். மனம் பறி கொடுத்தாள். காதல் மலர்ந்தது.

முஸ்லிம் மதச் சட்டப்படி, இப்ராகிம் நான்கு மனைவிகள் வரைவைத்துக் கொள்ளலாம். ஆனால், சுபா அதை ஏற்கத் தயாராக இல்லை, "ஒருத்தியோடதான் நீ குடும்பம் நடத்தணும். அது நான்னு முடிவு செஞ்சா, உன் பொண்டாட்டியை கை கழுவு. உன் பொண்டாட்டிதான் உனக்கு முக்கியம்னா என்னை ஆளைவிடு!" என்று கறாராகச் சொல்லிவிட்டாள்.

இப்ராகிமுக்கு சுபாவைத்தான் ரொம்பப் பிடித்தது. ஆதலால் தன் மனைவியை விவாகரத்து செய்தான். சுபாவை முறைப்படி திருமணம் செய்துகொண்டான்.

இப்ராகிம் படிக்காதவன். முரடன். சுபாவை மனைவியாக ஏற்றுக் கொண்ட போதிலும், அவளுக்கு உசேன் அல்-மஜீத் மூலம் பிறந்த குழந்தையான சதாமை ஏற்றுக் கொள்ள மனம் ஒப்பவில்லை. அவன் சதாமை வெறுத்தான். சதா திட்டித் தீர்த்தான். அடித்துத் துவைத்தான்.

(தொடர்ந்து வரும்)


படிப்பகம்

www.padippakam.com

# நிலவு 08

"முக்கியமான விஷயமா இருந்தா ஃப்ரீ ஏற்படுத்திக்க வேண்டியதுதான். எனிதிங் இம்பார்ட்டன்ட்...?"

"ஆமா....நாளைக்குக் காலையில பம்பாயிலிருந்து சைக்யாட்ரிஸ்ட் புன்னம் சந்தர் வர்றார். நிலாவுக்கு சில முக்கியமான சைக்கோ தெரபிகளை ஆரம்பிக்கிறதுக்கு முந்தி நிலாவைப் பற்றிய விபரங்கள் வேணும்... நிலாவோட பேரண்ட்ஸ் விபரங்கள் கொடுத்திருக்காங்க.. பட் அந்த விபரங்கள் போதாதுன்னு டாக்டர் புன்னம் சந்தர் ஃபீல் பண்றார். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் டெலிஃபோன்ல அவர்கிட்ட பேசினேன்."

நான் இடைமறித்துக் கேட்டேன்.

"எந்த மாதிரியான விபரங்களை டாக்டர் புன்னம் சந்தர் எதிர்பார்க்கிறார்...?"

"புன்னம் சந்தர் ஒரு வித்தியாசமான சைக்யாட்ரிஸ்ட். பேஷண்ட்டுக்கு 'ட்ரீட்மெண்ட்லை ஆரம்பிக்கிறதுக்கு முந்தி பேஷண்ட் பற்றிய சகல விதமான விபரங்களையும் கலெக்ட் பண்ணிக்குவார். பேஷண்டோட பேரண்டஸ் சொல்றதை மட்டும் வேதவாக்கா எடுத்துக்கிட்டு சைக்கோ தெரபிகளை ஆரம்பிச்சுட மாட்டார்."

"தென்...?"

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார் எழுதியுள்ள 'விறு விறு காதல்கதை.... உங்கள் இதயத்தில் இந்தக் கதையின் நாயகி 'நிலா'வுக்கும் இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!**

சைக்கியாட்ரிஸ்ட் புன்னம் சந்தர் வரப் போறார். ட்ரீட்மெண்டை ஆரம்பிக்கிறதுக்கு முந்தி நிலாவோட குணாதிசயங்களைப் பற்றி எதிர் வீடு, பக்கத்து வீடுகள்ல இருக்கிறவங்ககிட்ட கேட்டு தெரிஞ்சுக்க விருப்பப்படறார். சைக்யாட்ரிஸ்ட் புன்னம் சந்தரைப் பார்க்க நாளைக்குக் காலையில நீயும், நானும் போறோம்..."

"நான் எதுக்குங்க...?"

"சரியாப்போச்சு... ஒரு பொண்ணைப் பத்தி இன்னொரு பொண்ணுக்குத்தானே தெரியும்... நிலாவைப் பத்தி நீயும் டாக்டர்கிட்ட வந்து சொல்லு."

என் மனைவி நகர்ந்துவிட நான் கனம் ஏற்றுக்கொண்ட மனதோடு அறைக்குத் திரும்பி வந்து எழுத உட்கார்ந்தேன்.

பேனாவிலிருந்து எழுத்துக்கள் உதிர்வது ஆரம்பத்தில் சற்று சிரமமாக இருந்தாலும் போகப் போக வேகம் எடுத்தன.

"நான் உள்ளே வரலாமா..?"

அந்தக் காலை வேளையில் ஹிண்டு பேப்பரை சுடச்சுடப் புரட்டிக்கொண்டிருந்த சிவராஜன் தலையை உயர்த்தினார்.

தத்தாத்ரேயா வாசற்படியருகில் உதட்டில் ஒரு இன்ஸ்டன்ட் புன்னகையை ஒட்ட வைத்துக்கொண்டு நின்றிருந்தார்.

சிவராஜன் முகம் மாறி என்ன பதிலைச் சொல்வது என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே அவருக்குப் பின்னால் இருந்து குரல் வந்தது. பாக்யத்தின் குரல்.

"நீங்க உள்ளே வர்றதுக்கு பர்மிஷன் கேட்கணுமா என்ன... உள்ளே வாங்க..."

தத்தாத்ரேயா புன்னகையைப் பெரிதாக்கிக் கொண்டே உள்ளே வந்தார்.

"காலை நேரத்துல வந்து தொந்தரவு தர்றதா நினைக்காதீங்க... டெல்லியிலிருந்து மினிஸ்டர் சோமய்யா ஒருமணி நேரத்துக்கு ஒரு தடவை ஃபோன் பண்ணி என்னாச்சுன்னு கேட்டு துளைத்து எடுக்கிறார். மாப்பிள்ளை பையன் ப்ருதிவ் அதுக்கு மேலே...! என்னை

"நீங்க பேசாமே பேப்பரைப் படிங்க... இந்தக் கல்யாண விஷயத்துல நான் ஒரு முடிவு எடுத்துட்டேன். அதை மாத்த யாராலேயும் முடியாது..."

தத்தாத்ரேயா தன் கழுத்து டையை அவஸ்தையாய் இறுக்கிக் கொண்டார்.

"தப்பா நினைக்காதீங்கோ...! உங்க பொண்ணு இந்தக் கல்யாண ஏற்பாட்டுக்கு சம்மதம் கொடுத்துட்டாளா?"

"அவளை எதுக்காக கேட்கணும்...?



எட்டிப்பார்த்தாள்.

'காணோம்...'

'இவ்வளவு காலையில எந்திரிச்சு எங்கே போயிருப்பா?'

'வேற ஏதாவது அறையில படுத்து தூங்கிட்டிருப்பாளோ?' எல்லா அறைகளுக்கும் போய் எட்டிப் பார்த்துவிட்டு சற்றே பதைபதைத்த இருதயத்தோடு சிவராஜனிடம் வந்தாள்.

"என்னங்க...?"

"ம்..." முன்னாள் முதலமைச்சர் ஒருவரின் லஞ்ச லாவண்ய ஊழல் செய்தியில் மூழ்கிப்போயிருந்த சிவராஜன் நிமிர்ந்தார்.

"என்னங்க! நிலாவை அவ ரூம்ல காணோம்..."

"காணாம போறதுக்கு அவ என்ன சின்னக் குழந்தையா? மொட்டை மாடிக்குப் போய்ப்பாரு வாக் பண்ணிட்டிருப்பா..."

பாக்யம் மறுபடியும் மாடிப்படிகளில் ஏறிப்போய் மொட்டை மாடியைப் பார்த்துவிட்டு கலவரம் அதிகமாய் ஈஷிக் கொண்ட முகத்தோடு தடதடவென்ற சத்தத்தோடு இறங்கி வந்தாள்.

"என்னங்க... நிலா மொட்டை மாடியிலும் காணோம்!"

"அப்படீன்னா வெளியே போயிருக்கணும்..."

"அப்படி போறதாயிருந்தா... அவ சொல்லிட்டுதானே போயிருக்கணும்..?"

"ஒருவேளை சொல்ல மறந்துட்டாளோ என்னமோ?"

பாக்யம் இடுப்பில் தன் இரண்டு கைகளையும் வைத்துக்கொண்டு கணவனை நிஷ்டூரமாகப் பார்த்தாள்.

"என்னங்க... இப்படி பொறுப்பில்லாமே பதில் சொல்லிட்டிருக்கீங்க... மொதல்ல கையில இருக்கிற பேப்பரைக் கீழே போடுங்க!"

போட்டார்.

"உங்ககிட்டே ஏதாவது சொல்லிட்டுப் போனாளா?"

"இல்லையே... ஆறு மணியிலிருந்து இதே இடத்திலதான் உட்கார்ந்துட்டிருக்கேன்..."

"அவ சொல்லிக்காமே கொள்ளாமே... வெளியே போக மாட்டாளே...?"

"சரி என்ன அவசரமோ...?"

பாக்யம் கணவனுக்கு முன்னால் வந்து ரௌத்திரமாய் நின்றாள். ஏற்ற இறக்கக் குரலோடு கேட்டாள்.

"அவ எங்கே போயிருக்கான்னு

## முள்

"பேஷண்ட்டுக்கு பக்கத்து வீடு, எதிர் வீட்டில் இருக்கிறவர்களையும் மீட்பண்ணி விபரங்களை சேகரம் பண்ணிக்குவார். ஏன்னா பேரண்ஸோட பார்வைக்குப் புலப்படாத சில குணாதிசயங்கள் மத்தவங்க பார்வைக்குப் படும்ங்கிறது அவர் வாதம்."

"நல்ல கோணம்..."

"நிலாவுக்கு எதிர்வீட்ல இருக்கிறவர் ஒரு எழுத்தாளர்ன்னு டாக்டர் புன்னம் சந்தர்கிட்டே சொன்னேன்... அவர் ரொம்பவும் சந்தோஷப்பட்டார். மத்தவங்களைக் காட்டிலும் எழுத்தாளர்களுக்கு அப்சர்வேஷன் பவர் அதிகம். 'ரைட்டர் ஆர்.கே.வை அவசியம் நான் பார்க்கணும்'ன்னு சொல்லிட்டார். நாளைக்கு ஃபர்ஸ்ட் ஃப்ளைட்ல டாக்டர் வந்துடுவார். பத்து மணியிலிருந்து பதினொரு மணி வரைக்கும் உங்களை நீங்க ஃப்ரீ பண்ணிக்கிட்டு வரமுடியுமா...?"

"கண்டிப்பா வர்றேன் டாக்டர். நிலாவைச் சுற்றி போடப்பட்டிருக்கிற முள் வேலியைக் களையறதுல எனக்கும் ஒரு முக்கியமான பங்கு உண்டு."

நான் டாக்டர் மிருதுபாஷினியிடம் பேசிவிட்டு ரிஸீவரை அதன் இடத்துக்குக் கொடுத்த விநாடி, என் மனைவியின் குரல் பின் பக்கம் எழுந்தது.

"யார்ங்க...போன்ல..?"

"டாக்டர் மிருதுபாஷினி..."

"என்னவாம்...?"

"நிலாவுக்கு சைக்கோ தெரபி கொடுக்கிறதுக்காக நாளைக்கு பம்பாயிலிருந்து

என் மனைவி பெருமூச்செறிந்தாள். "ம்! நிலா மாதிரியான ஒரு நல்ல பொண்ணுக்கு இப்படி ஒரு கொடுமை நேர்ந்து இருக்க வேண்டாம். எவ்வளவு லட்சணமான பெண்? ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அவ பட்டுச்சேலை கட்டிக்கிட்டு கோயிலுக்கு பூக்கூடையோடு போகும்போது அந்த அம்பாளே நடந்து போற மாதிரி இருக்கும். கல்யாணத்தை பண்ணிக்கிட்டு புருஷனோடு சந்தோஷமா இருக்க வேண்டிய பொண்ணு! இப்படி இருட்டு ரூமுக்குப் போய் உட்கார்ந்துக்கிச்சேன்னு என் மனசு படறபாடு இருக்கே... அது சொல்லித்தீராதுங்க...! நல்லவங்களுக்கு இப்படியொரு கஷ்டம் வரும்போதுதான் கடவுள் ஒருவேளை கற்பனையோங்கிற பயம் எனக்கு வருதுங்க..."

நான் வெறுமையாய் புன்னகைத்தேன். "நிலாவுக்கு நேர்ந்துட்ட கொடுமையைப் பத்தியே பேசிப்பேசிக் கவலைப்படறதுல எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. இனிமே அவளை எப்படிக் குணப்படுத்தி பழைய நிலைமைக்குக் கொண்டு வந்து ஒரு புதுவாழ்க்கைக்கு தயார் படுத்தறதுங்கிறதுதான் முக்கியம். எந்த ஒரு பிரச்சனையும் உண்மையான அக்கறையோடு அணுகி செயல்பட்டா வெற்றி நிச்சயம்..."

"நிலா பழைய நிலைமைக்குத் திரும்புவாளா?"

"கண்டிப்பா..."

"எனக்கு அந்த நம்பிக்கை இல்லீங்க..."

"ஏன் அப்படிச் சொல்றே..?"

"என் மனசுக்கு தோணித்து, சொல்றேன்."

## நிலவு

ஹோட்டல்ல இருக்க விடாம துரத்தறான்..."

"உட்காருங்க..." பாக்யம் தன் சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்தி மரியாதையைக் காட்டினாள்.

சோபாவில் தத்தாத்ரேயா உட்கார்ந்து நிலா ஏதாவது ஒரு பக்கம் பார்வைக்குக் கிடைக்கிறாளா என்று பார்த்துக் கொண்டே பாக்யத்திடம் கேட்டார்.

"என்ன முடிவு பண்ணியிருக்கீங்க..?"

பாக்யம் சிரித்தாள்.

"எல்லாமே நல்ல முடிவுதான்... ஏற்கனவே பேசிய வரன் சம்பந்தப்பட்ட எல்லாக் கல்யாண ஏற்பாடுகளையும் நிறுத்தி வைச்சு முடிவு பண்ணிட்டோம். நீங்க டெல்லிக்குத் தகவல் கொடுத்து மாப்பிள்ளையோட அப்பாவை உடனே வரச்சொல்லுங்க... இன்னிக்குக் கூட நாள் நல்லாயிருக்கு. மாப்பிள்ளையும், பொண்ணும் பார்த்துக்கிட்டா தட்டை மாத்திக்கலாம்..."

கோபமாய் சிவராஜன் ஏதோ பேச முயல, அவரைக் கையமர்த்தினாள் பாக்யம்.

பெத்தவ நான் அவளுக்கு நல்லது தானே பண்ணப்போறேன்..!"

"எதுக்கும் பொண்ணுக்கிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டு... அதுக்கப்புறமா டெல்லியில் இருக்கிற மினிஸ்டர்க்குத் தகவல் தரலாம்."

பாக்யம் புன்னகையோடு தத்தாத்ரேயாவை ஏறிட்டாள். "நேத்து ராத்திரியே அவகிட்ட பேசி அவளோட மனசை மாத்திட்டேன். நீ யாரை கைகாட்றியோ அந்த மாப்பிள்ளையை கல்யாணம் பண்ணிக்கத் தயார்ன்னு சொல்லிட்டா. இல்லேன்னா இவ்வளவு தைரியமா உங்ககிட்டே பேசிட்டிருப்பேனா..?"

"இருந்தாலும் எனக்கு முன்னாடி உங்க பொண்ணைக் கூப்பிட்டுச் சொல்லச் சொல்லிடுங்க..."

"பொண்ணு தூங்கிட்டிருக்கா... நீங்க ஒரு நிமிஷம் வெய்ட் பண்ணுங்க... நான் போய்க் கூட்டிட்டு வந்துடறேன்..."

பாக்யம் 'S' போட்டுக்கொண்டு போன மாடிப்படிகளில் ஏறி வராந்தாவின் முன் பக்கம் இருந்த நிலாவின் அறைக்கு முன்பாய் வந்து நின்றாள்.

கதவைத் தட்டப் போனவள் அது வெறுமனே திறந்து காற்றுக்கு அசைந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும் கதவை மெல்லத் தள்ளினாள். அது சத்தம் எழுப்பாமல் உள்ளே போயிற்று.

நுழைந்தாள்.

கட்டிலில் நிலா இல்லை.

'பாத்ரூமுக்குள் இருப்பாளோ?'

லேசாய் திறந்திருந்த கதவைத் தள்ளினாள்.

"நிலா!" குரல் கொடுத்துக்கொண்டே

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்**

உங்களுக்குத் தெரியும்னு நினைக்கிறேன்..!"

"தெரியும்...!"

"சொல்லுங்க... எங்கே போயிருக்கா..?"

சிவராஜன் இப்போது புன்னகைத்தார்.

"அவ எங்கே போகணுமோ... அங்கே போயிருக்கா..."

"புரியும்படியா சொல்லுங்க..."

"இந்நேரம் நிலா மாப்பிள்ளை கிருஷ்ணகாந்த் வீட்ல தன் வருங்கால மாமா அத்தையோடு பேசிக்கிட்டு இருப்பா..."

பாக்யம் உறைந்த பார்வையோடு கணவனைப் பார்க்க, அவர் மறுபடியும் பேப்பரை எடுத்து விரித்து வைத்துக் கொண்டார்.

(அடுத்தவாரமும் நிலவு வரும்)

---

# கவியரசுவின் சுயசரிதை 10

**கவியரசு கண்ணதாசன் எழுதிய–அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

இரவு எல்லோரும் டால்மியாபுரம் சென்றார்கள்.

அங்கு போராட்டக்காரர்கள் தங்குவதற்காக என்று ஒரு பந்தல் போடப்பட்டிருந்தது.

எல்லோரும் அதில் தங்கினார்கள்.

எப்படியும் போராட்டத்தை நடத்துவதென்று பேச்சு எழுந்தது.

பலர் பலவிதமான கருத்துக்களைக் கூறினர்.

வெளியூரிலிருந்தும் பலபேர் போராட்டத்திற்கென்று வந்திருந்தனர்.

இத்தகைய திட்டங்களில் யாரும் கருணாநிதியை மிஞ்ச முடியாது.

மூன்று அணிகளுக்கும் தலைவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

முதல் அணியின் தலைவர் கருணாநிதி!

இரண்டாவது அணிக்கு இராம சுப்பையா!

மூன்றாவது அணிக்குத் தலைவராக அவன் நியமிக்கப்பட்டான்.

இரவு முழுக்க அவன் தூங்கவேயில்லை.

ஆசைக்கும் அச்சத்திற்குமிடையே அவன் ஊசலாடினான்.

பேர் கிடைக்குமென்று எண்ணிய போது பெருமிதம் தோன்றிற்று.

வந்தபின் என்ன செய்வது?

'வருவது வரட்டும்' என்று அவன் காத்திருந்தான்.

பொழுது புலர்ந்தது.

போராட்ட உறுப்பினர்கள் அனைவரும் தயாரானார்கள்.

முதல் அணி 'கியூ' வரிசையில் நிறுத்தப்பட்டது.

பந்தலிலிருந்து புகைவண்டி நிலையம் அரை மைல் தூரத்திலிருந்தது.

அதுவரை ஊர்வலமாகப் போக வேண்டும்.

ஊர்வலத்திற்குக் கருணாநிதி தலைமை தாங்கினார்.

முழக்கங்களோடு முதலணி இரயில் நிலையத்தை அடைந்தது.

ஏற்கனவே 'கல்லக்குடி' என்று அச்சடித்த போஸ்டர்கள் கொண்டுவரப்பட்டிருந்தன.

ஸ்டேஷனுக்கு வெளியிலே சுவரில் எழுதப்பட்டிருந்த 'டால்மியாபுரம்' என்ற பெயரின்மீது ஒரு போஸ்டரை கருணாநிதி ஒட்டினார்.

நூற்றுக்கணக்கான பொலிஸாரும், சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், சப் இன்ஸ்பெக்டர்களும் அங்கே குழுமியிருந்தனர்.

யாரையும் அவர்கள் கைது செய்யவில்லை.

பிறகு முதலணி ஸ்டேஷனுக்குள் நுழைந்தது.

எல்லோரும் 'பிளாட்பாரம்' டிக்கெட்டுகள் வாங்கிக்கொண்டார்கள்.

இரயில் வருவதற்கு பத்து நிமிடமே இருந்தது.

எல்லோரும் உள்ளே சென்று பிளாட்பாரம், பெயர்ப் பலகைகள் இரண்டிலும் 'கல்லக்குடி' போஸ்டரை ஒட்டினார்கள்.

அப்போது யாரும் கைது செய்யப்படவில்லை.

கட்சியின் தீர்மானம் என்னவோ போஸ்டர் ஒட்டுவதுதான்.

தான் கைது செய்யப்படுவதற்கு வேறு என்ன வழி என்று பார்த்தார்.

இரயில் வந்து நின்றது.

உடனடியாகத் தன்னோடு வந்தவர்களில் நாலுபேரை அழைத்துக்கொண்டு தண்டவாளத்தில் படுத்துவிட்டார்.

பொலிசார் திகைத்தனர். கட்சியின் தீர்மானத்தை அவர்களும் அறிந்திருந்தார்களாகையால் இதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.



சர்க்கிள் இன்ஸ்பெக்டர் முத்து வெங்கடராமன் என்பவர், படுத்திருந்தவர்கள் அருகிலே சென்று "உங்கள் தீர்மானத்தில் இந்தச் செயல் இல்லையே? எழுந்து சென்றுவிடுங்கள்!" என்று கேட்டுக்கொண்டார்!

கருணாநிதி மறுத்துவிட்டார்.

பிறகு அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

அதே வழியைப் பின்பற்றிய மற்றவர்களும் கைது செய்யப்பட்டார்கள்!

எல்லோரும் பொலிஸ் 'வேனி'ல் ஏற்றப்பட்டு, டால்மியாபுரம் பொலிஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

இது நடந்தது காலை 9-45 மணிக்கு.

அடுத்த இரயில் 11 மணிக்கு.

இரண்டாவது அணி புறப்பட்டாக வேண்டும்.

தோழர் இராம சுப்பையாவின் அணியில் சுமார் 30 பேர் பந்தலிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டார்கள்.

அவர்கள் ஸ்டேஷனை வந்தடைந்த போது ஏராளமான கூட்டம் கூடிவிட்டது.

வெளியூரிலிருந்து வந்த இரயில்கள் முழுவதிலும், கழக ஆதரவாளர்களும் வேடிக்கை பார்ப்போருமாக ஆயிரக்கணக்கானோர் வந்து சேர்ந்து விட்டார்கள்.

கருணாநிதி காட்டிய அதே வழியில் இரண்டாவது அணி முழுவதும் இரயிலுக்கு முன்னால் படுத்துவிட்டது.

அணியில் பதிவுசெய்து கொள்ளாத சிலபேரும் படுத்து விட்டார்கள்.

எல்லோரையும் பொலிஸார் கைது செய்தார்கள்.

எஞ்சியிருந்த பெருங்கூட்டத்தை ஸ்டேஷனுக்கு வெளியில் விரட்டி இரயிலைப் புறப்பட வைத்தார்கள்.

கைது செய்யப்பட்டோர் பொலிஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

மூன்றாவது அணி புறப்படுவதற்கு வகுத்திருந்த நேரம் பகல் 1.30 மணி.

அதுவரை அவன் எதுவும் சாப்பிடவில்லை.

சாப்பாடு செல்லவில்லை.

அவன் புறப்பட வேண்டிய நேரம் வந்ததும் தோழர் டி.கே. சீனிவாசன் இரண்டு மசால் வடையும் 'டீ'யும் வாங்கி வந்தார்.

அதையும் அரைகுறையாகச் சாப்பிட்டான்.

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# அவனுக்குத்தான் தெரியும்



களுவாஞ்சிக்குடி யோகன்
அவுஸ்திரேலியா

அகதி முகாமிலிருக்கும்போதே அவர்கள் சினேகிதர்களாகியிருந்தார்கள். இருவருக்கும் பலகுணங்கள் ஒத்துபோனதால் இறுக்கமான நட்பு உருவாகியிருந்தது. அதனால்தான் முகாமைவிட்டு வெளிவந்தும் கூட ஒரே வீடெடுத்துத் தங்கியிருந்தார்கள்.

முரளி யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவன். அவனுக்குச் சுவிஸ் நாட்டில் பலர் சொந்தக்காரர்களாக இருந்தார்கள். அதனால் அவனங்கு இலகுவாக வேலையும் பெற்றிருந்தான். அவ்னது செல்வாக்கை வைத்துத்தான் முரளி தனது நண்பன் நிர்மலனுக்கும் வேலை பெற்றுக் கொடுத்தான்.

நிர்மலன் கிழக்கிலே பிறந்து வளர்ந்தவன். அவனுக்குச் சொந்தங்கள்- உறவுகள் என்று சுவிஸிலே யாரும் கிடையாது. இதையிட்டு அவன் அதிகமாகக் கவலைப்படுவதுண்டு.

"டேய்! ஒருவகையில் பார்க்கப்போனால் எல்லோரும் ஒருவருக்கொருவர் உறவுக்காரர்கள்தான். சொந்தங்கள் இல்லையென்று நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். அது ஒருவகைக்கு நல்லமடா. எனக்கு சொந்தங்கள் இங்கு இருக்கிறதால நான் படும் அவஸ்தையை நீ பார்த்துக்கொண்டு தானே இருக்கிறாய்?" இப்படி நிர்மலனை முரளி அடிக்கடி தேற்றிக்கொள்வான். அவர்களின் நட்பு பிரதேச வேறுபாடுகளை மறந்து நாடு என்ற போர்வையில் பரந்திருந்தது.

இந்த முரளிக்கு ஊரில் திருமணப் பேச்சுக்கள் தொடங்கி பெண் கூடப் பார்த்தாயிற்று. கல்யாணப் பெண்ணை சுவிஸ் நாடு அனுப்புவதற்கு அவனது பெற்றோர் ஏற்பாடு பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

முரளியின் தூண்டுதலினால்தான் நிர்மலனுக்கும் அவன் பெற்றோர் பெண் தேடிக்கொண்டிருந்தார்கள். அவன்தான் நண்பனின் தாயாருக்குக் கடிதம் எழுதி ஏற்பாடுகளைச் செய்திருந்தான்.

அன்று ஒரு செவ்வாய்க்கிழமை. முரளி விடியோவில் 'டைட்டானிக்' பார்த்துக் கொண்டிருந்தான். படம் முடிய இரவு பன்னிரண்டாகிவிட்டது. படம் முடிந்ததும் அப்படியே போய் கட்டிலிலே தொப்பென்று விழுந்தான். அந்த நேரந்தான் ரெலிஃபோனும் சிணுங்கி அழைத்தது. தூக்கியபொழுது மறுமுனையில் நிர்மலன்தான் கதைத்தான்.

"மச்சான்! வேலைமுடிய கொஞ்ச நேரமாச்சுடா, அதனால் கடைசி இரயிலையும் விட்டுட்டன், காரை எடுத்துக்கொண்டு வாறியா?" கேட்டான்.

"அங்கேயே நில்லு வாறன்!" என்று முரளி காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். இத்தனைக்கும் அவன் அதிகாலை ஐந்து மணிக்கு வேலைக்காக எழும்பவேண்டியிருந்தது. இருந்தும் அவன் எதுவும் பேசாமல் நண்பனை ஏற்றுவதற்காகப் போய்க் கொண்டிருந்தான்.

சுவிஸில் 'விண்டர் சீசன்' ஆரம்பமாகியிருந்தது. தொடக்கத்தில் கட்டுக்கடங்காதளவு குளிர் தோன்றுவது இயற்கை. இம்முறை புகார் வேறு அதிகமாகக் கிளம்பிக் கொண்டிருந்தது. அந்தப் புகார் தெளிவாகப் பார்க்க முடியாதளவிற்கு தெருவையும் பாதைகளையும் மறைத்துவிட்டிருந்தது. கார் ஓட்டுவதற்கு மிகவும் சிரமப்பட்டான் முரளி.

இருந்தும் நிதானமாகவும், அவதானமாகவும் காரைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

எந்தப் பாதையால் போனாலும் நிர்மலன் பணிபுரியும் 'ஹொட்டலு'க்கு மூன்று கிலோமீட்டர் ஓடியே தீரவேண்டும். அன்று காரும் அடிக்கடி தகராறு பண்ணத் தொடங்கிவிட்டது. கொஞ்சம் ஓடும் திடீரென 'ஸ்ராட்' நின்றுவிடும். இப்படிக் காரும் காலநிலையோடு சேர்ந்தவாறு குழப்பியது.

அப்படியொரு தடவை நின்ற காரை 'ஸ்ராட்' எடுப்பதற்காக அவன் முனைந்து கொண்டிருந்தான். அந்த நேரந்தான் யாருமே எதிர்பார்க்காத அந்தச் சம்பவம் கண் இமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்தது.

பின்னால் வந்து கொண்டிருந்த கனரக வாகனமொன்று முரளியின் காருடன் முட்டி மோதி அவனின் காரை நொறுக்கிவிட்டு நின்றது.

முரளியின் உயிர்... அந்த இடத்திலேயே பிரிந்து போயிற்று.

நிர்மலன் துடித்துப்போனான். துவண்டு போனான். முரளிக்கு நெருங்கியவர்கள் பதறியடித்துக்கொண்டு வந்தார்கள். பலர் விபரம் கேட்டு அவனைத் திட்டிக் கொண்டிருந்தார்கள். எது எப்படியோ நண்பனின் நிரந்தர மறைவை அவனால் ஏற்றுக்கொள்ள முடியாமலிருந்தது.

அப்பொழுது திரும்பவும் தொலைபேசி அழைத்தது. நிர்மலன்தான் எடுத்தான். எடுக்கும்போதே அவனுக்குள் ஓர் எண்ணம். ஓர் பிரார்த்தனை. 'இறைவா! முரளி உயிருடன் இருக்கவேண்டும்' என்று வேண்டியபடிதான் தொலைபேசியைத் தூக்கினான்.

"நான் சங்கரி கதைக்கிறன்!" அவசரமாக வந்தது குரல்.

நிர்மலனுக்கு மேலும் துக்கம் தொண்டையை அடைத்தது.

முரளிக்குத் திருமணம் பேசி முடித்திருந்த சங்கரிதான் கதைத்தாள்.

"அவர் இல்லையோ? நான் நேற்றைக்கே 'பேங்கொக்கிற்கு' வந்திற்றன், இன்னும் இரண்டு கிழமையால் அங்கு ஏற்றுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நம்பரை முரளிக்குக் கொடுத்து முடிந்தால் எனக்கு எடுக்கச் சொல்லுங்கள். ஒன்றும் அவசரமில்லை." இலக்கங்களைச் சொல்லிவிட்டு, அவள் ஃபோனைத் துண்டித்தாள். செய்தியை கேட்டவனுக்கு துக்கத்தை அடக்கவே முடியவில்லை. மறுபடியும் விம்ம ஆரம்பித்துவிட்டான். அங்கு நின்ற முரளியின் உறவினர்கள் நிலைமையை உணர்ந்து விசாரித்தார்கள். தகவலைச் சொன்னான். அவர்களும் குழம்பியே போனார்கள். இந்தச் செய்தியை அவளுக்கு இப்பொழுது தெரியப்படுத்துவதில்லை என்று முடிவெடுத்தார்கள்.

முரளியின் இறுதிக் காரியங்கள் சுவிஸிலேயே நடந்து முடிந்தன. நண்பனின் துயரமான மறைவை மறக்க முனைந்து கொண்டிருந்தான் நிர்மலன். அந்த நேரம் ஒருநாள் சங்கரியின் ஏஜன்சிக்காரர்களிடமிருந்து அவனுக்கு ஃபோன் வந்தது.

அவளைச் சுவிசுக்கு கொண்டு வந்துவிட்டதாகவும், வந்து அழைத்துப் போகும்படியும் விலாசத்தைச் சொன்னார்கள்.

நிர்மலனை திரும்பவும் பதற்றம் தொற்றிக்கொண்டது. அவன் தாமதிக்காமல் முரளியின் அத்தான் குடும்பத்தாரிடம் போய் விஷயத்தைச் சொன்னான். அவர்களுக்கும் திடீரென என்ன செய்வதென்று புரியவில்லை. முரளியின் அத்தான், அக்கா, நிர்மலன் மூவருமாக கூடியிருந்து சில முடிவெடுத்தார்கள்.

முரளி உயிருடன் இல்லையென்ற உண்மை இன்று சங்கரிக்குச் சொல்வதில்லையென்றும், தாங்கள் அடுத்தடுத்த நாள் இதைச் சொல்லலாம், என்றும் முரளியின் அத்தான் கூறினார்.

இங்கிருக்கும் தங்களது உறவுக்காரப் பொடியன் ஒருவனை சங்கரிக்கு செய்து வைக்கப்போவதாக முரளியின் அக்கா கூறினார்.

இந்த முடிவுகளின் பிற்பாடு அவளை அழைத்து வந்து அகதிகள் முகாமில் விடுவதற்கு ஆயத்தமானார்கள்.

நிர்மலனுக்குச் சங்கரியைப் பார்ப்பதற்குத் தயக்கமாக இருந்தது. தான் இந்த அலுவல்களுக்கு வரவில்லையென்று மறுத்தான்.

"நீங்கள் முரளியின் றூம்மேற். நீங்களும் வரத்தான் வேணும். அப்பொழுதுதான் முரளி வேலைக்குப் போயிருப்பதாக அவளை நம்பவைக்கலாம்!" என்று அவனையும் அழைத்துக்கொண்டு போனார்கள்.

சங்கரி முகாமில் சேர்க்கப்பட்டிருந்தாள்.

முரளி இறந்து கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஓடிக்கொண்டிருந்தன. நிர்மலன் இப்பொழுதுதான் வழமைக்குத் திரும்ப முயன்று கொண்டிருந்தான்.

அன்று காலை வேலைக்கு எழுந்தபோது, அவனை ரெலிஃபோன் அழைத்தது. மறுமுனையிலிருந்து சங்கரி தழுதழுத்த குரலில் கதைத்தாள்.

"உங்களைப் பற்றி எனக்கு ஏற்கனவே முரளி நிறையச் சொல்லியிருக்கிறார். இப்போது அவர் இல்லாதபோது எனக்கு வேறு யாரும் துணையாக வேண்டாம். நீங்கள் விரும்பினால் என்னை வந்து வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போங்கோ!" என்று சொல்லிவிட்டு ஃபோனை வைத்தாள்.

"என்ன இது புதுப்பிரச்சனை?" என்று முணுமுணுத்தவனாய் தகவலை முரளியின் அத்தான் குடும்பத்திற்குத் தெரிவித்தான் நிர்மலன்.

"இப்ப இருக்கிற சூழ்நிலைக்கு உங்களால்தான் அவளை அரவணைத்து ஆறுதல் படுத்த முடியும். நீங்கள்தான் அவளுக்குப் பொருத்தமாகவும் இருப்பீர்கள். போய் அவளை அழைத்து வாருங்கள் நிர்மலன்!" என்று அவர்களும் பலமுறை சொன்னபடியிருந்தார்கள். நிர்மலனும் பலவிஷயங்களைச் சிந்தித்துக் கொண்டிருந்தான். அந்தச் சிந்தனையினூடே முகம் கழுவிக்கொண்டு முகாமிற்குப் போக ஆயத்தமானான் அவன். ●

---

# 'கார்' காலம்



கே.வி.

"என்னடா... சொன்னதைச் செய்து முடிச்சிட்டீங்களா?" என்று கேட்டார் முருகேசன்.

"கச்சிதமா முடிச்சுட்டோம் மொதலாளி," என்றார்கள் அவர்கள் ஒரே குரலில்.

"கார் நம்பர் பிளேட்?"

"மாத்திட்டோம் முதலாளி!"

நூறு ரூபாய் நோட்டுக்களை அவர்கள் மீது தூக்கிப்போட்டார் முதலாளி முருகேசன். அவர் மனம் கொக்கரித்தது.

'டேய் தனபால், என் கூட தொழில்லே போட்டி போட்டு என்னை அமுக்கிட பிளான் போட்டே, இல்லே...? இன்னும் கொஞ்ச நேரத்திலே கம்பி எண்ணப் போறே பாரு!'

முரகேசனின் தொழில் எதிரி தனபால். இருவரும் ஒருவரையொருவர் ஒழித்துக்கட்ட தருணம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதில் முந்திக் கொண்டு விட்டார் முருகேசன்.

தன் டொய்ட்டா போலவே தனபாலிடமும் அதே நிறத்தில் ஒரு கார் இருப்பது ஞாபகத்துக்கு வந்ததும் அவர் மூளை சுறுசுறுப்பானது.

தனபாலின் கார் நம்பரைத் தன் கார் நம்பருக்குப் பதிலாக பொருத்துவது; காரில் ஒட்டைக் கேனில் கள்ளச் சாராயம் கொண்டு போவது. பொலிஸிடம் மாட்டிக்கொள்வது போலச் செய்வது; தன் அடியாட்கள் தப்பி ஓடிவிடுவது.

'கள்ளச் சாராயக் கடத்தலுக்காக, தனபால் சிக்கி, கம்பி எண்ணுவான். இதில் கார் போய்விடும். போனால் போகட்டும். தொழில் எதிரி தொலைந்துவிட்டால் பத்து கார் வாங்கிக்கொள்ள்லாம்.'

"அப்பா!" என்று அழுதபடி வந்தாள் முருகேசனின் மகள் அனு.

"என்னம்மா?" என்று பதறியபடியே கேட்டார் முருகேசன்.

அனுவுக்குக் கல்யாணம் செய்து வைத்து ஆறு மாதம் தானாகிறது. அதற்குள் மகள் அழுதபடி வந்து நிற்கிறாள் என்றால்...? கணவன் வீட்டில் செய்யும் கொடுமையோ?

"அப்பா...! உங்க மருமகன்- அதுதான் என் புருஷன், தன் கார்லே கள்ளச்சாராயம் கடத்தினார்னு பொலிஸ் கைது பண்ணிக்கிட்டுப் போயிட்டாங்கப்பா!"

"உன் புருஷனுக்குக் கார் கிடையாதேம்மா?"

"இப்போதுதான் வாங்கினோம்!"

"புதுசா, பழசா?"

"பழசுதான்!"

"யார் கிட்டேயிருந்து வாங்கினீங்க?"

"யாரோ தனபாலாம்... நாங்க அந்த ஆளைப் பார்க்கக்கூட இல்லை. தரகரே எல்லாத்தையும் முடிச்சுக் கொடுத்துட்டாரு!" என்ற அனு, தன் அப்பா ஏன் பேயறைந்தவர் போலானார் என்பது தெரியாமல் விழித்தாள்.

---

# ஒட்டாத உறவுகள்

நெடுந்தீவு மகேஷ்

அந்தி நேரம். மக்கள் வெள்ளம் அந்த வீதியை நிறைத்து நெருக்கியது.

வடக்குத் திசையில் தொடர்ச்சியாகக் கேட்டுக்கொண்டிருந்த வேட்டுச் சத்தங்கள் அந்தக் சூழலின் பயங்கரத்தைப் பறைசாற்றின. மிகக் குறுகிய காலச் செய்திப்பரவல் தந்தி போல விரைந்து செயலாற்றியது.

யாழ் நகர மக்கள் இடம் பெயரத் தொடங்கிய அந்தச் சிலமணி நேரங்கள் அத்தனை விரைவாக, அளவற்ற துயர நெருக்கடிகள் படர, மக்கள் கூட்டம் சாரி சாரியாக, நாய்களும் பின் தொடர நடந்தும் ஓடியும் எங்கே போகிறது?

எங்கே போகலாம்? எதனையும் தீர்மானிக்கும் திராணியற்ற அவலப் பயணம். அணிந்திருந்த ஆடைகளுடன் அகப்பட்டதைக் கைகளிலும், தோள்களிலும் சுமந்தபடி எங்கே போகிறார்கள்?

எவருக்குமே தாம் தொடங்கிய பயணத்தின் திசைகள் எதுவும் தெரியவில்லை. உருண்டோடும் நீரோடையின் இழுப்பு விசைக்குள் ஈர்ப்புண்டு போகும் சருகுகளாய், அள்ளுண்டு போகும் மக்கள் வெள்ளம். குழந்தை குட்டிகளையும், கிழடு கட்டைகளையும் பெட்டி படுக்கைகளையும் தோள்மீதும் தலைமீதும் தாங்கியபடி நடக்கிறார்கள்- ஓடுகிறார்கள்.

தம்மைச் சூழ்ந்து வரும் பயங்கரமொன்றைக் கற்பனை செய்தபடி அதில் இருந்து விடுபட்டு உயிர்வாழும் வேகத்தோடு நடக்கிறார்கள்.

பாதைகள் நிரம்ப, ஓரங்களால் வடியும் மக்கள் வெள்ளம் வயல்களுக்குள் வீழ்ந்து வரப்புக் கடந்து ஓடுகிறது.

சேறும் சகதியுமாய் விழுந்தும் நனைந்தும் பலர், போகிறோம் என்ற நோக்கில், கால் போன போக்கிலே போய்க் கொண்டிருந்தனர்.

கனகம்மா தனது இரு குழந்தைகளையும் இந்தச் சன நெரிசலுக்கு ஈடு கொடுத்து எவ்வாறு கூட்டிச் செல்லலாம்?

செய்வதறியாது ஒருகணம் திகைத்து நின்றாள்.

'ஷெல்' வீழ்ந்து வெடிக்கும் சத்தம், பயரங்கரப் பேரொலியாக அவளைப் பயமுறுத்தியது. மூத்த மகன் ஜீவகனின் ஞாபகம் அவள் நினைவுகளில் எழுந்து நின்றது. இதயம் கனத்தது. கண்களில் நீர் பனித்தது.

கணவன் சுந்தரம் நாச்சிமார் கோவில் ஷெல் வீச்சுக்குள் சிக்குண்டு செத்துப் பல வருடங்களாகி விட்டன.

அவளது அப்பு, வாழைத் தோட்டத்து வேலைக்குப் போனவர் திரும்பி வராமலே குண்டடிபட்டுச் செத்துப் போனார் என்ற சேதியோடு காணாமற்போனார்.

பள்ளிக்கூடம் போன மூத்த மகன்- ஜீவகன் ஒருநாள் பதைபதைக்க ஓடிவந்தான். அவனது பள்ளிக்கூடத்தின் மேல் விழுந்த ஷெல்களினால் பல மாணவர்கள் இறந்து போயினர். பலர் பலத்த காயங்களுடன்....

அவன் திகைத்துப் போனான்.

பள்ளிக்கூடம் போக அவனுக்கு மனம் வரவில்லை.

வானத்தை உற்றுப் பார்த்தபடி வீட்டு வாசலிலேயே நின்றிருப்பான்: கனகம்மாவுக்கு இத்தனையும் பெரிய சுமைகளாக, ஜீவகனைப் பற்றிய கவலை அதிகரித்தது. அவனை எங்காவது ஒரு வெளிநாட்டுக்கு அனுப்பும் முயற்சியில் மும்முரமாய் ஈடுபட்டாள். அந்த முயற்சிக்காகத் தன்னிடமிருந்து நகை நட்டெல்லாம் விற்றுப் பணமாக்கிக் கனடாவுக்கு அனுப்பும் காரியம் சாத்தியமானபோது, ஜீவகன் காணாமற் போனான்.

சண்டையும் ஓயவில்லை. சமாதானமும் வருவதாய்க் காணவில்லை. ஒவ்வொரு குண்டொலிகளுக்கு இடையேயும் மேலெழும்



ஜீவகனின் நினைவு, அடிக்கடி கனடாவையும் அவளுக்கு ஞாபகப்படுத்தியது.

விமானங்களின் பேரொலி அவளது வீட்டுக்கு மேலால் விரைந்து கரைந்து போனது.

அவளோடு எஞ்சி நிற்கும் அந்த இரண்டு உயிர்களோடும், இங்கிருந்து எப்படியாவது தப்பித்துச் சென்றாக வேண்டும்.

கையில் அகப்பட்ட பொருள்களோடு தன் இரண்டு பிள்ளைகளையும் இணைத்து இழுத்தபடி சனத்திரளோடு கனகம்மாவும் சங்கமமானாள்.

காருண்யன் வயது பத்து. தன் தலைமீது சுமத்தப்பட்ட பழந்துணிகள் நிரம்பிய உர மூடையைச் சுமந்தபடி ஓடி நடந்தான்.

அவனது தங்கை கார்த்திகா, தாயின் தோள்மீது.

எல்லோருமே ஏதேதோ சுமைகளுடன்.

இருந்த வீடு, பிறந்த மண், எதுவுமே சொந்தமில்லையென்றாகக் கால்களின் ஊடாக நழுவும் தாய் மண்ணை நீங்கும் அந்தச் சமூகத்தின் ஏக்கங்களை எவருக்குச் சொல்வதென்று புரியாத அமைதி.

மௌனத்துள் சீரழியும் எண்ணங்களோடு...

இருளுக்குள் நுழையும் சனக்கூட்டம்.

வீதி ஓரத்திலிருந்து கூப்பிடு தொலைவில் கிராமத்துக்குள் அந்தக் கோவில்.

பிள்ளையார் கோவில்.

இருட்டினூடே ஒருவாறு கோவிலைத் தொட்டுவிட்ட கனகம்மாவும் பிள்ளைகளும் உட்கார இடமின்றி நின்று தொய்ந்தனர்.

மழை சிறு தூறலாக வெளியே நின்றவர்களைக் கோவிலுக்குள் கூட்டிச் சேர்த்தது. இறுக்கம். நெருக்கம் செய்வதறியா மன அழுத்தம். எல்லோருமே வாழ்வின் தத்துவம் உணர்ந்தவர் போல, அனைத்தையும் ஏற்றுக் கொண்டு அமைதியாயினர்.

தூக்கம் கண்களை மறைக்கக் காருண்யன் தூங்கிப் போயினான். அவனே தூக்கி வந்த உரமூடை அவனுக்கு அணையாகிக் கிடந்தது. கார்த்திகா அவனின் அருகிலே கண்மயங்க உறங்கிப்போனாள்.

கனகம்மாவுக்குத் தூக்கம் வரவில்லை.

துயரங்களைச் சுமந்தபடி விழித்திருந்தாள்.

யாருக்கு யாரிங்கே உதவுவார்? எல்லோருமே தத்தமது கனவுகளில் கண்ணீருக்கு அணைபோட்டுத் தூங்கியும் துவண்டும் கிடந்தனர்.

அந்த அமைதிக்குள் ஊமைக் குழலால் இசைக்கும் கொடிய விமானம் ஒன்றின் மென்மையான உளவு பார்க்கும் இராகம். ஜீவகனை அவளுக்கு மீண்டும் ஞாபகமூட்டியது. கனடா தேசத்தின் செல்வச் சிறப்புக்களும் அவளது நினைவுகளில் வந்து போயின.

அவள் அழுதாள்.

இரவு மழை பெய்தது. அதிலே நனைந்தும் தோய்ந்தும், நடுக்கமும் காய்ச்சலுமாய் பலரங்கே உறங்கிப் போயினர்.

உறுத்தலும், நெரிசலுமான இருக்கையும் படுக்கையும்- அன்றைய இரவு எப்படியோ கடந்து போனது.

தூங்கிப்போன கனகம்மா, விடிந்த பின்னர்தான் விழித்தெழுந்தாள். அந்தக் கோவிலை மறைத்திருந்த மக்கள் கூட்டத்தைக் காணவில்லை, விடியுமுன்னே எல்லோரும் புறப்பட்டுப்போய் விட்டார்கள்.

கனகம்மாவும் பிள்ளைகளும் தனித்தவர்களாகக் கோவில் மண்டபத்தில்.

ஆனால், காருண்யனின் அருகிலே ஒரு முதியவர் தனது கைப்பொல்லை அணைத்தபடி...

கனகம்மா விழித்துக்கொண்டாலும், குழந்தைகளின் தூக்கத்தைக் கலைக்க மனமின்றிக் காத்திருந்தாள்.

அங்கே தூங்கிக் கிடந்த அந்த முதியவர் மீது அவள் கண்கள் மேய்ந்தன. கொலையுண்டு போன அவளது அப்புவின் ஞாபகம். மீண்டும் அவளுக்குத் துணைவந்தது போன்றதோர் ஆறுதல்.

முதியவர் அங்கே தூங்கிக் கொண்டிருப்பதை ஆதரவோடு நோக்கியவள், குழந்தைகளை எழுப்பாமலே, கோவிற் கிணற்றின் உதவியோடு தனது காலைக்கடன் யாவற்றையும் முடித்தாள்.

பிள்ளையார் கோவிலை ஒருமுறை சுற்றி வந்து கும்பிட்டாள்.

அடுத்து என்ன செய்வதென்ற தீர்மானம் இன்னமும் அவளுக்கு முடிவாகவில்லை. அவளது சிந்தனைகள் குழம்பிக் குழம்பிக் தெளிவின்றித் தீய்ந்தன.

எங்கோ தொலைவில் கேட்டுக்கொண்டிருந்த ஷெல் சத்தங்களும் விமானங்களின் இரைச்சலும் அவளைத் தொடர்ந்தும் பயமுறுத்தின.

விழித்துக் கொண்ட கார்த்திகா சிணுங்கிக்கொண்டே காருண்யனின் தூக்கத்தையும் கலைத்தாள்.

முதியவர் இன்னமும் தூக்கம் கலையாமல்...

அவளின் தனிமைக்கு முதியவரின் இருப்பு ஓர் ஆறுதலாக இருந்தது.

அவரது தூக்கத்தைக் கலைக்க அவள் விரும்பவில்லை.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. கோவிற் கிணற்றில் பிள்ளைகளுக்கு முகம் கழுவினாள். தனது சேலைத்தலைப்பால் அவர்களைத் துடைத்தும் விட்டாள். மீண்டும் கோவிலைச் சுற்றி வந்து கும்பிட்டாள். பிள்ளைகளுக்கும் திருநீறு பூசினாள்.

அந்த முதியவர் இன்னமும் தூக்கத்தினின்று எழவில்லை. அவர் தனது தலைக்கு அணையாக வைத்திருந்த காகிதக் கட்டு- கடிதக்கட்டு, சற்று விலகி அருகில் கிடந்தது. அத்தனையும் வெளிநாட்டுக் கடிதங்கள். சிகப்பு நீல வர்ணக் கோடிட்ட விமானத் தபால் உறைகள். அத்தனையும் கனடா தேசத்திலிருந்தே வந்திருந்தன.

கனகம்மா ஜீவகனை நினைத்துக் கொண்டாள்.

முதியவரை விழிக்கச் செய்யும் முயற்சியில், "அப்பு, அப்பு!" என்று பலமுறை குரல் கொடுத்துப் பார்த்தாள். அப்பு விழிக்கவில்லை.

அவர் எவ்வித சலனமுமின்றி அசைவற்றுக் கிடந்தார்.

"அப்பு அப்பு!" என்று அழைத்தபடியே அப்புவின் மீது கையைப் பதித்தாள். அவரது உடல் குளிர்ந்தது.

கனகம்மா அதிர்ந்து போனாள்.

கனடாக் கடிதங்களின் மீது அவளது கண்கள் மொய்த்தன.

அத்தனையும் அவரது பிள்ளைகள் எழுதிய கடிதங்கள்.

"அப்பு சுகமாக இருங்கோ, நாங்கள் காசு அனுப்புகிறோம்." எல்லாக் கடிதங்களிலும் இதே வாசகங்கள்.

'காசு என்ன செய்யும்?' கனகம்மா விம்மி விம்மி அழுதாள்.

மகன் ஜீவகன் கனடாவுக்குப் போகவில்லை. இப்பொழுதும் அவன் எங்கள் மண்ணிற்தான்...! விமானங்களின் இரைச்சல் அருகில் கேட்டது. அதனை ஊடறுக்கும் வேட்டுச் சத்தங்கள். அவளது சிந்தனைகள் பலவாறாக, விம்மி வெடித்துப் பேரொலி எழ ஓலமிட்டு அழுதாள். ○

www.padippakam.com

# நெஞ்சே நீயுமா?

## இலக்கிய நயம்

திருவது ரசிகன்



ஒரு மெழுகு திரி
உருகுகிறது!
இரவுகளை பகலாக்கும்
காதல் சோகத்தில்
ஒரு மெழுகுதிரியாக
அவளே
உருகிக்கொண்டிருக்கிறாள்!

என்று, எப்போது
காதலிக்கக்
கற்றுக்கொண்டாளோ
அன்றிலிருந்தே
அவள் இரவுகள்
களவு போய்விட்டன!

இரவுக்கும், பகலுக்கும்
இடையே உள்ள
குணமாற்றம்கூட
அவளுக்கு மறந்துபோனது!

அவள்தான்
எப்போதுமே
விழித்திருக்கிறாளே!

காதலின்
துளிர் காலத்தில்
கண்களை மூடாமலேயே
கனவு கண்டாள்!

வானத்து நட்சத்திரங்களை
எண்ணும் முயற்சியில்
இரவுகளை
தேய்த்துக் கொண்டிருந்தாள்!

பகலெல்லாம்
அவன் நினைவுகளுடன்
உலா வந்தாள்!

காதலின்
மத்திய பருவத்தில்
அவர்கள்
ஒருவரை ஒருவர்
அறியும் முயற்சியில்
நெருங்கியிருந்தனர்!

அவன் கைகள்
தீண்டும் போதெல்லாம்
சிலிர்த்தாள்!

அவன் இதழ்கள்
தீண்டும் போதெல்லாம்
தீயானாள்!

இருகரம் விரித்து
வாவென அழைத்து
தனக்குள் அவனை
புதைத்தாள்!

"தீண்டும் போதெல்லாம்
என் காதலியே!
தேனுக்குள் விழுந்த
ஈயாகிறேன்!"
என்று குழைந்தான்!

வரம்பு தாண்டுவது
தெரிந்தும்,
தீண்டும் இன்பம்
தேவையாக இருந்தது!

இடை துவள
உடை நெகிழ

காமன் அங்கே
கடை விரித்தான்!

மோகம்
தடை உடைத்தது!
காமம்
படை எடுத்தது!

அச்சம்
விடை பெற்றது!
ஆர்வம்
மடை உடைத்தது!

பலாச்சுளையாய்
இதழ் கிடக்க
பசியோடு அவன்
புசித்தாற,
நிலா சொக்கி
கண்கள் செருகிற்று!

எங்கும் அவன்
கரம் ஊர்ந்தது!
பொங்கும் கடல்
உள்ளே கிளர்ந்தது!

புல்லாங்குழலாய்
தேகம்மாற-அதுவரை
கல்லாத கலையை
அவள் அறிந்தாள்!

முத்து முத்தாய்
வியர்வைத் துளி!
கொத்துக் கொத்தாய்
வியப்புக் குறி!

"சிப்பிக்குள்
முத்து எடுத்து,
சத்துள்ள
முத்தம் கொடுத்து,
அந்த முத்தையே
சொத்தாக்கியவன்
நானன்றோ!" என்று
கானம் பாடினான்!

மோகத்தில் வேகம்
தணிய,
மேகத்திற்குள் நிலாவாக
ஆடைக்குள்
தனை மறைத்தவள்
அச்சத்துக்குள்
விழுந்து போனாள்!

"அஞ்சாதே!
ஏழேழு ஜென்மத்திலும்
இனி நீதான்
என் துணைவி!"
என்றான்!

வாக்குறுதிக்குத்தான்
வயதே கிடையாதே!
எக்காலத்திலும்
இளமையோடு இருக்கும்!

"ஏழேழு ஜென்மம்
இருக்கிறதோ இல்லையோ,
இந்த ஜென்மத்தில்
வாழ்ந்தால் போதும்
வாக்கு மீறவேண்டாம்!"
என்றாள் பரிதாபமாக!

வாக்குறுதி கொடுப்பது
எத்தனையாவது முறை?
இது எத்தனையாவது
மலர்? என்பது
அவனுக்கே தெரியாது!

பால் குடித்த பூனை
அதன் பின்னர்
அடுப்பங்கரைக்கு
வரவே இல்லை!

வரம்பு மீறியதால்
வயிறு உப்பியது!

ஆழமறியாமல்
காலை விட்டபின்
அழுது என்ன பயன்?

பகலிரவு இல்லாமல்
அழுதழுதே அந்த
நிலா தேய்ந்தது!

"நெஞ்சே! நெஞ்சே!
என்னைக் கொஞ்சிய
மனிதர்
நஞ்சிலும் கொடியவர்
என்பதை நீயாகிலும்
கூறியிருக்க கூடாதா?"

நெஞ்சு
நிதானமாக உரைத்தது;
"காமம் என்ற கத்தி
உன் புத்தியை
குத்திக் கிழித்துவிட்டது!

மோகம் என்ற
கோடாரி
உன் சிந்தனையை
தகர்த்தெறிந்துவிட்டது!

ஆசை என்ற
யானை
உன் மனக்கோட்டையை
மோதி உடைத்துவிட்டது!

புத்தி மழுங்கியபின்
போதனை ஏறுமோ?"

"கண்ணுக்குள் நிறைந்தவர்
காதல் துரோகியாவார்
என்று யார் கண்டார்கள்?"
என்றாள் கண்ணீரோடு.

நெஞ்சு சிரித்தது.
"வீணாக திட்டாதே
தேனாக இனித்தவரை
வீணாக திட்டாதே!"
என்றது கேலியாக.

அவளுக்கு
கோபம் கிளர்ந்தது.
"ஏமாற்றியவரை
எத்தர் என்று கூறாமல்
சித்தர் என்றா கூறுவது?"

"வரம்பு கடந்ததில்
இருவருக்கும் பங்குண்டு!
கடைந்த சுகத்திலும்
இருவருக்கும் பங்கிருந்தது!
இது நீயாக
தேடிக்கொண்ட தோல்வி!

கையில் கிடைத்தது
காயா? கனியா? சொத்தையா?
என்று ஆராயமுன்னரே
நீ தாயாகிவிட்டாயே
பைத்தியக்காரி!"
நெஞ்சு நிஜம் உரைத்தது!

நெஞ்சும் தன்னை
குற்றம் கூறுகிறதே
என்று நினைத்தாள்
அவனை ஆதரித்து
வழக்காடுகிறதோ
என்று கொதித்தாள்.

காமத்தில் மட்டுமல்ல
கோபத்திலும்
புத்தி மழுங்கிப்போகும்!

"நெஞ்சை வசைபாடினாள்;
நம்மிடம் காதல் இல்லாத
கல்நெஞ்சரை அறியாமல்
அனுதாபம் கொள்ளும்
நெஞ்சே நீ வாழ்க!
உன் அறியாமை வாழ்க!"

இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே
–பரிந்துள்ளல்
பைதல் நோய் செய்தார்கண் இல்

அதிகாரம் 125, குறள்: 1243.

ஸ்போர்ட்ஸ்

# சஹாரா போட்டிகள்

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே சஹாரா கிண்ண கிரிக்கெட் போட்டிகள் வருகின்ற செப்டெம்பர் மாதம் 12ம் திகதி கனடா நாட்டின் டொரண்டோவில் தொடங்குகின்றன.

சஹாரா கிண்ணத்திற்காக நடைபெறும் இந்த ஒரு நாள் போட்டித் தொடர் 1996ம் ஆண்டு தொடங்கியது. இப்போட்டிகள் தொடர்ந்து 5 வருடங்களுக்கு நடத்துவதாக இரு நாடுகளும் ஒப்பந்தம் செய்துள்ளன.

1996ல் பாகிஸ்தான் 3-2 என்ற கணக்கில் தொடரை வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. 1997ல் இந்தியா 4-1 என்ற கணக்கில் தொடரை வென்று கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இப்போட்டிகளில் விளையாடும் வீரர்களை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்கு வெகுமதிகள் அளிக்கப்படவுள்ளன. இதற்காக இப்போட்டித் தொடரில் விளையாடும் வீரர்களுக்குப் புள்ளிகள் வழங்கப்படவுள்ளன. போட்டிகள் முடிவடைந்ததும் புள்ளிகளின் அடிப்படையில் முதல் 5 இடங்களைப் பிடிப்பவர்களுக்குப் பணப்பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

இதில் முதலிடம் பெறுபவருக்கு இந்திய மதிப்பில் 5 இலட்சம் ரூபாயும், இரண்டாமிடம் பிடிப்பவருக்கு ஒன்றரை இலட்சம் ரூபாயும் 3ம் இடம் பிடிப்பவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் 4ம் 5ம் இடங்களைப் பிடிப்பவர்களுக்கு முறையே தலா 50 ஆயிரம் 25 ஆயிரம் ரூபாய்கள் பரிசளிக்கப்படும்.

15ல் இருந்து 24 ஓட்டங்கள் எடுத்தால் ஒரு புள்ளியும் ஒரு விக்கெட் வீழ்த்தினால் மற்றும் கேட்ச் பிடித்தால், ரன்-அவுட் செய்தால் ஒவ்வொரு புள்ளிகளும் வழங்கப்படும். ஸ்டம்ப் அவுட் செய்யும் விக்கெட் கீப்பருக்கு 2 புள்ளிகள் வழங்கப்படும்.

இவற்றை விட சதம் ஹாட்ரிக் உலக சாதனை படைத்தாலும் சிறப்புப் புள்ளிகள் வழங்கப்படும்.

சஹாரா கிண்ணப் போட்டிகள் செப்டெம்பர் 12,13,16,19,20 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது.

## மாறும் விதிகள்

கிரிக்கெட் விளையாட்டு விதிகள் வருகின்ற செப்டெம்பர் மாதம் 1ம் திகதி முதல் மாற்றப்படவுள்ளன. சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் (ஐ.சி.சி.) பரிந்துரைப்படி மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடந்த ஜூலை மாதம் இங்கிலாந்தில் நடந்த நடுவர்கள் மாநாட்டில் இது தீர்மானிக்கப்பட்டதாக இந்தியாவின் ஐ.சி.சி. நடுவர் திரு.இராமசாமி என்பவர் கூறியுள்ளார்.

ஆட்ட நேரம் ஃபீல்டர்கள் ஆடுகளத்தை விட்டு வெளியே செல்வது, பந்து வீசும் முறை, ஃபீல்டர்கள் இடம் மாறுவது போன்றவை இதில் அடங்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் இந்தப் புதிய விதிமுறைகளின்படி நடுவர்களுக்குக் கூடுதல் அதிகாரம் கிடைக்கும் எனவும் திரு.இராமசாமி தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீநாத் தயார்

கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்கு முழுத் தகுதியுடன் இருப்பதாக இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜவகல் ஸ்ரீநாத் தெரிவித்துள்ளார்.



கடந்த வருடம் தோள்பட்டை வலியால் அவதிப்பட்ட ஸ்ரீநாத் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டு 8 மாதமாக ஓய்வில் இருந்தார். அதன்பின் அணியில் இடம்பிடித்தார்.

ஆனால் இந்த வருட ஆரம்பத்தில் தோள் வலி மீண்டும் தொடர மறுபடியும் சிகிச்சை மேற்கொண்டார். இப்போது நிவாரணமும் பெற்றுள்ளார்.

"தோள் வலியிலிருந்து முழுமையாய் குணமடைந்து விட்டேன். இந்திய அணியில் சேருவதற்குத் தயாராய் உள்ளேன். என்னால் 100 சதவீதம் சிறப்பாகப் பந்து வீச முடியும். ஆனாலும் பழைய நிலையை அடைய அதிகப் பயிற்சிகள் தேவைப்படுகின்றன." என்றும் ஸ்ரீநாத் கூறியுள்ளார்.

கடந்த மாதம் இங்கிலாந்தில் நடைபெற்ற டயானா நினைவு கிரிக்கெட் போட்டியில் ஸ்ரீநாத் கலந்து கொண்டார். "செப்டெம்பரில் நடைபெறவுள்ள போட்டிகளிலும் டாக்காவில் நடைபெறவுள்ள மினி உலகக் கோப்பைப் போட்டியிலும் பங்கேற்று சிறப்பாகப் பந்து வீசுவேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிந்தியா பதில்கள்

*** உலக அதிசயங்கள் ஏழாகவே இருப்பது ஏன்? புதியவற்றை சேர்க்காமல் இருப்பதன் காரணம் என்ன?**

கே.அருள் தேவி, கொழும்பு-13.

*எண் நம்பிக்கைதான் காரணம்! உலக அதிசயங்களை ஏழாக வரையறுத்தவர்கள் கிரேக்கர்கள். ஏழு அவர்களுக்குப் புனிதமான, இராசியான எண். அப்படியே அகில உலகமும் அதனை மாற்றமின்றி பின்பற்றி வருகிறது. அவ்வளவுதான்!*

*** சிந்தியா! சிறந்த தூக்கத்திற்குத் தக்க வழி கூறுங்கள்?**

ஜெ.கிறிஸ்டி, மன்னார்.

*தூங்கும் நேரத்திற்கு மூன்று மணிநேரம் முன்பாக இளம் சூடான நீரில் குளித்துப் பாருங்கள்!*

*** முகஸ்துதியால் நன்மையா? தீமையா?**

செல்வி. ஆர்.வனஜா, இரத்தினபுரி.

*செய்வோருக்கு இலாபம்! செய்யப்படுவோருக்கு நஷ்டம்! அறிவு மழுங்கிவிடும்! 'நான்' என்ற அகம்பாவம் தலைதூக்கும்! பொய்கள் இனிக்கும்!*

*ஓர் அரசனுக்கு திடீர் சந்தேகம். "உள்ளங்கையில் முடி முளைக்கவில்லையே, ஏன்?" என்று தன் சபையிலுள்ள புலவர்களிடம் கேட்டான்.*

*"அரசே! எப்போதும் நீங்கள் உங்கள் கையால் அள்ளிக் கொடுத்துக் கொண்டே இருப்பதால், உள்ளங்கையில் முடி முளைக்கவில்லை!" என்றனர்.*

*"அது சரி, உங்கள் உள்ளங்கையிலும் முடி முளைக்கவில்லையே- ஏன்?" என்றான் மன்னன்.*

*"உங்களிடம் எப்போதும் வாங்கி வாங்கியே எங்கள் உள்ளங்கைகளிலும் முடி முளைக்கவில்லை!"*

*"அடுத்த நாட்டு மன்னர்களது உள்ளங்கையிலும் முடி முளைக்கவில்லையே?"*

*"உங்களைப் போல் தங்களால் கொடுக்க முடியவில்லையே என்ற பொறாமையால் கைகளைப் பிசைந்து பிசைந்தே அவர்கள் கையில் முடி முளைக்கவில்லை!"*

*"சரி, குடி மக்களின் கைகளில் ஏன் முளைக்கவில்லை?" என்றான் மன்னன் சளைக்காமல்.*

*புலவர்களும் அசராமல் பதில் கூறினார்கள்:*

*"மன்னா! உங்கள் அருகில் இருந்து நாங்கள் பரிசு பெற்றுக் கொண்டே இருப்பது போல, அவர்களாலும் பெற முடியவில்லையே என்று எங்களைப் பார்த்து பொறாமைப்பட்டு கைகளைப் பிசைவதால் அவர்களுக்கும் முடி முளைக்கவில்லை!"*

*** 'உயிரே' படம் மணிரத்னத்தின் பெயரைக் காப்பாற்றுமா?**

க.ராம்குமார், மட்டக்களப்பு.

*காப்பாற்றினாலும் 'இருவர்' மூலம் வாங்கிய அடியில் இருந்து காப்பாற்ற இது போதாது!*

*** ஹலோ சிந்தியா! வயாக்ரா மாத்திரை எக்கச்சக்கமாக பிரபலமாகிவிட்டதே. அப்படி என்ன மகத்துவம்?**

எம்.எம்.சித்திக், கண்டி.

*எண்பதிலும் இளமை வரும்; ஆனால் ஆண்களுக்கு மட்டும்!*

*சமீபத்தில் பிரபலமாக அடிபடும் ஜோக் ஒன்று:*

*தனது எண்பத்தொரு வயதில் ஐம்பத்தொரு வயதான காதலியை கைப்பிடித்துள்ளவர் நெல்சன் மண்டேலா.*

*மண்டேலாவின் கல்யாணத்துக்குப் பரிசாக நாலு டப்பா வயாக்ரா மாத்திரை அனுப்பினாராம் பில் கிளின்ரன்.*

*அதற்கு மண்டேலா: "உங்களிடம் இருந்த மாத்திரைகளை அனுப்பி வைத்ததுக்கு மிக்க நன்றி! இனிமேல் அமெரிக்காவில் பெண்கள் நிம்மதியாக இருப்பார்கள்!" என்று பதில் அனுப்பினாராம். ஹலோ சித்திக், ஜோக் எப்படி?!*

*** செம்மணி புதைகுழி விவகாரத்தை இத்தனை நாள் ஏன் போட்டு இழுக்கிறார்கள்?**

சி.ரங்கன், யாழ்ப்பாணம்.

*அது இருப்பது தெற்கில் அல்லவே!*

*** மாங்குளம் எந்த நிலையில் உள்ளது?**

ஆர்.சண்முகம், மூதூர்.

*இன்னமும் பெயர் மாறாமல் அதே பெயரில் இருக்கிறது.*

*** 'பொறுத்தார் அரசாள்வார்' என்பர். தமிழ்க் கட்சிகள் பொறுப்பதும் அதற்குத் தானா?**

என்.தோமஸ், யாழ்ப்பாணம்.

*இவர்கள் பொறுப்பதால் அரசுதான் தன் விருப்பப்படி இவர்களை ஆள்கிறது!*

*** மருத்துவக் கட்டணங்கள் கிடு கிடுவென்று உயர்ந்து வருகின்றனவே? சில டாக்டர்கள் பிடுங்கிக் கொண்டுவிடுகிறார்களே?**

சி.சீதாதேவி, திருமலை.

*உயிரைப் பிடுங்காமல் விட்ட வரை பரவாயில்லை. உங்கள் ஆறுதலுக்காக ஒரு கதை:*

*டாக்டரிடம் வந்த திருடன் தயங்கிக் கொண்டே கூறினான்: "டாக்டர்! உங்கள் கட்டணத்தை கூடுமானவரை குறைத்துப் போடுங்கள். அதுதான் உங்களுக்கு நல்லது!"*

*டாக்டர் புரியாமல், "ஏன் அப்படிக் கூறுகிறாய்?" என்று கேட்டார்.*

*அவன் மெதுவாகக் கூறினான்: "ஏனென்றால் நீங்கள் சொல்லும் ஃபீஸை இன்று இரவு உங்கள் வீட்டில்தான் நான் எடுக்க வேண்டும்!"*

*** பெண்களுக்கு என்று புதிதாக முளைக்கும் அழகுச் சாதனங்களால் இருக்கும் அழகும் போகாதோ?**

செல்வி பதுறுனிஸா, புத்தளம்.

*போகும்தான்! நாமெல்லாம் மேல்நாட்டு அழகு சாதனங்களைத் தேடித் திரியும்போது, மேல்நாட்டுப் பெண்கள் மருதாணி தேடி அலைகிறார்களாம். பொப் புயல் மடோனா மருதாணி பூசிக் கொண்டு ஒரு பாடலுக்கு ஆடியதால், அமெரிக்க போன்ற நாடுகளில் மருதாணிக்கு அலாதி மரியாதையாம்! இந்தியப் பெண்களுக்கும் இலங்கைத் தமிழ்ப் பெண்களுக்கும் அதனால் ஒரு இலாபம். மருதாணி போட்டுவிடத் தெரிந்தவர்கள் அவர்கள்தானே! போட்டுவிட கூலிவாங்குகிறார்களாம்!*



'உயிரே' படத்தில் ஷாருக்கான்–மனிஷா கொய்ராலா

*** எம்.ரி.வியில் தமிழ் நிகழ்ச்சிகளது நேரத்தை குறைத்துவிட்டனரே?**

சியானா சலீம்,
பானந்துறை.

*அரசு தொலைக்காட்சி மட்டுமல்ல, தனியார் தொலைக்காட்சிகளும் நேரத்தைத் திருடுவது தமிழ் நிகழ்ச்சிகளில் இருந்துதானே!*

*** சிந்தியா! நெல்சன் மண்டேலா எண்பது வயதில் கல்யாணம் செய்தது முறைதானோ?**

பூ.ராகவன், கொழும்பு-09.

*திருமணம் என்பது அவரவர் சொந்த விவகாரம்! நீங்கள் ஏன் நொந்து போகிறீர்கள்?*



*** சினிமாவே இல்லையானால் எப்படி இருக்கும்?**

ஆ.ராஜேந்திரன்,
வவுனியா.

*உங்கள் கனவில் சினிமா நடிகைகள் தோன்றமாட்டார்கள்! கலர் கலராக அவர்களுடன் டுயட் பாடமாட்டீர்கள்!*

*** சிந்தியா! செல்வச் சந்நிதி உற்சவம் இந்த ஆண்டு எப்போது ஆரம்பமாகிறது?**

திருமதி இ.பார்வதியம்மாள்,
மட்டக்குளி.

*இம்மாதம் 22ம் திகதி! செப்டம்பர் பதினொராம் திகதி நிறைவுபெறும்!*


படிப்பகம்

# திருமறை தரும் பொது நெறி 22

# திருஉறைவிடம் அமைந்தது


ஆண்டவர் தன் மக்களின் நல்வாழ்வுக்காக அளித்த கட்டளைகளை அம்மக்களே மீறி நடக்கத் தலைப்பட்டனர். இதனால் ஆண்டவர் கடுங்கோபமுற்றார். மக்கள் அறியாமற் செய்யும் குற்றங்களை மன்னித்தருளுமாறு கர்த்தரிடம் மோசே இரந்து கேட்டார்.

கர்த்தரின் கட்டளைகளை உதாசீனம் செய்த மக்கள் குடித்து வெறித்துக் கும்மாளம் போடுவதை மலைமீதிருந்து இறங்கி வரும் போதே கண்ணுற்ற மோசேயால் பொங்கி வரும் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை.

மலையிலிருந்து இறங்கிவரும்போது, ஆண்டவரால் எழுதப்பட்ட பத்துக் கட்டளைகளையும் கொண்ட இரு கற்பலகைகளை மோசே எடுத்துக் கொண்டு வந்தார். அக்கட்டளைகளைப் பற்றிய பூரண விளக்கத்தையும் இஸ்ரயேல் மக்களிடம் அவர் விவரித்திருந்தார். ஆனால் மக்கள் அக்கட்டளைகளை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்பதனால் சினமடைந்த மோசே, கற்பலகைகள் இரண்டையும் கற்பாறையொன்றில் வீசி எறிந்து உடைத்தார். அப்பலகைகள் உடைந்தபோது எழுந்த பேரொலி அனைவரையும் திகிலடைய வைத்தது. அவர்கள்-மோசே தங்களை நோக்கி வருவதைக்கண்டு தரையில் விழுந்து வணங்கினர்.

'மோசே திரும்பி வரமாட்டார். தம்மையெல்லாம் ஏமாற்றிவிட்டு எங்கோ ஓடி மறைந்துவிட்டார்!' என்று கருதிய அவர்கள் முன்னால் அவரே தோன்றினார். பயமடைந்த மக்களைப் பரிதாபமாகப் பார்த்த மோசே, தனது சகோதரரான ஆரோனை அழைத்துக் கடிந்து கொண்டார். ஆரோன் தனது நிலையினை விளக்கினார்.

பொன்னாலான கன்றுக்குட்டியை உடைத்துத் தூளாக்கி, அதனை நீருடன் கரைத்துப் பருகுவதன் மூலம் பிராயச்சித்தம் தேடிக் கொள்ளுமாறு மோசே பணித்தார். அவ்வாறே அப்பணி நிறைவேற்றப்பட்டது. இருப்பினும் ஆண்டவராலேயே எழுதப்பட்ட கட்டளைகள் அடங்கிய பலகைகளைத் தானே- ஆத்திரமேலீட்டால் உடைத்தெறிந்து விட்டமைக்காக மிகவும் வருந்தினார். முழங்காலிலிருந்த வண்ணம், தன்னை மன்னித்தருளுமாறு ஆண்டவரை மோசே வேண்டிக்கொண்டார்.



## தண்டனை

ஆண்டவரின் கட்டளைகளை மீறுவதற்குக் காரணமானவர்கள் மீது கொள்ளை நோயினை ஆண்டவர் ஏவினார். இந்நோயினாலும், கொலை செய்யப்பட்டதன் மூலமும் மக்கள் சமுதாயத்தில் ஏறத்தாழ மூவாயிரம் பேர்வரை மரணமடைந்தனர்.

கர்த்தர் அளித்த கட்டளைகளை மீண்டும் எழுதிக் கொண்டு வருவதற்காக மோசே மலைமீது ஏறிச்சென்றார். புதிதாக உருவாக்கப்பட்ட இரு கற்பலகைகளில் பத்துக்கட்டளைகளும் பொறிக்கப்பட்டன. ஆண்டவர் மோசேயிடம் நேரடியாகவே பேசினார். ஆனால் கர்த்தருடைய முழுமையான திருச்சொருபத்தினை மோசேயால் காண முடியவில்லை. "என்து முகத்தையும் முழு உருவத்தையும் நேரடியாகக் காண்பவர் எவரும் உயிருடன் இருக்க முடியாது!" என்று கர்த்தர் ஏற்கனவே மோசேயிடம் கூறியிருந்தார்.

கட்டளைகளடங்கிய கற்பலகைகளை இரு கைகளிலும் அணைத்தபடி மோசே மலையிலிருந்து இறங்கி வந்தார். முன்பை விட மோசேயின் உருவம் ஒளி உமிழ்ந்த வண்ணம் காணப்பட்டது. தெய்வீகக்களை தென்பட்டது.

மோசேயிடம் ஏற்கனவே கர்த்தர் கூறியிருந்தபடி, கட்டளைக் கற்பலகைகளை வைப்பதற்கான உடன்படிக்கைப் பேழை தயாரிக்கப்பட்டிருந்தது. மக்கள் போகுமிடங்களுக்கெல்லாம் அப்பேழையைக் கொண்டு செல்வதற்கேற்றாற்போல் கைபிடிகளும், தண்டுகளும் பொருத்தப்பட்டிருந்தன.

ஆண்டவர்-அவ்வப்போது மக்களுக்கான வழி காட்டல்களையும் அறிவுரைகளையும் வழங்குவதற்காக சந்திப்புக் கூடாரம் ஒன்று அமைக்கப்பட்டது. இக்கூடாரம் எவ்வகையில்-எவரால் அமைக்கப்பட வேண்டும் என்பதற்கான விவரங்கள் அனைத்தையும் ஆண்டவரே எடுத்துக் கூறியிருந்தார். அதன்படியே, மக்கள் இடம்பெயர்ந்து செல்லும்போது தம்முடன் எடுத்துச் செல்வதற்கேற்ற சந்திப்புக் கூடாரம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

## சந்திப்புக் கூடாரம்

சந்திப்புக் கூடாரத்துக்கான விளக்குகள், தூபபீடம், எரிபலிபீடம், நீர்த்தொட்டி ஆகியவற்றை ஆண்டவர் கூறிய விதிமுறை பிசகாமல் செய்யப்பட்டன. மக்கள் அளித்த காணிக்கைப் பொருட்களைக் கொண்டே இவை உருவாக்கப்பட்டன. இக்கூடாரம் திருஉறைவிடம் என்றழைக்கப்பட்டது.

ஆரோனின் புதல்வர்களை குருக்களாகத் திருநிலைப்படுத்துமாறு கர்த்தர் மோசேயிடம் கூறியிருந்தார். அவர் அணிந்துகொள்வதற்கான ஆடை அணிகள் ஆண்டவரின் கட்டளையின்படி உருவாக்கப்பட்டன.

உடன்படிக்கைப் பேழையும் சந்திப்புக் கூடமும் எப்போதும் மாசுமறுவற்று மிகத் தூய்மையாகப் பேணப்பட்டன. பட்டுக்களாலான- அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய திரைச் சீலைகளால் கூடாரம் மூடப்பட்டது.

மோசே, ஆண்டவரின் ஆணைபெறுவதற்காக சந்திப்புக் கூடாரத்தின் முன்புற வாயிலிலுள்ள திரைகளை விலக்கிக் கொண்டு உள்ளே செல்வார். அவர் போகும்போது மக்கள் தங்கள் தங்கள் கூடாரங்களின் வாயிற்புறத்தே நின்று அவரைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர் உள்ளே சென்றதும் மேகத் தூண் ஒன்று வந்து கூடாரத்தின் வாயிலை மறைத்துக் கொள்ளும். தனது நண்பருடன் உரையாடுவது போலவே மோசே இறைவனுடன் பேசுவார். அவர் வெளிவந்ததும் மேகத் தூண் நகர்ந்து வழிவிடும்.

உடன்படிக்கைப் பேழையும் சந்திப்புக் கூடாரமான திருஉறைவிடத்தினுள்ளே வைக்கப்பட்டிருந்தது. மக்கள் பயபக்தியுடன் திருஉறைவிடத்தைத் தொழுதனர். திருஉறைவிடத்தை பகல் வேளைகளில் கரு மேகம் மூடியிருக்கும். இரவு வேளைகளில் ஒளி பொருந்திய நெருப்பு மேகம் மூடியிருக்கும்.

## வழிகாட்டும் மேகம்

இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு இரண்டாண்டுகள் கழிந்து இரண்டு மாதங்களும் இருபது நாளானது. அன்றைய தினத்தை மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். முதல் நாளன்றிரவு திருஉறை விடத்தை மூடியிருந்த நெருப்பு மேகம் மறைந்தது. அதிகாலையில் கரு மேகம் மூடியது. சற்று நேரத்தில் அந்தக் கூடாரத்தின் மேலிருந்து அம்மேகம் நகரலாயிற்று. அன்றுவரை சீனாய் பாலை நிலத்தில் விடுதி விட்டிருந்த மக்கள், ஏற்கனவே கடவுள்-மோசே மூலம் கூறியிருந்தபடி தங்கள் பயணத்தைத் தொடங்கினர். திருஉறைவிடம், உடன்படிக்கைப் பேழை மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட புனிதப் பொருட்கள் அனைத்தும்- அப்பணிகளுக்காக நியமிக்கப்பட்டோரால் எடுத்துச் செல்லப்பட்டன.

திருஉறைவிடத்தின் மேற்புறமாக, மிதந்த வண்ணம் மக்களுக்கு வழிகாட்டிக் கொண்டு நகர்ந்து கொண்டிருந்த மேகம்- நகராமல் நிற்கும் இடத்தில் மக்கள் நின்று விடுவர். அங்கேயே விடுதி விட்டுத் தங்குவார்கள். மேகம் நகரத் தொடங்கியதும் மக்களும் நகர ஆரம்பிப்பார்கள்.

இஸ்ரயேல் மக்கள் முன்பு தங்களுக்கு உண்ண உணவில்லையே என்று ஏங்கியபோது, தினசரி அவர்களுக்கு வானிலிருந்து பனி பெயர்ந்து விழுவது போன்று பொழிந்து மன்னா என்ற அப்பத்தை ஆண்டவர் அளித்தார். இரண்டு வருடங்களுக்கு மேலாக ஒரே வகையான மன்னாவை உண்டு வந்தமையினால் மக்களுக்கு அவ்வுணவு திகட்டத் தொடங்கி விட்டது. "எகிப்தில் இருந்திருந்தால் இறைச்சியும், பாலும் அருந்தும் வாய்ப்புக் கிடைத்திருக்குமே!" என்று அதிருப்தியாளர்கள் புலம்ப ஆரம்பித்தனர். கர்த்தரையும் தூஷித்ததுடன் மோசேயையும் சுடு சொற்களால் வதைத்தனர்.

பரம சாதுவாகவும் சாந்த சொருபியாகவுமிருந்த மோசே, இவ்வார்த்தைகளால் மனமொடிந்து போனார்.

"இத்தகைய நன்றி கெட்ட மாந்தருக்கு நன்மை செய்ய ஆண்டவரே! நீர் இணங்கியது ஏன்? இத்தகைய சீர்கெட்ட மக்களை அழைத்துச் செல்லுமாறு என்னை ஏன் தேர்ந்தெடுத்தீர்?" என்று ஆண்டவரிடம் மனமுருக வேண்டினார்.

மோசேயின் வேண்டுதலைக் கேட்ட கர்த்தர், "கலக்கமடைய வேண்டாம் மோசே! தொடர்ந்து உமை வருத்தும் கடு நெஞ்சக்காரர்களுக்கு உரிய தண்டனை தருவேன். அவர்களுக்கு இறைச்சியைத் தருவதற்கு ஏற்பாடு செய்கிறேன். அத்துடன் மக்களின் மனம் தளப்பமடையாமலிருக்கவும் வழிகாட்டுகிறேன்!" என்று கூறினார்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 20 விடை:** சீனாய்ப் பாலை நிலத்தில் உள்ளது.

**பரிசு பெறுவோர்:**

1. **ஆர். அன்பழகன்,** இல-27, ஜெயவிக்ரம மாவத்தை, அப்புத்தளை.
2. **கிளேட்டஸ் பர்ணாந்து,** 104/43 சங்கமித்த மாவத்தை, கொழும்பு-13.
3. **ஆர். ஜோதிலக்ஷ்மி,** ப/ சார்ணியா த.ம.வி., கந்தேகெதற.
4. **இ. சிவனேஸ்வரி,** தச்சநாதன் குளம், வவுனியா.
5. **த. தங்கமலர்,** 56 தண்ணீர் கிணற்றடி வீதி, முகத்துவாரம், மட்டக்களப்பு.

**திருமறை 22 வினா:-** கர்த்தரின் திருச்சொருபத்தை நேரடியாகக் காண்பவர்களுக்கு என்ன நேரும்?

ஆகஸ்ட் 22க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 22—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# புதுப்புது அர்த்தங்கள்

த.கட்சிகள்:
இந்தியா தலையிடனும்
அரோகரா!
எங்களுக்கும் காலம் வரும்
அரோகரா!
நீங்கள் தான் மனம் வைக்கணும்
அரோகரா!
எங்கள் கட்சிக்கே
சான்ஸ் தரணும் அரோகரா!
ஐ.பி.கே.எஃப் காலம்
மீண்டும் வரணும் அரோகரா!
நாங்கள் அள்ளுவதை
அள்ளவேண்டும் அரோகரா!

த.கட்சிகள்:
கையசைத்து காட்டுகிறார்
அரோகரகரா!
கை கொடுப்பேன் என்றுரைத்தார்
அரோகரகரா!
பச்சைக்கொடி எனவே
கையசைத்தார் அரோகரகரா!
வா.பேயி: (தலையில் அடித்துக் கொள்கிறார்)
த.கட்சிகள்:
நாங்கள்தான் தலைவர்
என்று சான்று தந்தாரே!
வாஜ்பேயி வாழ்த்துரைத்தாரே!



வாஜ்பேயி: (சைகையால் என்ன விஷயம்? என்று கேட்கிறார்.)
தமிழ்க் கட்சிகள்:
மத்தியஸ்தம் நீங்கள்
வகிக்கணும்!
பொக்கிசத்தை எமக்கு
தரணும் அரோகரா!
உங்களையே நம்பி
வந்தோம் அரோகரா!
உங்கள் காலடியில்
சரண் புகுந்தோம் அரோகரா!
வாஜ்பேயி: (புன்னகைக்கிறார்)
த.கட்சிகள்:
இந்தப் புன்னகை
ஒன்றே போதுமே!
இதில் பற்பல அர்த்தம் தேறுமே!
வா.பேயி: கையை தூக்கி அமைதிப்படுத்த முயற்சிக்கிறார். அப்போது தற்செயலாக அவர் கைவிரல்கள் இரண்டு மடங்கிக் கொள்கின்றன)
த.கட்சிகள்:
மூன்று விரல் காட்டிவிட்டார்
அரோகரகரா!
மூன்று அர்த்தம் கண்டுகொண்டோம்
அரோகரகரா!
மூன்று மாதம் பொறுங்கள்
என்று கூறிவிட்டார்
அரோகரா!
வா.பேயி: (இல்லையில்லை என்று கையை ஆட்டுகிறார்)
அரோகரா! அரகரோகரா!
ஆயிரம் கோயிலில்
மணியடிப்போம் அரகரோகரா!
வா.பேயி: (தாங்க முடியவில்லை என தன் நெஞ்சில் கைவைத்துக் காட்டுகிறார்)
த.கட்சிகள்:
சொன்னதையெல்லாம்
வாங்கிக் கொண்டார் நெஞ்சிலே!
வாயை மூடி வாங்கிக்கொண்டார்
தன் செவியாலே!
மௌன விரதம் அனுஷ்டித்தார்
எமக்காக!
மனதில் எல்லாம்
வாங்கிக் கொண்டார் எமக்காக!
வா.பேயி: (வேறு வழியில்லாமல் கண்களை இறுகமூடி குறட்டை விடுகிறார்)
த.கட்சிகள்:
சிந்திக்கிறார் சிந்திக்கிறார்
எமக்காக!
ஐயா பேரில் அபிஷேகம்
செய்வோம் எமக்காக!
அரோகரா! அரோகரா
அரகரோகரா!
எங்களுக்கும் காலம் வரும்
இந்தியா வந்தால்
வாழ்வு வரும்!
மாகாணசபை ஆட்சிவரும்
மாளிகையில் வாழ்வு வரும்
பெட்டிகளில் கோடி வரும்
அரகரரோகரா! அரோகரா!

# பேச்சாளர் பேரம்பலம்

நாம் இந்தியப் பிரதமரிடம் மத்தியஸ்தம் கேட்கவில்லை. உதவிதான் கேட்டோம் என்று அருமை அண்ணர் பம்மந்தர் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை! எதற்காக உதவி கேட்டோம், யாருக்காக உதவி கேட்டோம் என்ற இரகசியங்களை பகிரங்கப்படுத்தி தம்பிமாரின் கோபத்தை கிளறும் அளவுக்கு பக்குவமில்லாதவர்கள் அல்ல நாங்கள் என்பதை. எங்களைப் பற்றிய உண்மைகளை அம்பலமாக்க முற்படும் தீய சக்திகளுக்கு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



# பொதுவினா விடை



ஒரே வாக்கியத்தில் விடையளிக்கவும்.

**கேள்வி:** அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவை யாருக்கு எதிரானவை என்று விளக்குக?
**பதில்:** விடுதலைப் புலிகள் தவிர்ந்த அனைவருக்கும் எதிரானவை!
**கேள்வி:** மாகாணசபைத் தேர்தல் என்றால் என்ன?
**பதில்:** ஆட்சியில் உள்ள கட்சி விரும்பினால் மட்டும் நடத்தப்படும் ஒன்று.
**கேள்வி:** மாகாணசபைத் தேர்தல் எப்போது நடத்தப்படும்?
**பதில்:** ஆட்சியில் உள்ள கட்சிக்கு வெற்றி நிச்சயம் என்று எப்போது தெரிகிறதோ அப்போது நடத்தப்படும்.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்



அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11 செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


## வரிரகம்



ஆபிரிக்காவில் கொங்கோ நதியின் இரு புறத்திலும் உள்ள அடர்ந்த காடுகளில் காணப்படும் மானைப் போன்ற இப் பிராணி 'ஒகாபி' என்றழைக்கப்படுகிறது.

இது ஒட்டகச்சிவிங்கி இனத்தைச் சேர்ந்தது; எனினும் இதன் கழுத்து சிவிங்கியைப் போல் நீளமானதல்ல.

ஒகாபியின் உயரம் ஏறத்தாழ ஒன்றரை மீட்டராகும். பழுப்பு வர்ணமுடைய இப் பிராணியின் முகத்தின் இரு பகுதிகளும் வெள்ளையாக இருக்கும். பின்கால்களின் மேற்புறமும் முன்னங்கால்களிலும் வெண்மையும் பழுப்பும் கொண்ட வரிகள் காணப்படும்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11 செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


## இசையினம்



அமெரிக்காவின் வடபகுதியில் காணப்படும் அடர்த்தி அதிகமில்லாத காடுகளில் வாழும் 'காடினல்' என்றழைக்கப்படும் குருவி இவை. ஆண்குருவி சிவப்பு இறகுகளைக் கொண்டது. பெண் குருவி பழுப்பு நிறமுடையது. இதனைச் செங்குருவி என்றும் அழைக்கின்றனர்.

அதிக உயரமில்லாத மரங்களில் தரையிலிருந்து சுமார் இரண்டுமீட்டர் உயரத்திலேயே பெண் குருவி கூடுகட்டும். ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் மாதம்வரை நான்கு தடவைகள் முட்டையிடும்.

ஒவ்வொரு தடவையும் 3 முதல் 4 முட்டைகளை இடும். பெண்குருவி 12 அல்லது 13 நாட்கள் மட்டும் அடைகாக்கும். அதுவரைக்கும் தன் இணைக்குரிய உணவினை ஆண்குருவி தேடிக்கொண்டு வந்து ஊட்டும். குஞ்சு பொரித்ததும் இரு பறவைகளும் குஞ்சுகளுக்கு 10 நாட்கள் வரை உணவு தேடி ஊட்டும்.

அதன்பின்னர் குஞ்சுகளை ஆண் குருவி பாதுகாக்க பெண் குருவி புதிய கூட்டினைக் கட்டுவதுடன் ஆண் குருவிக்கும் குஞ்சுகளுக்கும் இரை தேடி வரும். 10 நாட்களின் பின்னர் ஆண் குருவியின் துணையுடன் குஞ்சுகள்- மேலும் 10 நாட்களுக்கு உணவு தேடும்.


குஞ்சுகளாக இருக்கும்போது பூச்சி-புழுக்களை உணவாகக் கொள்ளும். 'காடினல்' பறவைகள், வளர வளர பழங்கள், தானியங்கள் மரப்பட்டைகளை உட்கொள்ளத் தொடங்கும். அயலிலுள்ள ஊர்களுக்குச் சென்று வீடுகளில் வீசியெறியப்படும் உணவுப் பண்டங்களையும் உண்ணும்.

இப்பறவைகள் மிக இனிமையாகப் பாட்டிசைக்கும் பழக்கமுடையவை. இவற்றின் இசையைக் கேட்பதற்காகவும் அழகான இறகுகளைச் சேர்த்து தங்கள் தொப்பிகளில் அலங்காரமாக வைப்பதற்காகவும் இவை பொறி வைத்துப் பிடிக்கப்படுகின்றன. இதனால் 'காடினல்' பறவை இனம் அழிக்கப்படுவதால், இவற்றைப் பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

## ஜிக்குபுக்கு

இக் காலத்தில் விதம் விதமான ரயில்கள் கண்டு பிடிக்கப்பட்டு அதிவேகத்தில் பயணிக்கின்றன. படத்தில் இருப்பது புராதன ரயில். புகைவண்டி அல்லது கரிக் கோச்சி என்றும் இதனை அழைக்கலாம். 1869ம் ஆண்டில் அமெரிக்காவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட புகை வண்டியின் வர்ணத் தோற்றமே இது.

இந்தக் கால ரயில்கள் என்னதான் நவீனமாக இருந்தாலும் இந்த கம்பீரம் வருமா சொல்லுங்கள்.



## நிற மயக்கம்


நீரிலும் நிலத்திலும் வாழக் கூடிய பல்லி இனத்தைச் சேர்ந்த இப்பிராணி 'நிவெற்' என்றழைக்கப்படுகிறது. பல்லிபோல் தென்பட்டாலும் ஆய்வாளர்கள் இதனை தவளை, தேரை இனங்களுடன் இணைத்தே கணிக்கின்றனர்.

தவளை, தேரை இனங்களுக்கு ஆரம்பத்தில் வால் இருக்கும். நாளா வட்டத்தில் வால் அற்றுப்போய்விடும். ஆனால் 'நிவெற்'றின் வால் நீளமாக வளர்ந்து கொண்டே போகும். சில பிராணிகளின் வால் உடலைவிட அதிகமாக நீண்டு தட்டையாக இருக்கும்.

வால் நீளமாக இருப்பதனால் 'நிவெற்' நீரில், வேகமாக நீந்திச் செல்லும். நீந்தும்போது உடலைத்தன் இருபக்கங்களிலும் நெளித்துக்கொள்ளும். ஆண் 'நிவெற்' இணை சேரும் காலத்தில் பெண் துணையைக் கவர்வதற்காக தனது நிறத்தை செம்மஞ்சள் நிறத்திலிருந்து சிவப்பாக்கிக் கொள்ளும். முதுகுப்புறத்தில் கருமையுடன் கூடிய புள்ளிகளும் தோன்றும். (கலர் காட்டுவது என்பது இதுதானாக்கும்)



## வகை பல



கோழிகளில் பல இனங்கள் காணப்படுகின்றன. தேசத்துக்குத் தேசம் கோழிகளின் இனம் வித்தியாசப்படுகின்றன. ஒவ்வொரு பிரதேசத்திலும் காணப்படும் கோழிகள் ஒவ்வொரு பேர் சொல்லி அழைக்கப்படுகின்றன.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் காணப்படும் இக் கோழிக்கு தாடிபோன்ற இறகுகள் காணப்படுகின்றன. கால்களிலும் அடர்த்தியான இறகுகள் உள்ளன.

இன்று கோழிகள் வீட்டு வளர்ப்புக்கும் பண்ணை வளர்ப்புக்கும் உட்படுத்தப்பட்டபோதும் வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் இவை காடுகளில்தான் வாசம் செய்து வந்தன.

பண்டைய மனிதர்கள் தங்கள் ஆடை அணிகளை அழகுபடுத்த கோழிகளின் இறகுகளைப் பயன்படுத்தினர். நாளாவட்டத்தில் அதன் இறைச்சி, முட்டை ஆகியவை உருசிமிக்க ஆகாரமாயின. இதன்பின்னரே கோழிகளை வளர்க்க ஆரம்பித்தனர்.

## சாதனை

இலங்கையின் 50வது சுதந்திரப் பொன்விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட சுதந்திரக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் இந்தியா வென்றது. சாதனையும் படைத்தது.

இப்போட்டியில் இந்திய துவக்க ஆட்டக்காரர்களான சச்சின் டெண்டுல்கரும், சௌரவ் கங்குலியும் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக 252 ஓட்டங்களை எடுத்து உலக சாதனை படைத்தனர்.

இதற்குமுன் அவுஸ்திரேலியாவின் டேவிட் பூன்-ஜெஃப் மார்ஷ் ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 212 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்தச் சாதனையை கடந்த வருடம் கென்யா அணி பங்களாதேஷ் அணிக்கெதிராக 225 ஓட்டங்கள் எடுத்து முறியடித்தது.

ஒருநாள் போட்டியில் இந்திய அணி முதலாவது விக்கெட் இணைப்பாட்ட சாதனையின் நாயகர்களான டெண்டுல்கரும், கங்குலியும் தலா 128, 109 ஓட்டங்களைக் குவித்தனர். இந்த ஜோடியை 43 ஓவர் வரை இலங்கைப் பந்து வீச்சாளர்களால் பிரிக்க முடியவில்லை.

உலகில் ஒரு நாள் போட்டிகளில் சிறந்த துவக்க ஜோடி எனக் கருதப்படுவது மேற்கிந்தியத் தீவுகளின் டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ்-கோர்டன் கிறீனிட்ஜ் ஜோடிதான். இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக இணைந்து 102 போட்டிகளில் 5150 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.


டெண்டுல்கரும் கங்குலியும் துவக்க ஆட்டக்காரர்களாக இது வரை சுமார் 40 போட்டிகளில் 2000 ஓட்டங்களைத் தாண்டிவிட்டனர்.



## 1 வது பிறந்தநாள் வாழ்த்து

செல்வன் கிஷான்

16 07 1998



யாழ்ப்பாணம்-கல்வியங்காட்டைச் சேர்ந்த ஈஸ்வரநாதன்-பிரதீபா தம்பதியினரின் அருந்தவப் புதல்வன் செல்வன் **கிஷான்** தனது முதலாவது பிறந்தநாளை ரொறன்ரோ கனடாவில் வெகு விமரிசையாக 18.07.1998 அன்று கொண்டாடினார்.

செல்வன் கிஷானை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, ஐயா, அம்மம்மா, அம்மப்பா, ரதிமாமி-மாமா, ஜெனாதன், அபிராமி, பெரியப்பா, பெரியம்மா, பாபு, அருண்யா, ரவிமாமா, தாஸ்மாமா, தர்ஷினிமாமி, கிஷோமாமா, சாந்தி சித்தி, மற்றும் பரடைஸ் நண்பர்கள், உற்றார் உறவினர்கள் எல்லாம் வல்ல நல்லூர்க் கந்தன் ஆசியுடன் பல்கலையும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: ராஜேஸ் (கனடா)



இப்பத்திரிகை கொழும்பு [illegible] தினமுரசு பதிப்பகத்தாரால் [illegible] அச்சகத்தில் ஆகஸ்ட் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.